KALKI 23.4.89 ரூ. 2.

கல்கி




PONDS
PONDS
Sandal Talc
PONDS Sandal Talc
பொன் நகைகள்
மின்னிட... சந்தன
நறுமணம் கமழ்ந்திட...
இனிய உணர்வுகள் மனதில்
மலர்ந்திடும் கணங்கள். உங்கள்
மேனியில் பொன் நகைகள்
மின்னிட, தூய சந்தனத்தின்
நறுமணம் கமழ்ந்திட இதுவரை
அனுபவித்தறியா உணர்வுகளால்
உள்ளம் பூரிக்கிறது; பெண்மை
உங்களிடம் பூரண பொலிவு
பெறுகிறது.
அரிய நறுமணம்.
மதிப்பில் பொன்னைப்
போல் உயர்ந்தது.
பாண்ட்ஸ்
சாண்டல்
டால்க்

என்.டி.ஆரின் ஆட்சியை அசைக்க முடியுமா?



— ஒரு நேரடி ரிப்போர்ட்

ஆந்திர சட்டசபையில் பட்ஜெட் கூட்டத் தொடர் நடக்கவிருந்த சமயம். இரகசியமாக இருந்திருக்க வேண்டிய பட்ஜெட் விவரங்கள் சில பத்திரிகைகளில் வெளிப்பட்டு, விவாதத்திற்குரியனவாகி விட்டன. மந்திரி சபை பொறுப்பேற்கும் போது இரகசியக் காப்புறுதிப் பிரமாணம் எடுத்துக் கொண்டவர்கள் அதைக் காப்பாற்றவில்லை; எனவே அதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று அமைச்சரவையில் இருந்த முப்பத்தியொரு அமைச்சர்களும் பதவி விலக வேண்டும் என்றார் என்.டி.ஆர். முதலமைச்சர் தவிர மற்ற அனைவரும் மந்திரி பதவியைத் துறந்தார்கள். அதிலிருந்துதான் ஆந்திர அரசியல் சூடுபிடிக்க ஆரம்பித்தது. பட்ஜெட் வெளியானதற்கு எல்லா மந்திரிகளும் தார்மீகப் பொறுப்பு ஏற்க வேண்டும் என்றால், முதலமைச்சரான இவரல்லவோ முதலில் பதவி விலகியிருக்க வேண்டும் என்று முதல் கேள்வி எழுந்தது.

என்.டி.ஆருக்கு இரண்டு வகை ஜனங்களின் ஆதரவு உண்டு. ஆந்திர மாநிலக் கடற்கரையோர மாவட்டங்களான கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி, பிரகாசம் போன்ற இடங்களில் கம்மா, காப்பு மற்றும் ரெட்டி வகுப்பைச் சேர்ந்த விவசாயிகள் அதிகம். ராமாராவ் கம்மா வகுப்பைச் சேர்ந்தவர் என்ற முறையில் அவருக்கு இவர்களுடைய ஆதரவு இருந்தது. மேற்குப் பக்கம் இருப்பவை வறட்சி மாவட்டங்கள் எனப்படும் தெலுங்கானா பகுதிகள். இங்கு ஏழை ஹரிஜன மக்கள் அதிகம்.

என்.டி.ஆர். பதவியேற்றவுடனேயே மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களைப் பற்றி அதிக அளவில் அறிவித்துச் செயல்படத் துவங்கினார். இவை பாமர மக்களுக்காகச் செயல்பட்டதால் தெலுங்கானா மாவட்டங்களில் என்.டி.ஆருக்கு அசைக்க முடியாத ஆதரவு பெருகியது. இப்போதும் வேறு யாரும் அந்த மாவட்டங்களில் ஆதரவு பெற முடியாது.

ஆனால் என்.டி.ஆர். தம்முடைய இனமான கம்மா வகுப்பினருக்குத்தான் அதிகம் செய்கிறார் என்ற புகார் ஒன்று கிளம்பியது. தவிரவும் நீண்ட கால விவசாய நலத் திட்டங்களோ, தொழிலமைப்புத் திட்டங்களோ செயல்படுத்தப்படவில்லை

"ஜனநாயகவாதி போல வேஷம் போடும் சர்வாதிகாரி என். டி. ஆர்.... அதனால்தான் புதுக்கட்சி" என்கிறார் ஜானா ரெட்டி.



"என்.டி.ஆரிடம் ஜனநாயகப் பண்பு கிடையாது!"

—பாகாரெட்டி பேட்டி



ஆந்திராவிலும் இ. காங்கிரஸுக்குள் ஏகப்பட்ட உட்பூசல்கள் உண்டு. சஞ்சீவ ரெட்டி, பிரம்மானந்த ரெட்டி, சென்னா ரெட்டி போன்ற சக்திவாய்ந்த காங்கிரஸ் தலைவர்கள் இந்தத் தலைமுறையில் தோன்றவே இல்லை. இருக்கும் நாலைந்து தலைவர்களுக்குள் யார் நெ. ஒன் என்பதில் தகராறு. எனினும் உற்சாகமாக அடிமட்ட நிலையில் வேலை செய்ய ஒரு புதிய தொண்டர் படையைத் திரட்டியிருக்கிறார் ஆந்திர இ. காங்கிரஸ் பொதுச் செயலாளரான அனுமந்த ராவ். 'இந்திரா விஜய ரதம்' ஒன்றை நிர்மாணித்து நாட்டின் கிராமப்புறங்களில் எல்லாம் ஊர்வலங்களை நடத்தி மக்களிடையே ஓர் எழுச்சியை ஏற்படுத்த முயன்று கொண்டிருக்கிறார்.

பிரதான எதிர்க்கட்சியான இ. காங்கிரஸின் தலைவர் பாகா ரெட்டி கூறுகிறார்:—

"டில்லியில், இவர்கள் ஜனநாயகமே இல்லை, பரம்பரை கட்சி என்றெல்லாம் சொல்கிறார்களே. இவர்கள் கதை என்ன வாழுகிறது? என்.டி.ஆர். தம் குடும்பத்தவருக்கு நிறையப் பதவிகளைக் கொடுக்கிறார் என்பது இந்தியா முழுக்கத் தெரிந்த விஷயம் தான். ஜனநாயகப் பண்பு இவர்களுக்குக் கிடையாது என்பதை ஒரே விஷயத்தைக் கொண்டு நான் நிரூபித்து விடுவேன்.

"நாங்கள் (இ. காங்கிரஸ்) ஆட்சியில் இருந்த போது ஆண்டிற்கு நூறு நாட்கள் சட்டசபை கூட்டத் தொடர் நடக்கும். ஆனால் இப்போதோ வருடத்திற்கு முப்பத்தி மூன்று நாட்கள்தான் நடக்கிறது! இத்தனை குறுகிய காலத்தில் அவர்கள் சட்டங்களை இயற்றும் வேகம் இருக்கிறதே, அசுர வேகம்தான்! கையிலே இருக்கும் மெஜாரிட்டியை வைத்துக் கொண்டு சட்டங்களை அவசரம் அவசரமாக இயற்றி விடுகிறார்கள். ஆனால் இவற்றில் மிகப் பெரும்பாலானவற்றை எதிர்த்து நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்படுகின்றன. இவர்கள் இயற்றிய பல சட்டங்களை ஆந்திர உச்ச நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்திருக்கின்றன.

"தொலை நோக்கோடு அரசுத் திட்டங்கள் வகுப்பதில்லை. 'மக்கள் நலத் திட்டங்கள் நிறைய அமுல் செய்கிறேன்' என என்.டி. ஆர். தம்பட்டம் அடித்துக் கொள்கிறார். ஆனால் இவற்றில் பெரும்பாலானவைக்கு மத்திய அரசு மானியம் வழங்குகிறது. ஆனால் முதல்வரோ எல்லாவற்றிற்கும் முதலில் 'தெலுங்கு' என்ற பேரைச் சேர்த்துக் கொண்டு ஏதோ இவருடைய அரசே கொடுத்தது போல ஒரு பிரமையை உண்டு பண்ணுகிறார்.

அவருடைய மேஜையில் ஃபைல்கள் தேங்கிக் கிடக்கின்றன. அவர் முழுமையான அரசியல்வாதியாகச் செயல்பட்டால்தானே? இது பார்ட்டைம் ஜாப்தான் அவருக்கு. 'விசுவாமித்திரர்' சினிமா எடுப்பதில் தீவிரமாக இருக்கிறார் அவர்."

சிரிக்கிறார் பாகா ரெட்டி.

என்ற சர்ச்சையும் கிளம்பியது. இதனால் இதுவரை என்.டி.ஆரை ஆதரித்து வந்த ரெட்டி மற்றும் காப்பு இனத்தவர் என்.டி. ஆரை எதிர்க்கத் தொடங்கினார்கள்.

முப்பத்தியொரு மந்திரிகளை என்.டி. ஆர். விலக்கியவுடனே அவர்கள் இரண்டு விதமாகச் செயல்படத் தொடங்கினார்கள். ஏற்கெனவே மந்திரி சபையில் இருந்து நீக்கப்பட்ட என். சீனிவாசலு ரெட்டி 'சீனய்ய சேனா' என்ற புதிய இயக்கத்தை ஆரம்பித்திருந்தார். இவர் சந்தடி சாக்கில் எம்.எல்.ஏ.

பதவியை ராஜினாமாச் செய்து விட்டு இ. காங்கிரஸில் சேர்ந்து விட்டார்! 'இதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள், இ. காங்கிரஸின் கை இதற்கெல்லாம் பின்புறம் செயல்படுகிறது என்பதை' என்று குற்றம் சாட்டுகிறார்கள் தெலுங்கு தேசக் கட்சியினர்.

முன்னாள் அமைச்சர்களான ஜானா ரெட்டி, கே. ஈ. கிருஷ்ணமூர்த்தி, வசந்த நாகேஸ்வரராவ் மற்றும் இரண்டு எம்.எல்.ஏ.க்களும் சேர்ந்து ஒரு புதிய மாநிலக் கட்சியைத் துவக்கத் திட்டமிட்டுள்ளனர். இதில் ஜானா ரெட்டி மிக ஜாக்கிரதையாகவே யோசித்துச் செயல்படும் சாமார்த்தியக்காரர். இவர் நலகொண்டா மாவட்டத்தைச் சேர்ந்த, அதிருப்தியடைந்துள்ள ரெட்டி வகுப்பிலிருந்து வந்தவர் என்பது முக்கியமான விஷயம். எனவே அங்கே தெலுங்கு தேச வேர்களை அசைக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார். 'காங்கிரஸ் தலைவர்கள் மத்தியில் இருப்பவர்களுக்கு ''எஸ் ஸார்'' போடுபவர்களாக ஆந்திராவில் மட்டுமல்ல, எல்லா இடத்திலும் செயல்படுகிறார்கள் என்பதை மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே இ. காங்கிரஸில் சேருவது மக்களிடையே எடுபடாது' என முடிவு செய்து ஜானா ரெட்டி தனியான பிரதேசக் கட்சியை ஆரம்பிக்க முடிவு செய்திருக்கிறார்.

''நீங்கள் எதற்காகத் தனிக் கட்சி ஆரம்பிக்கிறீர்கள் என்பதைச் சொல்லுங்களேன்'' என்ற போது ஜானா ரெட்டி கூறினார்:

''என்.டி.ஆர். ஒரு சர்வாதிகாரியாக இருந்தால் கூட ஒப்புக் கொள்ளலாம். அவர் ஒரு ஜனநாயக சர்வாதிகாரி! அதாவது ஜனநாயகவாதி போல வேஷம் போடும் சர்வாதிகாரி! மக்களுக்கு உண்மையான நலனை அவர் செய்யவில்லை. எனவேதான் மக்களுக்கு உண்மையான சேவை செய்யத் தனிக் கட்சி துவங்குகிறோம்'' என்றார்.

மூன்றாவது அணி என்று தங்களை வர்ணித்துக் கொள்ளும் இவர்கள் இப்போது மாநிலம் முழுதும் சுற்றுப்பயணம் தொடங்கியுள்ளனர்.

இதனாலெல்லாம் ஆளும் கட்சி பயந்து விட்டதாகத் தெரியவில்லை. அவர்களும் தங்களுடைய எம்.எல்.ஏ.க்களையும், கட்சித் தலைவர்களையும் 'ஜன சைதன்ய யாத்ரா' என்ற பெயரில் எல்லா ஊர்களுக்கும் அனுப்ப ஆரம்பித்திருக்கிறார்கள்!

மக்களவைத் தேர்தல்கள் டிசம்பரில் நடக்க வேண்டி இருப்பது போலவே, ஆந்திர மாநில சட்டசபைத் தேர்தல்கள் மார்ச்சில் நடக்க வேண்டும். இந்த இரண்டையும் ஒன்று சேர்த்து டிசம்பரிலேயே மத்திய, மாநிலத் தேர்தல்களை என். டி. ஆர். நடத்தி விடலாம் என்று அரசியல் விமர்சகர்கள் பேச ஆரம்பித்து இருக்கிறார்கள்.

அத்தனை அமைச்சர்களை ராஜினாமாச் செய்ய வைத்த போதிலும், ஆட்சி கவிழவில்லை; அந்த அபாயம் கூட இல்லை! மீண்டும் புதியதாக இருபத்தைந்து அமைச்சர்களைப் பதவியேற்கச் செய்து, மாநில ஆட்சியை நடத்திக் கொண்டு இருக்கிறார். இந்த அளவுக்கு ஆதரவு இருக்கும் போது, உட்கட்சிப் பூசல்கள், கட்சியிலிருந்து வெளியேறியவர்களின் ஏசல்கள் ஆகியவை அதிக அளவில் பாதிப்பை ஏற்படுத்துவதற்கு முன்பு, சட்டசபைத் தேர்தல்களையும் நடத்தி மெஜாரிட்டி பெற்று விட வேண்டும் என்று அவர் நினைக்கலாம்.

'இந்திரா விஜய ரத'த்தின் மூலம் மக்களிடையே ஓர் எழுச்சியை ஏற்படுத்த முயல்கிறார் அனுமந்தராவ்.



இதற்கு மறுபுறமாக இ. காங்கிரஸூம் நிலைமையைத் தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. தெலுங்கு தேச எம்.பி. பெஞ்சலய்யா அண்மையில் ராஜினாமா செய்திருக்கிறார். தெலுங்கு தேச உட்கட்சிப் பூசல்கள் தங்களுக்குச் சாதகமான சூழலைத் தேர்தலில் உருவாக்கும் என்று இ. காங்கிரஸ் கருதுகிறது. மேலும், என்.டி.ஆர். தன்னைத் தேசியத் தலைவராகக் காட்டிக் கொள்பவர். மத்திய, மாநிலத் தேர்தல்களைச் சேர்த்து வைத்தால் அவர் ஆந்திராவில் மட்டுமே முழுமையாகக் கவனம் செலுத்த முடியாது. இந்தியா முழுக்கப் பிரசாரம் செய்யக் கிளம்புவார். இதனாலும் தாங்கள் ஓரளவு பயன்பெற்று விடலாம் என்று இ. காங்கிரஸ் தலைவர்கள் கணித்திருக்கிறார்கள்.

ஆக மொத்தம், இப்போதே தேர்தல் ஜுரம் ஆந்திராவில் ஆரம்பித்து விட்டது!

"என்னிடம் சர்வாதிகாரம் என்ற பேச்சுக்கே இடமில்லை!"

— என். டி. ஆர். பேட்டி



ஆந்திர மாநில முதல்வர் என். டி. ஆரை விடியற்காலை ஐந்து மணிக்குச் சந்தித்த போது —

"இந்த இனிய காலைப் போதில் முதன் முதலாக உங்கள் பத்திரிகையின் மூலமாக நாட்டுக்கு ஒரு செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். அதை முதலில் வெளியிடுங்கள். தேசிய அளவில் பயன்தரத்தக்க 'என். டி. ஆர். டிரஸ்ட்' என்ற ஒன்றை நிறுவப் போகிறேன். இது ஏழை — குறிப்பாக ஏழைப் பெண்களுக்கு உதவும் வகையில் அமைக்கப்படும். தேசிய அளவில் மிகச் சிறந்த ஹெல்த் இன்ஸ்டிடியூஷன் நிறுவப்படும். இதில் மகப்பேறு மற்றும் மகளிர் சம்பந்தப்பட்ட புற்றுநோய் ஆராய்ச்சிகளும் மற்றும் மருத்துவ சிகிச்சைகளும் அளிக்கப்படும். இது சம்பந்தமான பூர்வாங்கத் திட்டங்களையெல்லாம் நான் யோசனை செய்து முடித்து விட்டேன். இந்தச் செய்தியை கல்கிக்குத்தான் முதலில் சொல்கிறேன்" என்றார் என். டி. ஆர். உணர்ச்சிபூர்வமாக.

"உங்கள் மேல் எல்லாருமே பொதுவாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். நீங்கள் ஜனநாயகவாதியாகச் செயல்படுவதில்லை. சர்வாதிகாரியாக நடக்கிறீர்கள். அதுவும் ஜனநாயகவாதி போல வேஷம் போடும் சர்வாதிகாரி என்று..."

கோபத்தோடு குதித்து எழுந்தார் என். டி. ஆர்!

"யார் அப்படிச் சொல்வது? ஜனநாயகவாதி என்றால் என்ன? முதலில் ஜனநாயகம் என்றாலே இவர்களுக்கு என்னவென்று தெரியுமா? ஒரு கட்சி, ஒரு கட்டுப்பாடு என்றில்லாமல் எங்கே, யார், எது வேண்டுமானாலும் பேசுவதுதான் ஜனநாயகமா? சுதந்திரமா?

"எங்கள் கட்சியில் சர்வாதிகாரம் நுழைய எது இடம்? இது திறந்த புத்தகம். ஒவ்வொரு மாவட்ட அளவிலும் கட்சிக் குழுக்கள் உள்ளன. அவற்றின் துணைக் குழுக்கள் ஒவ்வோர் ஊரிலும் செயல்படுகின்றன. இவை அனைத்திற்கும் மேலாக ஓர் அரசியல் நிர்வாகக் குழு செயல்பட்டு வருகிறது. தலைவர், துணைத் தலைவர், செயலாளர், பொருளாளர் என உண்டு. கிரமமாகக் கட்சிக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. முறையாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கட்சியில் தேர்தல் நடைபெறுகிறது. இதைவிட ஜனநாயக ரீதியாகச் செயல்படும் ஒரு கட்சி உண்டா?

"பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை தவறாமல் மந்திரிசபைக் கூட்டத்தை நடத்திவிடுகிறேன். இதுபோல வேறு எந்த மாநிலத்திலாவது மந்திரிசபைக் கூட்டம் நடக்கிறதா? சொல்லுங்கள், பார்க்கலாம்!

"இப்போது வெளியே நின்று பேசுகிறார்களே, இவர்கள் ஆட்சியில் குறை என்றால் மந்திரிசபைக் கூட்டங்களில் சொல்லியிருக்கலாமே? அதேபோல, கட்சியிலே மனவேறுபாடு என்றால் கட்சிக் கூட்டங்கள் நடக்கும் போது சொல்லியிருக்கலாமே? அதை விட்டுவிட்டு, இன்று மந்திரிசபையிலிருந்து விலக நேர்ந்தது என்ற ஒரே காரணத்திற்காக வெளியே சென்று எதை வேண்டுமானாலும் பேசுவதா என்ன...? இதெல்லாம் மக்களிடம் எடுபடாது..."

"மத்திய — மாநில உறவில் அடிக்கடி உரசல்கள் ஏற்படுகின்றனவே...?"

"மத்திய அரசு எதைச் செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டும். நம்முடைய தேசத்தின் மூளைகள் ஏற்றுமதியாகிக் கொண்டிருக்கின்றன. மிகச் சிறந்த மேதைகள், விஞ்ஞானிகள் வெளிநாடுகளுக்குப் போய்க் கொண்டு இருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் அறிவு வறட்சி ஏற்படக் கூடிய

அபாயம் ஏற்பட்டுள்ளது. அதைத் தடுக்க மத்திய அரசு ஏதாவது செய்ததா? அண்டை நாடுகளுடனான பிரச்னைகளைத் தீர்ப்பதில் ஏதாவது வெற்றியடைந்ததா? ஏற்றுமதி — இறக்குமதிக் கொள்கைகளும் சரியாக இல்லை. இதையெல்லாம் கவனிப்பதை விட்டுவிட்டு மாநில விவகாரங்களில் தலையிடுவதை நான் அறவே கண்டிக்கிறேன்.''

''மத்திய — மாநில உறவுகளும் மாநிலங்களிடையே உறவு முறைகளும் எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?''

''மாநிலங்கள் அண்ணன் — தம்பி போன்றவர்கள். நதிநீர்ப் பங்கீடு, எல்லைப் பிரச்னை போன்றவற்றில் மத்திய அரசு தலையிடக் கூடாது. நாங்களே தீர்த்துக் கொள்ளும் அதிகாரத்தை வழங்க வேண்டும். மத்திய அரசு நிறைய அதிகாரங்களைத் தன்னிடம் குவித்துக்கொண்டிருக்கிறது. அவற்றை மாநிலங்களுக்கு வழங்கி ஜனநாயகத்தைப் பலப்படுத்த வேண்டும். இவர்கள் இப்படி நடந்து கொள்ளாததுடன் என்னைப் போய் சர்வாதிகாரி என்கிறார்களே...!''

''கவர்னருக்கும் உங்களுக்கும் இடையேயான மோதல்கள் இப்போது குறைந்திருப்பது போல் தோன்றுகிறதே?''

''கவர்னர் சமீப நாட்களில் என்னைப் புரிந்து கொண்டிருக்கிறார் என நினைக்கிறேன். அதனால்தான் மோதல்கள் இல்லை. நான் எப்போதும் இருப்பது போலத்தான் இருக்கிறேன்...''

''பிரதமர் ராஜீவ்காந்தி எதிர்க்கட்சிகளைக் குற்றம் சாட்டுகிறார்; 'அவர்களுக்கு எங்கள் ஆட்சியைக் கவிழ்ப்பதுதான் நோக்கம்' என்கிறார்....''

''அவருடைய ஆட்சியில் நடக்கும் ஊழல்களை நாங்கள் மக்களிடம் எடுத்துச் சொல்கிறோம். 'இப்படிப்பட்டவர்களின் ஆட்சி உங்களுக்குத் தேவையா?' என்று மக்களிடம் கேட்கிறோம். இதில் என்ன தவறு? இப்படி மக்களிடம் நாங்கள் பேசக் கூடாது என்று கூற இவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?''

''நீங்கள் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்களை நிறையச் செயல்படுத்துகிறீர்கள். ஆனால் தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்துவதில்லை என்கிறார்களே...?''

''இன்றைக்கு நம்முடைய நாட்டில் பசியாலும், பட்டினியாலும் மக்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அப்படியே விட்டுவிட்டு, 'அதோ பார், இன்னும் இருபது வருடங்களிலே ஓர் அனல் மின் திட்டம் வருகிறது பார்; லட்சக்கணக்கான மக்களுக்கு வேலைவாய்ப்பு வரும் பார்!' என்று சொல்வதா? எனக்கு முக்கியம் ஏழை மக்களின் நல்வாழ்வுத் திட்டம்தான். அப்புறம்தான் மற்றவை எல்லாம்...''

பேட்டி, கட்டுரை: **டி. ஆர். ரமேஷ்**

புகைப்படங்கள்: **யோகா**

சினி ஜூஸ்



வழக்கமாய்ப் போலீஸ்காரர்களைக் கேலிக்குரியவர்களாகத்தான் சினிமாக்களில் காட்டுவார்கள். சில காலமாய், போலீஸ்காரரை வைத்து, காமெடி சீன் வைத்தால், ரொம்ப ஜாக்கிரதையாய் இருக்கிறார்கள். ''சென்சாரில் வெட்டச் சொல்லி விடுவார்கள்! எதற்கு வீண் வேலை?'' என்று வெளிப்படையாய்ச் சொல்கிறார்கள். காரணம், இப்போது சென்சார் போர்டில் ஓய்வு பெற்ற ஒரு போலீஸ் அதிகாரி இருக்கிறார். அவர், பொன். பரமகுரு.



குடும்பக் கட்டுப்பாட்டை மையமாய் வைத்து, டைரக்டர் மகேந்திரன் ஒரு டெலிவிஷன் படம் தயாரித்திருக்கிறார். விரைவில் அதை டி.வி.யில் பார்க்கலாம். மகேந்திரன் பற்றிய இன்னொரு நியூஸ். பாண்டியராஜன் தயாரிக்கும் ஒரு படத்தை இயக்கப் போகிறவர் மகேந்திரன். அடுத்தது தி. ஜானகிராமனின் 'மோகமுள்' நாவலையும் படமாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். என்ன மிஸ்டர் மகேந்திரன்! மறுபடியும் ஓர் உதிரிப்பூப் பூக்குமா? முள்ளும் மலருமா? ஆல் தி பெஸ்ட்!



பாண்டியராஜன் வெற்றிலை போடும் போது காம்பைக் கூடக் கிள்ளுவதில்லை. ஏன் என்று கேட்டால், ''என்னங்க நீங்க! வெற்றிலைக் காம்பின் காரச் சுவை எனக்கு ரொம்பப் பிடிக்கும். முன்னேயெல்லாம், வெற்றிலைக் காம்பை மட்டுமே கிள்ளித் தின்னுவேன்'' என்கிறார்.



செக்ஸ் அப்பீல் நிறைய உடைய நடிகைகளைப் பட்டியல் போட்டால், முதலிடம் பெறுவார் ஸ்ரீவித்யா. ஸ்ரீவித்யாவைச் சந்திக்க ஒரு பத்திரிகையாளர் போயிருந்தார். கைகூப்பி வணக்கம் கூறிய ஸ்ரீவித்யா, ''ஐயோ, உங்க கால்கிட்டே.... என்ன அது?'' என்றபடி சீரியஸாய்க் கேட்க, பத்திரிகையாளர், ''எங்கே...? எங்கே...?'' எனக் கேட்டபடி பதறி நகர, ''ஏமாந்தீங்களா? இன்னிக்கு என்ன தேதி?'' என்று ஸ்ரீவித்யா ஒரு போடு போட, பத்திரிகையாளர் ஙி... ஙி... ஙி......



பாரதிராஜாவின், என் உயிர்த் தோழன் படத்தின் ஹீரோவாக அறிமுகமாகிறார் ஒரு புதுமுகம். இயற்பெயர் பாபு. அவருக்குப் புதுத் திரைப் பெயர் சூட்டப்படவில்லை. வேதம் புதிது படத்திலிருந்து, பாரதிராஜாவிடம் உதவியாளராய்ப் பணியாற்றி வந்த பாபுவுக்கு, 'என் உயிர்த் தோழனி'ல் ஹீரோ சான்ஸ் அடித்துள்ளது. பாரதிராஜா தம் புதுப் படத்துக்கு ஹீரோ வேட்டையில் பலரையும் டிரை பண்ணிய போது, பாபுவுக்கும் மேக்கப் டெஸ்ட் போட்டுப் பார்த்து, பிடித்துப் போய் ஓ.கே. சொல்லி விட்டார். பாரதிராஜா, தன் உதவியாளர்களை, ஹீரோவாக்குவது, இது முதல் தடவை இல்லை. முந்தைய உதாரணம் பாக்யராஜ்.

— ஜூலி



புதிய பாதை

தன் குல மூலம் அறியாத குப்பைத் தொட்டிக் குழந்தை ஒன்று எப்படியெல்லாமோ வளர்ந்து நிமிர்ந்து, குப்பத்து ரௌடியாகி, கொலை, களவு, கற்பழிப்பு, கடத்தல்களைக் குல்கந்து சாப்பிடுகிற மாதிரி செய்து முடித்து, குட்டிச் சுவர்களுக்கிடையே குடியிருப்பு வைத்துக் கொண்டு... இப்படிக் கொடூரனாய் வாழ்ந்த ஒருவன், அவனால் கற்பழிக்கப்பட்ட ஒரு பெண்ணினால் எப்படி மனிதனாய் மாறுகிறான் என்பதைத் திரைக்கதை போதிய சமுதாயப் பிரக்ஞையுடன் விளக்குகிறது.

தப்பு வழியில் பெற்றுக் கொண்ட மகனை ஆலமரத்துப் பிள்ளையார் முன் போட்டு விட்டுப் போக முனைந்த ஒரு கன்னித் தாயை, வெறியோடு கூந்தலைப் பற்றி இழுத்து நிறுத்தி, ஊரார் முன் தன்னிலை விளக்கம் தரும் அந்த ஆவேசக் கட்டத்தில் உலுக்கி விடுகிறார் பார்த்திபன். 'இப்ப நியாயம் கேட்க வந்துட்டிங்களே, அன்னிக்கு இதே மாதிரி ஒரு புள்ளை குப்பைத் தொட்டியிலே கிடந்த போது என்னை ஏதுன்னு கேட்டுக்க எத்தனை பேர் வந்தீங்க?'

எதிர் வீட்டு ஜன்னல் (சீதா) அவருக்கு லெட்டர் எழுதுவதும் அதைப் பார்த்து ஆவேசப்பட்டுப் பாய்ந்து, 'ஆறடி ஒசரத்திலே கட்டுமஸ்தான ஒரு ஆம்பிளை கிடைச்சா விட்டு வைக்க மாட்டீங்களே, லவ் பண்ண ஆரம்பிச்சுடுவீங்களே! இந்தாங்கடி, இந்த மாதிரி வேலையெல்லாம் நம்ம கையிலே வ ச் சு க் கா தீ ங் க. பின்னிப் பிரிகட்டித் தொங்க விட்டுடுவேன்' என்று முறைப்புக் காட்டும் மூர்க்கம் ஒரு பக்கமிருந்தாலும் பாக்யராஜின் நேர் வாரிசு என்பதை ஆங்காங்கே செக்ஸ் குறும்பில் காட்டியிருக்கிறார்.

முந்தைய 'பா'க்களின் அசர வைக்கும் டைரக்ஷன் முத்திரைகள் வெகு சுபாவமாய் விழுந்திருக்கின்றன. குறிப்பாக அந்த வில்லன் நாசரின் கையாள் ஒருத்தன், வெடிகுண்டு வைத்த சாப்பாட்டுத் தூக்கை, பார்த்திபனுக்கு வந்த சாப்பாட்டுத் தூக்குக்குப் பதிலாய் மாற்றி வைத்துவிட்டு, 'அந்தத் தூக்கைத் திறந்தாப் போதும், உடனே குண்டு வெடிச்சு ஆள் குளோஸ்' என்று சொல்லி விட்டுப் போனதிலிருந்து உள்ளபடி அந்தக் குண்டு வெடிக்கும் வரை உள்ள நீண்ட இடைவெளியில் நெருப்பிலும், நீரிலுமாய் மாற்றி மாற்றிப் போட்டு நாற்காலி முனைக்கு நகர்த்திவிடும் சஸ்பென்ஸ்!

சீதா படு பாந்தம். அந்தக் கோமகவரர் வீட்டுப் பெண் குப்பத்துக்குக் குடிபெயர்வானேன்? அந்த சஸ்பென்ஸ் உடையும் போது, அவர் அனுதாபத்தையும் அவர் நினைப்பது நிறைவேற வேண்டும் என்ற அக்கறையையும் பெறுகிறார்.

தன் வீட்டுக்கும் ரேஷன் கார்டு வேண்டும் என்று கணக்கெடுக்க வந்தவர்களிடம் கேட்க, அவர்கள் ஏற்கெனவே அவர் சம்சாரத்தண்டை கார்டு கொடுத்தாச்சு என்று சொல்ல, அப்படிச் சொன்னவர் எதிர் வீட்டுப் பெண்தான் என்று தெரிந்து கொண்டதும் பார்த்திபன் அந்த வீட்டையே துவம்சம் பண்ணும் வெறியுடன் பாய்ந்து கலைத்துப் போட, ஊர் கூடி, நியாயம் கேட்க, சீதா முன் வந்து, 'என்னைக் கெடுத்தவர் இவர்தான். அப்போ இவரை என் புருசன்னு சொல்லிக்கறதிலே என்ன தப்பு? என்னமோ அப்பன் பேர் தெரியாம நான் குப்பைத் தொட்டியிலே கிடந்தப்ப யார் நியாயம் கேட்டதுன்னு உங்களைக் கேட்டாரே, அதே மாதிரி என் வயிற்றுப் பிள்ளையையும் போட்டுட்டுப் போகச் சொல்றாரா இவர்...?' என்கிற போக்கில் விளாசித் தீர்க்க, அவர் தலை குனியும் அந்தக் கட்டம் படு சூப்பர்.

இத்தனைக்கும் அது வெறும் பாவலா தான் என்று நாக்கை நீட்டி ஆட்டி ஆயா மனோரமாவிடம் சொன்னாலும் அந்தச் சுறுசுறு குறையவில்லை. அது சரி, மனோரமா 'காமிக்' காமல் இப்படியொரு குணச்சித்திர பாசம் காட்டியிருப்பது வித்தியாசமில்லை?

படு யதார்த்தமாய் ஒலிக்கும் மெட்ராஸ் பாஷை உடம்பைப் பிடித்து விடுகிற மாதிரியான ஓர் இதம்தான்.

சற்றே கவிதா விலாசத்தைக் கை விட்டுத் தத்தகாரத்துக்கு ஏற்ற கொச்சை மொழிக்கு வைரம் மங்கியிருந்தாலும் இடத்துக்கு ஏற்ற தரத்தில் அமைந்திருப்பதற்குப் பாராட்டுக்கள்.

வயணமாகப் பேசி, வாகாய் வளைந்து நெளியும் அந்தச் சிறுவன் – பார்த்திபனின் கையாள் மட்டுமல்ல; சந்திரபோஸின் ஜால்ராவும் கூட. அமர்க்களமான பறையொலி!

நாலாவது 'பா' அடியெடுத்து வைத்திருக்கிறார்.

சபாஷ் பார்த்திபன்!

— பி. எஸ். எஸ்.


உங்கள் நம்பகமான ஃபாரெக்ஸ்
இப்போது, சுவையிலே சிகரம்!
உங்கள் குழந்தைக்கு நான்கு மாதம் ஆகும்போது அவனுக்கு புதிய சுவைமிக்க ஃபாரெக்ஸ் துவக்குங்கள். 3 முதல் 4 தேக்கரண்டி வெதுவெதுப்பான நீரில் ஒரு தேக்கரண்டி ஃபாரெக்ஸ் கலந்து கொடுங்கள். ஃபாரெக்ஸ் சுவை மிக்கது, பாலாடை மிக்கது, முன்னைவிட ஊட்டச்சத்து மிக்கது.
Delicious
Farex
CEREAL WITH MILK
• பாலாடை மிக்கது
• ஊட்டச்சத்து மிக்கது
ஃபாரெக்ஸ்®-
சுவையுடன் வளரும் வழி.





கல்கி
1989 ஏப்ரல் 23
மலர் 47 இதழ் 38
சுக்ல சித்திரை 10

மூப்பனாருக்குக் கல்தா!

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது என்று தீர்மானித்ததும் காங்கிரஸ் தொண்டர்கள் மட்டுமின்றி, அக்கட்சியில் அங்கத்தினர்களாய் இல்லாத, ஆனால், அதன் பாரம்பரியச் சிறப்பு காரணமாக அதனிடம் பற்றும் பாசமும் கொண்ட பல்லாயிரக்கணக்கான மக்களும் அகமகிழ்ந்து போனார்கள். 'திராவிடக் கட்சிகளின் முதுகிலேறி காங்கிரஸ் சவாரி செய்த காலம் மலையேறி விட்டது; இனி அது சுயமாகத் தன் கால்களிலேயே தலைநிமிர்ந்து நிற்கும்; இந்தத் தேர்தலில் ஆட்சிக்கு வர முடியா விட்டாலும் நல்லதோர் எதிர்க்கட்சியாகச் செயல்படும்; தொடர்ந்து, உள்ளாட்சித் தேர்தல்கள், நாடாளுமன்றத் தேர்தல்கள் ஆகியவற்றில் பங்கேற்றுத் தன் செல்வாக்கை வளர்த்துக் கொள்ளும்; அடிமட்டத்தில் கட்சியின் அஸ்திவாரத்தைப் பலப்படுத்தும்; உட்கட்சி ஜனநாயகம் தழைக்கும்' என்றெல்லாம் எதிர்பார்த்தோம்.

காங்கிரஸ் தமிழ்நாட்டில் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தால் அது ஓர் அற்புதமாக இருந்திருக்கும். ஆனால் அற்புதங்கள் அடிக்கடி நிகழ்வதில்லை. எதிர்பார்த்தபடியே காங்கிரஸ் ஆட்சி அமையவில்லை. அது வெற்றி பெற்ற இடங்களும் குறைவுதான். அதனை 'இமாலய சாதனை' என்று கூற முடியாது. ஆனாலும் இருபதாண்டுகளுக்கு மேலாகத் தனித்தன்மையை அடியோடு இழந்து நின்ற ஒரு கட்சி, ஒரு சில மாதங்களே முயன்று, இந்த மட்டிலும் வெற்றி பெற்றதானது பொதிகைமலை அளவுக்கேனும் ஒரு சாதனை தான். ஆனால் காங்கிரஸ் மேலிடம் அவ்வாறு நினைக்கவில்லை. இதனை 'மகத்தான தோல்வி' என்று வர்ணித்து, அதற்குக் காரணம் மூப்பனாரே என்பதாகவும் முடிவு கட்டி, அவரது ராஜினாமாவையும் ஏற்றுக் கொண்டு விட்டது! போகட்டும், யாரையாவது பலிகடா ஆக்க வேண்டுமானால் அது மூப்பனாராகவே இருந்து விட்டுப் போகட்டும். அதுகுறித்து அவர் கலங்குகிறவர் அல்ல. ஆனால் அவருக்குப் பதில் யாரை நியமிப்பது என்னும் போது, காங்கிரஸின் பல்வேறு கோஷ்டிகளில் இருப்பவர் அனைவரையும் அணைத்துச்





செல்லக் கூடிய ஒருவரை நியமித்து, ஒற்றுமையை வளர்க்க முயற்சி செய்திருந்தால் அது புத்திசாலித்தனமாக இருந்திருக்கும். ஆனால் தேர்தலுக்குப் பிறகு ஓர் அநாகரிக அவசரத்துடன் பகிரங்கமாக மூப்பனார் மீது பழிசுமத்திய ஒருவரைத் தமிழ்நாடு இ. காங்கிரஸ் தலைவராக்கியதன் மூலம், காங்கிரஸ் தலைமைப் பீடம் கட்சிக்குள் கோஷ்டிப்பூசல் வலுவடையச் செய்திருக்கிறது! இதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், ஜெயலலிதா சொன்னாராம், 'கூட்டணி என்று வந்துவிட்ட பிறகு ராமமூர்த்தியுடன் இணைந்து செயல்படுவது வசதியாக இருக்கும்' என்று! ஆக, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் யார் என்பதை நிர்ணயிக்கும் அதிகாரத்தைக் கூட ஜெயலலிதாவின் பாதகமலங்களில் சமர்ப்பித்தாகிவிட்டது! காங்கிரஸுக்கு இதைவிடப் பெரிய தலைகுனிவோ வெட்கக் கேடோ வேறு என்ன இருக்க முடியும்?

ராஜீவ் காந்தியின் கணிப்பு நமக்குப் புரிகிறது. 'பிளவுபட்ட அ. தி. மு. க. வுக்கு ஆதரவு இல்லை என்றோம்; இன்று அ. தி. மு. க. இணைந்து விட்டது. ஆதரவு தருகிறோம்' என்று கூட்டணியை நியாயப்படுத்தலாம். உள்ளாட்சித் தேர்தலில் அ. தி. மு. க. வுக்கு விட்டுக் கொடுத்துவிட்டு, நாடாளுமன்றத் தேர்தலில் அதிக இடங்களை இ. காங்கிரஸ் பெறலாம். தாமே மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடலாம்! ஆனால் அவருடைய இந்தத் திட்டம் பிசகிப் போகும். தமிழக எம். பிக்களின் ஆதரவு மட்டும் அவருக்குப் போதாது. வடமாநிலங்களில் அவரும் அவரது கட்சியினரும் சமீப காலமாகச் செல்வாக்கை அடியோடு இழந்து ஆட்டம் கண்டிருக்கின்றனர். எனவே ராஜீவ், ஆட்சியைத் திரும்பப் பிடிப்பது சந்தேகம். ஆனால் இந்தக் கூட்டணியினால் தமிழக இ. காங்கிரஸ், எஞ்சியுள்ள தனது கொஞ்ச நஞ்சப் பெருமையையும் செல்வாக்கையும் தனித்தன்மையையும் இழப்பது உறுதி!

போஃபோர்ஸ், ஃபேர்ஃபேக்ஸ், நீர்மூழ்கிபேரம், தாக்கர் அறிக்கை போன்ற பல ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமக்க முடியாமல் சுமந்து திணறிக் கொண்டிருக்கும் இ. காங்கிரஸ், இனி, சாராய சாம்ராஜ்ய ஊழல், என். ஆர். ஐ. ஊழல், பல மாடிக் கட்டட ஊழல் போன்ற அ. தி. மு. க. ஊழல்களையும் சேர்த்துச் சுமக்க வேண்டியிருக்கும்!

கட்சி என்று இருந்தால், அது ஆட்சி அமைக்க எண்ணுவதில் தவறில்லை. அதற்காகக் கூட்டணி அமைப்பதும் குற்றமில்லை. ஆனால் எம். ஜி. ஆர். நோய்வாய்ப்பட்ட நாளிலிருந்தே தொடர்ந்து சினிமா வசனம் பேசி, நாடக அரசியல் நடத்தி வரும் ஜெயலலிதாவிடம் தன்மானத்தையும், தனித்தன்மையையும் அடகு வைத்து விட்டு ஆட்சிக்கு வருவதைவிட, மத்தியிலோ, மாநிலத்திலோ அல்லது நகரமன்றத்திலோ கூட எதிர்க்கட்சியாகவே இருந்து வரலாம்! ஜனநாயகத்தில் ஆட்சிப் பணியைவிட முக்கியமானது எதிர்ப்புப் பணி என்பதை உணர்ந்து, அதனைச் செவ்வனே செய்து வந்தால், மக்கள், நாளடைவில் ஆட்சியைப் பரிசாக அளிப்பார்கள்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



* சொந்த நிலம்

ஜெயலலிதாவுக்கு தராசின் அறிவுரை என்ன?

* எம். ஏ. பாஷா, கடலூர்.

? இளநீரை ஸ்ட்ராவுடன் அருந்துவது, ஸ்ட்ரா இல்லாமல் அருந்துவது எதில் சுகம்?

! முன்னது சுலபம்; பின்னது சுகம். ஆனால் பயிற்சி வேண்டும்! ஸ்ட்ராவைத் தூக்கி எறியுங்கள். இரு கைகளிலும் இளநீர்க்காயை ஏந்துங்கள். குனிந்து துவாரத்தைச் சுற்றி அழுத்தமாக உதடுகளைப் பதியுங்கள். பின்னர் தலையையும் கைகளையும் ஒரே சமயத்தில் உயர்த்தி அண்ணாந்து நோக்குங்கள். வெயிலுக்குக் கண்களை மூடிக் கொள்ளுங்கள். இளநீர் களகளவென்ற ஓசையுடன் இறங்கி, வாயில் இன்சுவை ஊட்டும் போதே கடகடவென்று அதே வேகத்தில் தொண்டைக்குள் இறக்குங்கள். அந்தச் சுகமே சுகம்! ஆனால் மேலே வழிந்து சட்டையை நனைத்து விட்டாலோ வெட்கமோ வெட்கம்! அக்கம் பக்கத்தில் தெரிந்தவர் யாருமில்லை என முன்கூட்டியே உறுதிப் படுத்திக் கொள்வது புத்திசாலித்தனம்!

* கே. ஆர். தேவேந்திரன், வேலூர்.

? 'சட்டசபையில் ஜெயலலிதா மானபங்கப்படுத்தப்பட்டதை காமன்வெல்த் சபை வரை கொண்டு செல்வோம்' என்று ஹண்டே கூறுகிறாரே?

! நாட்டில் அரசியல் போகிற போக்கையும் அரசியல்வாதிகள் நடந்து கொள்கிற விதத்தையும் பார்த்து நாம் ஒரேயடியாகத் துயரத்தில் மூழ்கி விடாதிருக்க, அவ்வப்போது யாராவது ஜோக் அடித்து நம்மைச் சிரிக்க வைப்பதை வரவேற்கத்தானே வேண்டும்!

* ஆர். ஆறுமுகலிங்கம், மதுரை.

? தக்கர் கமிஷனா? டக்கர் கமிஷனா?

! எதிர்க் கட்சிகளுக்கு டாப் டக்கரான கமிஷன்! ஆளும் கட்சிக்கு மக்கர் கமிஷன்!

* பா. நாராயணன், சென்னை — 40.

? ராஜினாமாக் கடிதத்தை உணர்ச்சி வசப்பட்டு ஜெயலலிதா எழுதி விட்டதாக எஸ். டி. எஸ். கூறுகிறாரே?

! அடிக்கடி உணர்ச்சி வசப்படுகிறவர் நல்ல தலைவராக விளங்க முடியாது. உணர்ச்சிவசப்படும் போது சீரிய சிந்தனை செயல்படாது.

* ஆர். முரளி, ஹோசூர்.

? 'சினிமாவில் இதுவரை செய்தது கூலிக்குக் களை பிடுங்கியதும் குத்தகைக்குப் பயிர் பண்ணியதும்தான்' என்கிறாரே, பாலகுமாரன்?

! கூலிக்குக் களை பிடுங்கிய போது சரியாகச் செய்தார்; குத்தகைக்குப் பயிர் பண்ணக் கொடுத்த போது கெடுத்து விட்டார். போகட்டும், வளமான சொந்த நிலம் இருக்கும் போது ஏன் கவலை?



* தலையங்கக் கோரிக்கை

* ஜோக்



* நாற்றுக்கு நாறு





* இசை நயம்

* சுந்தர் சுந்தரி, கோவை.

? இந்த வருடம் வெயில் எப்படி?

! ஊட்டி, கொடைக்கானல் என்று போனால், நாளிதழைப் பார்த்து விட்டு, 'மெட்ராஸில் நூற்றி ஐந்து டிகிரியாம்! நல்ல வேளை தப்பினோம்' என்று பேசி மகிழலாம்; அறையில் 'ஏஸி' பொருத்திக் கொண்டால், 'சே, சமயம் பார்த்து மத்தியானம் இரண்டு மணிக்கு பவர் கட்டுங்கறான். என்னால் ஏஸி இல்லாமல் ஒரு நிமிஷம் தாக்குப்பிடிக்க முடியாது' என்று பெருமையடித்துக் கொள்ளலாம். இதற்கெல்லாம் வைட்டமின் 'ப' இல்லாதவர்கள், தரையில் தண்ணீர் விட்டும் வேஷ்டியை நனைத்துத் தொங்க விட்டும் ஃபானைப் போட்டுக் கொண்டு சமாளிக்கலாம்.

* ராமு, சென்னை — 90.

? ஏ. எம். ராஜா பாடிய பாடல்களில் தங்களைக் கவர்ந்தது எது?

! அப்போது எனக்கு இன்னும் கொஞ்சம் வயது குறைவு. பலவித 'மூட்'கள். ஒவ்வொரு மனநிலையில் ஒவ்வொரு பாடலை இதயத்தில் அசை போட்டு மகிழ்ந்ததும் ஆறுதல் அடைந்ததும் உண்டு. உ.ம்.: 'மயக்கும் மாலைப் பொழுதே...', 'வாராயோ வெண்ணிலாவே...', 'காதலிலே தோல்வியுற்றான்...'. குரல் வளத்தாலும் இசை நயத்தாலும் லட்சக்கணக்கான உள்ளங்களை ஈர்த்த ராஜாவின் இறுதிக் கட்டம் இசைபட அமையாத துயரத்தை அவர் பாடல்களைக் கேட்டுக் கேட்டுத்தான் குறைத்துக் கொள்ள வேண்டும்.

* எஸ். சுந்தர், பாளையங்கோட்டை.

? தினமும் வெளிநடப்புச் செய்யும் அ. தி. மு. க. கின்னஸ்ஸில் இடம் பெறுமா?

! அதற்கு கின்னஸ்ஸின் விதிமுறைகள் இடம் தருமா, தராதா என்பதைப் பார்க்க வேண்டும். அதைவிட முக்கியமானது, மக்களின் மனங்களில் அக் கட்சி பெற்றுள்ள இடத்தைத் தக்க வைத்துக் கொள்வதாகும். அதற்கு வழி இதுவல்ல.

* எம். என். எடிசன், நெல்லை. *

? இப்போது நாடாளுமன்றத்திலும் எல்லா மாநிலச் சட்டசபைகளிலும் கலவரங்கள் நடக்கின்றனவே? இதைப் பற்றி...?

! எம். எல். ஏக்களுக்கும் எம். பிக்களுக்கும் மற்ற மக்களுக்கு இல்லாத சில சிறப்பு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. 'எதற்காக?' என்று யோசிக்க வேண்டும். அவர்களுடைய கடமைகள், நடத்தை முதலியன இன்னின்ன, இப்படி, இப்படி என்று வரையறுக்கப்படவில்லை. 'ஏன்?' என்று சிந்திக்க வேண்டும். 'ஏன், எதற்காக' என்று தெரிந்து கொள்ளாமல், உரிமைகளை மட்டும் பயன்படுத்திக் கொள்ள அவர்கள் முற்படுவதுதான் சட்டசபை, நாடாளுமன்றக் கலவரங்களுக்குக் காரணம். எம்.எல்.ஏ. எம்.பி. பதவிகளுக்கு வரவிரும்புவோருக்கு, இதையெல்லாம் நன்கு தெரிந்து கொண்டு உணர்த்த வேண்டியது கட்சித் தலைமையின் கடமை. உட்கட்சி ஜனநாயகத்தையும் செயல்படுத்த வேண்டும். இதனால்தான் கட்சித் தலைமை வேறு; ஆட்சித் தலைமை வேறு என இருக்க வேண்டும் என்பது. இரண்டையும் சேர்த்து ஒருவரே செய்ய அவகாசம் இராது; எதையும் சரிவரச் செய்யவும் முடியாது.

* சோ. எல். மாறன், மேல்பட்டி.

? 'புத்தாண்டுப் பரிசு ஐந்து கிலோ அரிசி இலவசம்' — இது எப்படி இருக்கு?

! வியாபாரத் தந்திரங்கள் அரசியலில் புகுந்து கொண்டிருப்பதானது, அரசியல் வியாபாரமாகி விட்டதை உறுதிப்படுத்துகிறது. 'இலவசம்' என்பதாக உண்மையில் எதுவுமே இல்லை என்பது வியாபாரிக்கும் தெரியும்; அரசியல்வாதிக்கும் தெரியும்!

* எஸ். தென்றல் வாணி, வேலூர்.

? 'கர்ணன் கவச குண்டலங்களுடன் பிறந்தது போல் இந்தியக் குடிமகன் கடனுடன் பிறக்கிறான்' என்று ரகுமான்கான் கூறியிருப்பது குறித்து?

! நூற்றுக்கு நூறு உண்மை. மத்திய அரசு கடைப்பிடிக்கும் பொருளாதாரக் கொள்கை காரணமாக ஒவ்வொரு பாரதக் குடிமகனும் கடனாளியாகவே பிறந்து, கடனாளியாகவே வாழ்ந்து, கடனாளியாகவேதான் சாகிறான்! அரசு கடன்பட்டிருக்கிறது என்றால் ஒவ்வொரு குடிமகனும் கடன் பட்டிருப்பதாகத்தான் அர்த்தம்.

* வி. எஸ். வாசன், சென்னை — 33.

? 'அமைச்சர் துரைமுருகனின் ராஜினாமாவைக் கோர வேண்டும்' என்கிறது தலையங்கம். மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதே சமயத்தில் சட்டமன்ற நெறி முறைகள் தெரியாத, எதிர்க்கட்சிக்கு உண்டான பாங்குடன் நடந்து கொள்ளாத ஜெயலலிதாவுக்குத் தராசின் அறிவுரை என்ன?

! ஜானகியைப் பின்பற்றவும்.

* ரூ. 20 பரிசு பெறுபவர்:

எம். என். எடிசன்,
அச்சம்பாடு, வள்ளியூர்,
நெல்லை — 627 117.




Enterprise/CS/153Tm

நடந்து கொண்டே சிரிக்கின்றேன்!

லாண்டரி வாசல் மகாநாடு!

உலக நடப்புக்கள் நடைபாதைகளில் பரப்பப்பட்டு, பரபரப்புடன் பணமாக்கப் படும் காட்சியைப் பார்த்ததுண்டா? அதி காலையில் வாக்கிங் போனால் பார்க்க லாம்! காலைப் பத்திரிகைகள் கட்டுக் கட்டாக வந்து இறங்கி, இனவாரியாகப் பிரிக்கப்பட்டு, சைக்கிள் சைக்கிளாக ஏறி அமர்ந்து, அறிவுப் பசியோடு காத்திருக்கும் குடிமக்களின் ஆவலைத் தணிப்பதற்காகப் பறக்கும் காட்சியைக் காணலாம். நாட்டில் பொதுவாகப் படிப்பறிவு வேகமாகப் பரவி வருவதற்கு இது அத்தாட்சி என்றாலும், நாளும் நடக்கும் கொலைகளையும் (ஜன நாயகக் கொலை உட்பட) கொள்ளைகளை யும் (அரசியல்வாதிகள் அடிக்கும் கொள்ளை உட்பட) பைசாவுக்குப் பயனில் லாத பேச்சுக்களையும் படிப்பதனால் எந்த வகையில் மக்கள் அறிவை வளர்த்துக் கொள்கிறார்கள் என்று நான் யோசிப்ப துண்டு. 'காலை ஆகாரம்' கிடைக்காமல் போய் விட்டால், எதையோ இழந்து விட்டது





மாதிரியும், அதனால் குடி முழுகிப் போய் விட்டது போலவும், பித்துப் பிடித்தவர்கள் போன்று சிலர் அலைவதைக் கண்டு நான் என்னுள் சிரித்துக் கொள்வேன்.

சிலர் பத்திரிகையை வாங்கியதும் வீட்டுக் குப் போகும் வரை பொறுமை இல்லாமல், சூடு ஆறுவதற்கு முன்பே காப்பியைக் குடித்து விடத் துடிப்பவர்கள் போல், கடை வாசலிலேயே நின்று முக்கியமான நியூஸ் களைப் படித்து விடுவார்கள். இன்னும் சிலர், பத்திரிகையைப் படித்துக் கொண்டே நடப்பார்கள். அவர்கள் எதிரில் வரும் மனிதர்களின் மீது மட்டுமின்றி, ஆடு மாடு களின் மீது கூட மோதிக் கொள்வதைப் பார்த்தும் நான் சிரிப்பது உண்டு.

ஒரு பரோபகாரி, பத்திரிகையை வாங் கிக் கொண்டு வந்து லாண்டரியின் முன் உட்கார்ந்து விடுவார். (எட்டு மணிக்குத் தான் கடை திறக்கும்) அதற்கு முன்னேயே நாலைந்து பேர், பந்தியில் பரிமாறுவதற் காகக் காத்திருப்பவர்கள் போல், அங்கு

மெரீனா

ஆவலுடன் அமர்ந்திருப்பார்கள். பத்திரிகை பரோபகாரி வந்ததும், ஆளுக்கொரு பக்க மாகப் பிரித்துக் கொடுத்து விட்டு, ஓர் ஓரமாக உட்கார்ந்து கொள்வார். ஒவ்வொரு வரும் மாறி மாறி, சுவையான நியூஸ்களை உரக்கப் படிப்பார்கள். அதைக் கேட்டு இவர் சிரித்துக் கொள்வார். இடையிடையே 'கமெண்ட்'டுகளும் அடிப்பார். 'ஆங், சும்மா பேசுவானுங்க. இவங்க மட்டும் யோக்கி யமா? சான்ஸ் கிடைச்சா இவரு மட்டும் சுருட்ட மாட்டாரா? அல்லாரும் ஒண்ணு தாம்பா. அதை வுடு. மேலே படி' என்பார். அரசியல்வாதிகள், தாங்கள் சொல்வதை யெல்லாம் மக்கள் அப்படியே நம்பி விடு வார்கள் என்று நினைத்துத்தானே அறிக்கை விடுகிறார்கள்? அவர்கள் இம் மாதிரி கமெண்டைக் கேட்க நேர்ந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்று எனக்குத் தோன் றும்.

பத்திரிகைப் பாராயணம் செய்து கொண்டிருப்பவர்களிடமிருந்து சற்று ஒதுங்கி உட்கார்ந்திருப்பார் ஒருவர். அவர் கையில் பத்து, பதினைந்து லாட்டரிச் சீட்டுக் கள் இருக்கும். அன்றையப் பேப்பரில் வெளி யாகியிருக்கும் அதிருஷ்ட எண்களுடன், தமது சீட்டு எண்களை ஒப்பிட்டுப் பார்த் துக் கொண்டிருப்பார். கையிலுள்ள சீட்டுக் களை ஒவ்வொன்றாகக் கிழித்துப் போடு வார். முகத்தில் வேதனையும் ஏமாற்றமும் படிப்படியாகக் குடியேறும். லட்சாதிபதியாக ஆக நினைத்தவர், 'கைலே துட்டு இல்லே... வாப்பா, வந்து ஒரு சிங்கிள் டீ வாங்கிக் குடு' என்று நண்பரை அழைத்துச் செல் வார். அவரைப் பார்க்கும் போது ஒருபுறம் சிரிப்பு வந்தாலும் மறுபுறம் உழைக்காமலே உயர்ந்து விடலாம் என்று ஏழை மக்களை நம்ப வைக்கும் மத்திய, மாநில அரசுகள் மீது கோபம் கோபமாக வரும். வேலை வாய்ப்புப் பெற்றுத் தராமலே மக்கள் முன்னேற்றத்திற்காகவே பாடுபடுவதாக ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்களே என்று வேதனைப்படுவேன்.

எனக்கு மிகவும் பழக்கமான நடைபாதை லாட்டரிச் சீட்டு வியாபாரி, தம் கடையை விரிக்கும் போது, ஐயப்பன் படத்துக்கு ஊதுவத்தி ஏற்றி வைத்து விட்டு, சீட்டுக் களை வரிசையாக அடுக்கி வைப்பார். ஒரு மேஜையும், ஸ்டூலும்தான் கடையின் பர்னிச்சர். அவற்றை எதிர் வீட்டுக் காம்பவுண்டுக்குள்ளிருந்து கொண்டு வந்து போடுவார்.

ஐயப்ப பக்தர் கடையை விரித்ததும், முதல் நாள் லாண்டரிக்கெதிரில் ஏமாற்றத் துடன் லாட்டரிச் சீட்டுக்களைக் கிழித்துப் போட்டவர், 'லாட்டரிச் சீட்டுக்களை நம்பினோர் கைவிடப்படார்' என்ற முழு நம்பிக்கை முகத்தில் பிரதிபலிக்க, முதல் 'போணி' செய்ய அங்கே தயாராய் நின்று கொண்டிருப்பார்.!




மலைச் சிகரங்களைக் காண்பதும் மரங்
களின் பசுமையைப் பார்ப்பதும் ஆனந்தம்
தான்; அதைவிட ஆனந்தம்
கல்கி விடுமுறை மலர் — 1989
வீட்டிலேயே இருந்தாலும்,
சுற்றுலா சென்றாலும்
உற்ற நண்பனாய் உடனிருப்பது
கல்கி விடுமுறை மலர் — 1989
320 பக்கங்கள் : : விலை ரூ. 10/-.
உங்கள் பிரதிக்கு உள்ளூர் ஏஜெண்டிடம்
பதிவு செய்யுங்கள். அல்லது பதிவுத் தபாலில்
பெற ரூ. 16/- அனுப்புங்கள்.
மானேஜர், கல்கி, சென்னை — 600 032.

சட்டசபை — அறிஞர்கள் சபையானால் ஆண்டவன் வடிவமாகும்...

அருள் வாக்கு

"ஸபாவுக்குப் போறேன்" என்றால், கச்சேரிக்குப் போகிறான் என்றே அர்த்தம் செய்து கொள்கிறோம். ஆனால் வேத காலத்தில் அடைமொழி கொடுக்காமல் வெறுமே ஸபை என்று சொன்னால், அது இந்தக் காலத்தில் நாம் "சட்ட ஸபை" என்று அடைமொழி கொடுத்துச் சொல்கிறோமே, அந்த மாதிரியான ஓர் அமைப்புத்தான். "ஸபை" என்பது தமிழில் "அவை" என்று ஆயிற்று.

ஜனங்களுக்கு நல்லது பண்ணுவதற்காகப் பல அறிஞர்கள் ஒன்று கூடி ஒரு ஸபை ஏற்படுத்தினால் அது ஈச்வர ஸ்வரூபமே என்று மதித்து "ருத்ர"த்தில் அதற்கு நமஸ்காரம் தெரிவித்திருக்கிறது. பரமேச்வரன் அர்ச்சாரூபத்தில் (விக்ரஹ உருவில்) பரிபூர்ணமாக விளங்கிக் கொண்டிருக்கிற சிதம்பரத்தில் அவருடைய ஸந்நிதிக்கு "ஸபை" என்றுதான் பெயர். அது "கனக ஸபை." அது தவிர, தாம் ஆடிக் கொண்டே லோகங்களையெல்லாம், சேதனா சேதனங்களையெல்லாம் ஆட்டி வைத்துக் கொண்டு ஆட்சி நடத்துகிற அந்த த்ரிபுவன சக்ரவர்த்திக்கு இன்னும் நாலு ஸபை — ரஜத ஸபை என்று வெள்ளியில் ஒன்று, மதுரையில் இருப்பது; ரத்ன ஸபை என்று திருவாலங்காட்டில் இருப்பது; தாம்ர ஸபை என்று திருநெல்வேலியில் இருப்பது; சித்ர ஸபை என்று சிற்பங்களே இல்லாமல் சித்ரங்கள் மட்டும் நிறைந்திருப்பதாகத் திருக்குற்றாலத்தில் இருப்பது — என்றிப்படி மொத்தம் பஞ்ச ஸபைகள். இந்த ஸபைகளுக்கு preside பண்ணும் 'ஸ்பீக்க'ராக, ஸபாபதியாக அவர் இருக்கிறார்! இல்லை, ஸ்பீக்கர் (பேசுபவர்) இல்லை; டான்ஸர் (ஆடுபவர்)!

அவரை நாம் 'நடராஜா' என்றே பொதுவில் சொல்கிறோமானாலும், தீக்ஷிதர்கள் சிதம்பர ஆலயத்தைக் குறிப்பிட்டு எழுதும்போது "ஸபாநாயகர் கோயில்" என்றுதான் போடுவது வழக்கம். ஈச்வரன் ஸபாநாயகர் அல்லது ஸபாபதி மட்டுமில்லை, ஸபையுமே அவன்தான் என்று நமக்குக் காண்பித்துக் கொடுக்கவே வேத ஸ்துதியான "ஸ்ரீ ருத்ர"த்தில் ஸபைக்கும் நமஸ்காரம் சொல்லியிருக்கிறது. "Will of the people is the will of God," "மக்கள் தீர்ப்பு மஹேசன் தீர்ப்பே" என்பதெல்லாம் நம்மிடம் புதுசாக வந்து சேர்ந்திருக்கும் கொள்கைகள் இல்லை; ஆதிக்கு ஆதியான வேத காலத்திலிருந்து இந்த அபிப்பிராயம் இருந்து வந்திருக்கிறது என்பதற்கு இது சான்று.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.





“அம்மா, என்னை ஏன் வெறுக்கிறாய்?”

பெண் குழந்தைகளைப் பெற்றோர்களே வெறுக்கும் கொடுமையை அலசுகிறது இக்கட்டுரை...




சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் தில்லியில் கூடிய சார்க் (SAARC) நாடுகளின் செயற்குழு, 1989 ஆம் ஆண்டைப் பெண் குழந்தைகள் ஆண்டாகக்கொண்டாடவேண்டும் என்று தீர்மானம் நிறை வேற்றியது. இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற சார்க் நாடுகளிலும், மற்றும் சைனா போன்ற பல ஆசிய நாடுகளிலும் பெண் குழந்தைகளின் மேல் தொன்று தொட்டு ஒரு வித வெறுப்புணர்ச்சி இருந்து வருகிறது. பெண் குழந்தை பிறந்தால், ‘ஐயோ! பெண் குழந்தையா?’ என்று துக்கப்படுபவர்கள், இந்நாடுகளில் ஏராளம். ‘பெண் குழந்தைகளை வளர்ப்பது, பக்கத்து வீட்டுச் செடிக்கு தண்ணீர் ஊற்றி வளர்ப்பதற்குச் சமம்’ என்று தெலுங்கில் ஒரு பழமொழியே இருக்கிறது.

நம் நாட்டில் ஆண்டொன்றுக்குச் சுமார் 120 லட்சம் பெண் குழந்தைகள் பிறக்கின்றன. அவற்றில் பதினைந்து லட்சம் குழந்தைகள், அதாவது பன்னிரண்டரை சதவீதம் குழந்தைகள் தங்களுடைய முதல் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் பாக்கியத்தைக் கூடப் பெறுவதில்லை. இன்னும் ஓர் எட்டரை லட்சம் பெண்குழந்தைகள் ஐந்துவயதை எட்டிப் பிடிப்பதற்குள் இவ்வுலகை விட்டு மறைந்து விடுகின்றன.

பெண்ணினம் பெருகாமல் இருக்க நம் நாட்டில் எடுத்துக் கொள்ளப்படும் நடவடிக்கைகளை ஆராய்ந்தால் அதிர்ச்சி தருவதாக உள்ளது.

மருத்துவ வளர்ச்சியின் முன்னேற்றத்தின் காரணமாக மனிதகுலத்திற்குக் கிடைத்திருக்கும் ஒரு முக்கியமான பரிசோதனை, “அமினியோசென்டிஸிஸ்” (Aminiocentisis test) சோதனை. இந்தச் சோதனையின் மூலம், கருவுற்ற மூன்று மாதத்திற்கெல்லாம் கர்ப்பப்



இங்கே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் உள்ள எண்கள் (ஆயிரம் குழந்தைகளில்) ஆண்டொன்றுக்கு நான்கு வயதுக்குள் இறந்து போகும் குழந்தைகளின் எண்ணிக்கையாகும். கறுப்பு பெண் குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கையையும், வெள்ளை ஆண் குழந்தைகளின் இறப்பு எண்ணிக்கையையும் காட்டுகிறது.


பையிலிருந்து ஊசி மூலம் திரவத்தை எடுத்து, பிறக்கப் போகும் குழந்தைக்கு ஏதாவது கோளாறு இருக்க வாய்ப்பிருக்கிறதா என்பதைக் கண்டு பிடிக்கலாம். அந்தக் குறையை நிவர்த்தி செய்ய முடியுமானால் அதற்கான சிகிச்சை அளிக்கவும் அல்லது பிறவிக் குறையுடன் பிறக்க இருக்கும் அக்கருவை அழித்து விடுவதற்காகவும் கண்டு பிடிக்கப் பட்டிருக்கும் இப்பரிசோதனையை, நம் நாட்டில் பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணா என்பதைத் தெரிந்து கொள்வதற்காக உபயோகப்படுத்திக் கொள்கிறார்கள். பிறக்கப் போவது பெண் குழந்தை என்று தெரிந்தால், உடனே அக்கருவை அழித்து விடுகிறார்கள்.

அமீனியோ சென்டிஸிஸ் பரிசோதனை செய்வதற்கும், அபார்ஷன் செய்வதற்கும் என்று, இன்று நாடெங்கிலும் ஏராளமான டாக்டர்கள், நர்ஸிங் ஹோம்கள் உள்ளன. இன்று நம் நாட்டில் செழிப்பாக நடக்கும் வியாபாரம் இது. எப்படியாவது பெண் கருவை வளர விடக் கூடாது என்பதில் குறியாக இருக்கும் நம் மக்கள், இப்பரிசோதனைக்கும், அபார்ஷனுக்கும் ஆயிரம், இரண்டாயிரம் என்று பணம் செலவழிக்கவும் தயாராக இருக்கிறார்கள். அமீனியோ சென்டிஸிஸ் பரிசோதனை வசதியில்லாத கிராமப்புற மக்கள், கிராமங்களிலிருந்து கருப்பையிலிருந்து எடுக்கப்படும் திரவத்தை நகரங்களிலுள்ள நர்ஸிங்ஹோம்களுக்குக் கூரியர் சர்வீஸ் மூலம் அனுப்பி ஆணா, பெண்ணா என்று கண்டறிகிறார்கள்.

இதுபோல் கண்டறியப்பட்டு, 1987 ஆம் ஆண்டில் பம்பாய் நகரத்தில் மட்டும் 40,000 பெண் கருக்களை அபார்ஷன் செய்திருக்கிறார்கள். இந்தக் கொடுமையை எதிர்த்து மாதர் நலச் சங்கங்கள் போராட்டங்கள் நடத்தியதன் காரணமாக, மகாராஷ்டிர அரசு 1988 ஆம் ஆண்டு இப்பரிசோதனையையும், அதன் விளைவாகச் செய்யப்படும் அபார்ஷன்களையும்தடுக்கும்சட்டம்ஒன்றை இயற்றியது. ஆயினும் இந்தக் கொடுமையான பெண் கருச்சிதைவில் இன்று குஜராத் மாநிலம் முதன்மையாக விளங்குகிறது. அங்கு சென்ற ஆண்டில் மட்டும் சுமார் 41,000 பெண்கருக்கள் அழிக்கப் பட்டிருக்கின்றன.

தில்லியில் வெளியாகும் தினசரிகளில் தினமும் "ஆணா, பெண்ணா? தெரிந்து கொள்ள வேண்டுமா?" என்று அமீனியோ சென்டிஸிஸ் பரிசோதனை செய்யப்படும் கிளினிக்குகளின் விளம்பரங்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. மத்திய அரசோ, இந்த அக்கிரமத்தைத் தடுக்கும் சட்டம் ஒன்றைக் கொண்டு வருவதைப் பற்றி முடிவில்லாமல் யோசித்த வண்ணமே இருக்கிறது.

பெண் கருச்சிதைவை விடவும் கொடுமை ஒன்று உண்டென்றால் அது பெண் சிசுக் கொலைகள். தமிழ் நாட்டில் ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பெண் சிசுக்களை வதம் செய்து விடுவதாகப் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியது. ராஜஸ்தான் மாநிலத்தில் இப்படிப்பட்ட கலியுக கம்சன்கள் நிறைய இருக்கிறார்கள் என்பதுஎல்லோருக்கும்தெரிந்தஒருரகசியம். குஜார் வகுப்பைச் சேர்ந்த பிரஜிண்டர் சிங் என்ற காங்கிரஸ் எம் எல் ஏ வின் குடும்பத்தில், கடந்த நாற்பது ஆண்டுகளில் சுமார் 36 பெண் குழந்தைகளைப் பிறந்த உடனேயேகொலைசெய்துவிட்டதாகவும், அதனால் தான் அவர்கள் குடும்பத்தில் ஒரு பெண் குழந்தை கூட இல்லையென்றும், சட்ட சபையில் எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விகளிலிருந்து தெரிய வருகிறது. இந்த எம் எல் ஏ விற்குப் பிறந்த இரு பெண் குழந்தைகளையும், அவர்கள் வழக்கப்படி, பிறந்தவுடன் விஷம் கலந்த பாலைப் புகட்டிக் கொன்று விட்டதாக ராஜஸ்தான் உயர் நீதி மன்றத்தில் சில மாதங்களுக்கு முன்பு ஒரு வழக்கும் தொடரப்பட்டது! பம்பாய் நகரத்தில் உள்ள KEM ஆஸ்பத்திரியில் பிறந்த பெண் குழந்தைகளை, ஆஸ்பத்திரி வாசலில் உள்ள குப்பைத் தொட்டியில் எறிந்து விட்டுப் போய் விடுவதாகக் கூட சில வழக்குகள் பதிவாகி உள்ளன.



SUNDAY, FEBRUARY ... THE TIMES OF INDIA, NEW DELHI 3

OLDEST & BEST OF ALL NEW BHANDARI HOSPITAL

Healthy BOY OR GIRL?

Determination and Genetic disorders

Healthy Boy or Girl

8 to 11 Weeks of Pregnancy by Chorion Villus Study

• From 16 weeks onwards by Chromosomal Biochemical & Amniocentesis Study with the aid of latest Computerised Ultra Sound Scan and Scientific Techniques.

Contact : Dr. Amrit Garg Report on the same day Dr. Reshma Garg

9.00 A.M. to 5.00 P.M. Sunday Closed Tel. : 7221222

AMRIT CLINIC

(Genetic Counselling & Ultra Sound Scan Centre)

பெண்சிசுக் கொலைகள் நடக்காத குடும்பங்களில் கூடப் பெண் குழந்தைகளை வேண்டாத விருந்தாளிகளாகத்தான் எண்ணுகிறார்கள் என்ற கசப்பான உண்மையை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆண் குழந்தை - பெண் குழந்தை என்று வித்தியாசம் பாராட்டிப் பாரபட்சம் காட்டும் வழக்கம் நாடெங்கிலும் பரவலாக இருந்தாலும், பஞ்சாப், ஹரியானா, உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான் போன்ற வட மாநிலங்களில் இந்தக் கொடுமை மிக அதிக அளவில் உள்ளது.

இயற்கையிலேயே ஆண் குழந்தைகளை விட அதிக ஆரோக்கியத்துடன் பிறக்கும் பெண் குழந்தைகள், பெற்றோரின் சரியான கவனிப்பு இல்லாததால், டெடனஸ், வயிற்றுப்போக்கு, தட்டம்மை, போன்ற நோய்களினால் தாக்கப்பட்டுச் சீக்கிரமே இவ்வுலகை விட்டு மறைந்து விடுகின்றன. பெண் குழந்தைகளின் வளர்ப்பில் பெற்றோர்கள் காட்டும் அலட்சியத்தின் காரணமாக, நான்கு வயதிற்குள் உள்ள பெண் குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆண் குழந்தைகளை விட அதிகமாக உள்ளது. இந்த வித்யாசம் ஆண் குழந்தை மோகம் அதிகமாக உள்ள மாநிலங்களான ஹரியானா, உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான் போன்றவற்றில் இன்னும் அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டில் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லை என்பது சிறிது ஆறுதலை அளித்தாலும், இங்கும் ஆண் - பெண் குழந்தைகளின் இறப்பு விகிதத்தில் வித்தியாசம் உள்ளது என்பதை வரைபடம் எடுத்துக் காட்டுகிறது.

ஆண் – பெண் குழந்தைகளின் இறப்பு விகிதத்தில் பெண் குழந்தைகளின் விகிதம் மட்டும் அதிகமாக இருப்பதற்கு என்ன காரணம்?

பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பாலே முக்கிய உணவாக இருக்கிறது. நீண்ட நாட்களுக்குத் தாய்ப்பால் புகட்டுவதனால் குழந்தைக்கு நோய் நொடி வராமல் தடுக்கலாம். அத்தனை நோய் எதிர்ப்பு சக்தி தாய்ப்பாலுக்கு இருக்கிறது. ஆயினும் பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில் நடந்த பல ஆய்வுகளின் படி, தாய்மார்கள் பெண் குழந்தைகளுக்கு மிகக் குறைந்த நாட்களுக்கே தாய்ப்பால் கொடுக்கிறார்கள். குழந்தைக்குத் தாய்ப்பால் புகட்டும் வரை அடுத்த குழந்தை பிறக்க வாய்ப்பில்லை என்பதால் – ஆண் குழந்தையை உடனே பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசையில், பெண் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுப்பதை இரண்டு மூன்று மாதங்களிலேயே நிறுத்தி விடுகிறார்கள். அதோடு புட்டிப் பால் புகட்டுவதற்கு வேண்டிய சுகாதார முறைகளையும் (பாட்டிலை கொதிக்க வைப்பது போன்றவை) சரிவரப் பின்பற்றுவதில்லை என்பதால் குழந்தைகளுக்கு நோய் வர அதிக வாய்ப்பு உண்டாகிறது. இதுவும் பெண் குழந்தைகளின் இறப்புக்கு ஒரு காரணமாகிறது.

மேலும், தங்கள் வசதிக்கு மேல் செலவழித்துப் போஷாக்கான ஆகாரங்களை ஆண் குழந்தைகளுக்கு வழங்கத் தயாராக இருக்கும் குடும்பங்கள், பெண் குழந்தைகளின் உணவு விஷயத்தில் வேண்டிய அக்கறை எடுத்துக் கொள்வதில்லை என்பதும் உண்மை. வீட்டிலுள்ள ஆண்கள் சாப்பிட்ட பிறகு மிஞ்சியதைப் பெண்கள் சாப்பிட்டால் போதும் என்ற வழக்கம் இன்னும் நம் நாட்டில் அநேக குடும்பங்களில் இருக்கிறது! தடுப்பு ஊசிகள் போடுவதிலும் பெண் குழந்தைகள் விஷயத்தில் பெற்றோர்கள் மெத்தனமாகவே இருக்கிறார்கள்.

உத்திரப்பிரதேசத்திலிருந்து தில்லிக்குக் குடிபெயர்ந்துள்ள கூலியாட்களின் குடியிருப்பில் நடந்த கணக்கெடுப்பின்படி, காய்ச்சல், ஜலதோஷம், சளி, இருமல், வயிற்றுப் போக்கு போன்ற நோய்கள் தாக்கினால், ஆண் குழந்தைகளைப் பணம் செலவழித்துத் தனியார் மருத்துவர்களிடம் அழைத்துச் செல்லும் பெற்றோர்கள், பெண் குழந்தை



"இருபது ரூபாய் நோட்டு அச்சடிக்கக் கிட்டிருந்த நீ, ஏன் திடீர்னு நூறு ரூபாய் நோட்டு அடிக்க ஆரம்பிச்சே?

"காகித விலை உயர்வு காரணமாத் தான்!"

— மேல்மங்கலம் பத்ரா

களுக்கு மட்டும் பணம் செலவழிக்க மனமின்றிப் பெரும்பாலும் வீட்டிலுள்ள 'கை' மருந்துகளைக் கொடுத்தே வைத்தியம் செய்து விடுகிறார்கள் என்று தெரிய வந்திருக்கிறது.

நகர்ப்புறங்களை விட, கிராமங்களில் ஆண் – பெண் இறப்பு விகிதத்தில் வித்தியாசம் அதிகமாக உள்ளது. தமிழ்நாடு போன்ற மாநிலங்களில் கூட, நகர்ப்புறங்களில் ஆண் – பெண் இறப்பு விகிதத்தில் வித்தியாசமே இல்லாவிட்டாலும், கிராமங்களில் ஓரளவிற்கு வித்தியாசம் இருக்கிறது. இதற்கு, நகரங்களில் ஆண் குழந்தைகள் – பெண் குழந்தைகள் என்ற பாகுபாடு குறைவு என்பது ஒரு காரணம். மற்றொரு முக்கிய காரணம், குழந்தைகளுக்கு உடல்நிலை மோசமானால் நகரங்களில் வைத்திய உதவியை உடனே நாட முடியும்; ஆனால் கிராமப்புறங்களில் உள்ளவர்கள் வைத்திய உதவிக்காக நகரங்களுக்கு வர வேண்டும்; இதில் பணச் செலவும் அதிகம், சிரமமும் அதிகம். அதனால் பெரும்பாலும் கிராமப்புறங்களில் பெண் குழந்தைகள் நோயுற்றால் பெற்றோர்கள் மெத்தனமாக இருந்து விடுகிறார்கள்.

பஞ்சாப் மாநிலத்திலேயே பொருளாதார ரீதியாக மிகவும் முன்னேற்றமடைந்துள்ள லூதியானா மாவட்டத்தில் நடந்த ஆய்வுப்படி, அநேக தாய்மார்கள், தங்களுக்கு ஒரு பெண் குழந்தை கூட இல்லாவிட்டாலும் பரவாயில்லை; ஆனால் கண்டிப்பாக ஒன்றல்ல – இரண்டு ஆண் பிள்ளைகளாவது வேண்டும் என்று தங்கள் ஆசையை வெளியிட்டுள்ளார்கள்!

இவற்றுக்கெல்லாம் என்ன காரணம்?

ஆண் குழந்தை பிறந்தால் அது வளர்ந்து ஆளானதும் வயதுக்காலத்தில் தங்களை வைத்துக் காப்பாற்றுவான் என்று பெற்றோர் எண்ணுகின்றனர். ஆனால் பெண் குழந்தைகள் என்றால் அவர்களை வளர்த்துப் படிக்க வைப்பதோடு பெற்றோரின் கடமை முடிந்து போவதில்லை. நல்ல வேலையிலிருக்கும் பெண்களுக்குக் கூட வரதட்சணை கொடுத்துத் திருமணம் செய்து வைக்கவேண்டி இருக்கிறது. அத்துடன் அவர்கள் சம்பாத்தியமும் புகுந்த வீட்டுக்கே சென்றுவிடுகிறது! அதனால்தான் பெற்ற தாய்களே கூடப் பெண் குழந்தைகளை ஒரு பாரமாகக் கருதும் அவலம் நீடிக்கிறது. ஆக, பெண்களைச் சமூகத்தின் சமபங்காளிகளாகக் கருதிச் செயல்படும் நிலை வராத வரை இது போன்ற பெண்சிசுக் கொலைகளைச் சட்டத்தால் மட்டும் தடுத்து விட முடியாது. நூற்றுக்கு நூறு அனைவரும் சிறந்த கல்வியறிவு பெற்றாக வேண்டும்.

— **ரமாமணி சுந்தர்.**

அட்டை வண்ணப்படம்: **கே. வி. ஆனந்த்**

படங்கள்: **செந்தில் ஆர். கணேஷ்**

பார்க்கவோம்

சத்ரியப்பிரியன்

அவனுக்கு வயது முப்பதுக்குள் இருக்கும். ஒரேயடியாக ஒடிசலான தேகம் என்று சொல்லிவிட முடியாது. இனிமேல் பருப்பதற்கான சாத்தியக் கூறுகள் கன்னம் மற்றும் கழுத்துப் பகுதிகளில் தெரிந்தது. தாடி வைத்திருந்தான். இடது தோள்பட்டையில் ஒரு ஜோல்னாப் பையும், கையில் அவனைப் போன்றவர்கள் உபயோகிக்கும் தடியும் வைத்திருந்தான்.

தூரத்தில் எலக்ட்ரிக் ட்ரெயின் வரும் தோற்றம் கண்டு ப்ளாட்ஃபார்ம் ஓர் இயந்திரச் செய்கையாகப் பரபரப்பானது. இவன் ட்ரெயினில் ஏறும் பொழுது மற்றவர்களால் மோதப்பட்டு விடக் கூடாது என்ற அனுதாபம் எனக்கு ஏற்பட்டது. மெல்ல அவன் கரம் பற்றி ஏற்றிவிட முயற்சி செய்தேன். சட்டென்று என் கைகளை உதறி விட்டான்.

"எட்டு வருஷப் பழக்கம் சார். எனக்கு உதவி செய்யணுங்கிறது அவசியமில்லை." — நான் இருக்கும் திசையை ஒரு மாதிரி ஊர்ஜிதம் பண்ணிக் கொண்டு பேசினான்.

"ஆனா அது எனக்குத் தெரியாதுங்களே" என்றேன்.

அவன் பதில் சொல்லவில்லை.

தடியின் உதவி கொண்டு ஜன்னல் பக்கமான இருக்கையில் உட்கார்ந்து கொண்டான். அவன் பக்கத்து ஸீட்டில் உட்கார்ந்து கொண்டேன். அவனுடன் பேச வேண்டும் என்று தோன்றியது. ஆனால் எதைப் பற்றிப் பேசினாலும் சுற்றி வளைத்து, 'நீ பார்வையில்லாதவன்' என்று முடிந்துவிடும். எல்லார் முன்னாலும் அவன் சுயப் பச்சாதாபத்திற்கு உள்ளாக வேண்டும்.

"எங்கே சார் போறீங்க?" அவன்தான் ஆரம்பித்தான்.

"தாம்பரம். நீங்க?" என்றேன்.

"நானும் தாம்பரம்தான்."

"தாம்பரத்திலே எங்கே?" அவனிடமிருந்து வந்த பதிலைக் கேட்ட பிறகுதான் அந்தக் கேள்வியைத் தவிர்த்திருக்கலாமோ என்று தோன்றியது.

"வேறே எங்கே? குருட்டுப் பசங்க ஸ்கூலுக்குத்தான்."

எனக்கு அவன்மேல் வருத்தம் ஏற்பட்டது. இதை மாற்ற முடியாது. உள்ளே சீழ்பட்டுப் புரையோடிப் போன புண்ணை ஆற்றுவது கஷ்டம்.

"என்ன சார், பேசாம வர்றீங்க?" அவன்தான் தொடர்ந்தான்.

"இல்லீங்க. எதைப் பேசினாலும் என்னை மீறி உங்க பார்வையின்மையில் கொண்டு வந்து விட்டிடுவேனோன்னு பயமா இருக்கு. கேட்கிற கேள்வியில் பாதிக் கேள்வி இதுன்னா கஷ்டமா இருக்காதா?"

"ரைட்டு. ஆனால் நான் ஒரு குருடன்னு அடுத்தவங்க என்னைப் பார்க்கும் அனுதாபப் பார்வையை என்னால் தடுக்க முடியுமா? என்னை இப்படிப் பார்க்கறாங்களே, இப்படிப் பார்க்கிறாங்களேன்னு மனசுல நெருடுது பாருங்க, அதை என்ன பண்றது?"

இது எல்லா ஊனர்களுக்கும் உண்டான சாபம். உடலைக் குறைகளோடு ஏற்றுக் கொள்ளாமல் போகும் மனவக்ரம்.

"எப்படி இது ஏற்பட்டது?"

"பிறவிங்க..."

கடவுளே! உள்ளே கோபம் வெகுண்டது.

"சின்ன வயசிலேயே மெட்ராஸுக்கு இட்டாந்துட்டாங்க. நீங்க எழுத்துன்னு பார்க்கறது ப்ரெயில் மூலமா எங்களுக்குப் பரிச்சயமானது. பிம்பங்கள் உங்களுக்கு ஒரு வார்த்தையை அறிமுகப்படுத்தினா, எங்களுக்கு ப்ரெயில் பெர்ஃபோரேஷன்தான் வார்த்தையை அறிமுகப்படுத்தும். மான்னு சொன்னா ஒரு உருவம் உங்க மனசில் வரும் இல்லீங்களா, எங்களுக்கு ப்ரெயில் எஜக்டட் லெட்டர்ஸ் மட்டும்தான் உணர்வில் வரும்."

மான் என்று ஸீட் பலகையின் மேல் எழுதிக் காண்பித்தான்.

"எது வரைக்கும் படிச்சிருக்கீங்க?"

"சினிமா ஆம்ப்ளிஃபையர் மெகானிசம். ஐ. டி. ஐ. ல படிச்சிருக்கேங்க."

எனக்கு ஆச்சரியமானது.

"தொழில் தெரிஞ்சிருக்கிறது அவசியமில்லீங்களா? சினிமா ஒளி சம்பந்தப்பட்டதுன்னாலும் ஒலியும் சேர்ந்துதானுங்களே இருக்கு? சவுண்ட் ட்ரம் வழியா டேக்—அப்பிற்கு வர்ற சத்தத்தை வெச்சே சரியான முறைல படம் ஓடுதா இல்லையான்னு சொல்லிடுவேன்."

எனக்கு ஃபிலிம் புரொஜக்ஷனைப் பற்றி எல்லாம் தெரியாது. ஒரு நடுத்தர வர்க்கத்துப் படித்தவன் என்பதால் வங்கி நுழைவுத் தேர்வு, ரெயில்வேஸ் என்று குமாஸ்தாக்களைப் பிடித்து ஆணி அடிக்கும் நிறுவனங்களுக்கு விண்ணப்பங்கள் போட்டுக் கொண்டிருப்பவன். தொழில் என்பதைப் பற்றிய சிந்தனைக்கு இடமில்லை. காரணம் பயம். பணம் போய் விடுமோ என்று பயம்.

"இப்போ என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க?" என்றேன்.

"அதை ஏன் கேக்கறீங்க? கணக்கெடுத்தா மெட்ராஸ்ல ஐந்நூறு தியேட்டர்கள் இருக்கும் சார். என் தொழில் சுத்தம். வோவ் (wow) ஏன் வருது. ஃப்ளட்டர் ஏன் வருதுன்னு நிமிஷத்திலே கண்டுபிடிச்சு, ரெண்டு நிமிஷத்தில நின்னு போன

புரொஜக்டரைத் திரும்பவும் ஓட வைச்சிடுவேன். ஆனா என்னை நம்பி, யாரும் புரொஜக்டர் ஆபரேட்டரா சேர்த்துக்க மாட்டேங்கிறாங்க.''

''என்ன காரணம்?''

''நீ ஒரு குருட்டுப் பயதானேன்னுட றாங்க.''

எனக்குக் கூட இவன் புரொஜெக்டர் ஆபரேஷன் கற்றுக் கொள்ளாமல் வேறு எளிய துறைகளைக் கற்றுக் கொண்டிருக்கலாம் என்று தோன்றியது.

''நீங்க மச்சிங் புரொஃபஷனை சூஸ் பண்ணி இருக்கலாமே!''

''ஏன்?'' அவன் கொஞ்சம் காட்டமாகக் குரல் உயர்த்தினான்.

''சுலபமானதாச்சே.''

''மன்னிக்கணுங்க. நான் எந்தத் தொழிலையும் குறைச்சுச் சொல்றதா இல்லீங்க. எனக்கு இந்த மச்சிங் வேலை, பத்திலருந்து அஞ்சு வரைக்கும் கணக்கெழுதற வேலை— இதெல்லாம் பிடிக்கிறதில்லீங்க. தொழிலில் முன்னுக்கு வர்றது பார்வை சம்பந்தப்பட்டது இல்லைன்னு நிரூபிக்கணும். என்னால முடியும். இன்னிக்குக் கூட பாலாஜி சாரைப் பார்க்கத்தான் போயிருந்தேன். அவரோட ப்ரிவ்யூ தியேட்டருக்கு பெர்மனண்டா ஒரு புரொஜக்டர் ஆபரேட்டர் வேணுமாம். அவரை இன்னைக்குப் பார்க்க முடியலை. பார்க்கறப்போ, என்னைப் பத்தி, என் திறமையைப் பத்திச் சொல்லிடலாம்னு இருக்கேன். எனக்கு நம்பிக்கை இருக்கு.''

வேலையின்மை என்பது பொருளாதாரம் மற்றும் ஜனத்தொகைப் பெருக்கம் இவைகள் சம்பந்தப்பட்டதோடு மட்டுமல்லாமல், படித்தவர்களின் ஆர்வக் குறைவு மற்றும் சோம்பல் சம்பந்தப்பட்டது என்பதை அவன் உணர்த்தினான்.

''நீங்க என்ன பண்ணிக்கிட்டிருக்கீங்க?'' — என்னைக் கேட்டான்.

''வேலை தேடிக்கிட்டிருக்கேன்.''

''என்ன படிச்சிருக்கீங்க?''

''எம். ஏ.''

''ரிடன் எக்ஸாம்ஸ் எழுதறீங்களா?''


''டி. என். பி. எஸ்ஸியிலிருந்து ப்ரொபேஷனரி ஆஃபீஸர் எக்ஸாம் வரையில் எல்லாம் எழுதறேன்.''

இதற்குள் தாம்பாம் வந்து விட்டது.

''எனக்கு இப்படிப் போகணும்'' என்றேன்.

''ஆல் த பெஸ்ட். பார்க்கலாம்...'' — தடியால் உணர்ந்தபடி நகர்ந்தான்.

பார்க்கலாம் என்பது மிகச் சாதாரணமான வழக்குச் சொல். ஆனால் அதை அவன் உபயோகப்படுத்தியதில் எனக்கு வேறு அர்த்தங்கள் தோன்றின.



வீடு முழுவதும் தலைகீழாகப் புரட்டிப் போட்டுத் தேடியாயிற்று! கொலுசைத் தான் கண்டுபிடிக்கவே முடியவில்லை. நேற்றைய ஞாயிற்றுக்கிழமையை எப்படியெல்லாமோ கழிக்க வேண்டும் என்று கனவாய் இருந்தேன். ம்ஹூம்! இந்தக் கொலுசு போன துயரத்தில் எல்லாமே ரணமாய்த் தான் போயிற்று! நேற்றுப் பன்னிரண்டு மணி வரை ஆடி ஓடி விளையாடிக் கொண்டிருந்துவிட்டு ஒரு மணிக்குத் தூங்கிப் போனாள் என் மூன்று வயது மகள் அகிலா. விரித்துப் படுக்க வைக்கும் போதுதான் அகிலாவின் காலில் கொலுசு இல்லாததைப் பார்த்திருக்கிறாள். 'ஐயோ! வெள்ளிக் கொலுசாச்சே!' என்று பதறிப் போனாள்.

ஒவ்வொரு நினைவாய் மனத்தில் நிறுத்தினோம். காலையிலிருந்து குழந்தை எங்கெங்கெல்லாம் போனது என்று தடம் பார்த்துத் தேடினோம். குழந்தை உயரத்திற்கு இறங்கிக் குழந்தையிடம் இதமாய்க் கேட்டோம்.

''கொலுசை எங்கடா போட்டே அகிலா?''

''ம்ம்...''

''கொலுசுடா... கால்லெ போட்டு ஜங்... ஜங்னு நடப்பியே கொலுசு... அதை எங்கே...?''



''அங்க...''

''இப்படிப் பத்து இடம் கைகாட்டிற்று. தேடிப்பார்த்தோம். பக்கத்துவீட்டுக்குழந்தைகளிடம் போய் விசாரித்தோம். ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையைக் காட்டிற்று. முதலில் கேட்கும் கேள்விக்கு 'ஆமாம்' என்று தலையை ஆட்டுகிறது. பின்பு அதையே அழுத்தித் திரும்பக் கேட்டால் 'இல்லை' என்று பதில் வருகிறது! அகிலா மீது எனக்குக் கோபம் கோபமாக வந்தது. சரி. குழந்தையைக் கோபித்து என்ன ஆகப் போகிறது?''

''உனக்குத்தான் அறிவு வேணும் மீனா. இப்ப எதுக்குக் குழந்தைக்குக் கொலுசு போடுவானேன்? எங்கேயாவது வெளியிலே போனால் போட்டாப் போறாதாக்கும்?''

''பெட்டியிலேதான் போட்டு வைச்சிருந்தேன். நம்ம வேலைக்காரி, 'ஏம்மா கொலுசைப் பெட்டியிலே போட்டுப் பூட்டவா வாங்கினீங்க? குழந்தைக்குப் போட்டு நடக்க விடுங்கம்மா. குழந்தைங்க கொலுசு போட்டு ஜங்கு ஜங்குன்னு நடக்கிறதைப்



பார்த்துக்கிட்டே இருக்கலாம்மா'ன்னு சொன்னான். சரின்னுதான் நானும் எடுத்துப் போட்டேன்.''

''உனக்கு அறிவே இல்லை மீனா. சொன்னாக் கோபம் வந்திடுது. அவன் சொன்னான்னு போட்டேங்கிறியே. இப்ப அவள் கிட்டப் போய்க் கேட்கவா முடியும்?''

''எனக்கென்னவோ அவள் மேலேதான் சந்தேகம். அவள்தான் காலையிலே அகிலாவை, நடத்தி விளையாடிக்கிட்டிருந்தாள். ஸ்டூல்லே நிறுத்தி, 'எங்க குதி... குதி'ன்னு குழந்தை கூடக் குழைஞ்சுக்கிட்டிருந்தா. மெல்லக் கேட்டுப் பார்ப்போமா?''

''என்னமோ செய். கொலுசு போனது போனதுதான். எடுத்தாலும் உங்கிட்டக் கொடுப்பாங்களாக்கும்...!''

மீனா போய் வேலைக்காரியிடம் என்ன கேட்டாளோ, பத்துத் தேய்த்துக் கொண்டிருந்தவள் சண்டை போட வருகிறவள் போல முறுக்கிக் கொண்டு என்னிடம் வந்து விட்டாள்.

''ஏன்யா கொலுசை நான்தான் எடுத்திருப்பேன்னு சந்தேகப்படுறியா! நான் அந்த மாதிரி பொம்பளை இல்லைய்யா? உண்ட ஊட்டுக்கு ரெண்டகம் பண்ண மாட்டேன். எத்தனை ஊட்டுலெ என்னை நம்பி ஊட்டத் தொறந்தே போட்டுட்டுப் போறாக தெரியுமா! நீ நினைக்கிறது மாதிரி அப்படிப் பட்ட பொம்பளை நான் இல்லை...''

''இல்லை தங்கம்மா... இப்ப நீ எடுத்தேன்னா நான் சொல்றேன். கொலுசு காணோமே நீ பார்த்தியான்னுதான் கேட்டேன்...''

''அந்தம்மா பேச்சைப் பார்த்தா நான்தான் திருடிட்டேன்னுல்ல நினைச்சுப் பேசுறாங்க...''

''சரி நீ போய் வேலையப் பாரு. உன் கிட்டக் கேட்டதே தப்பு. குழந்தையை பாத்துக்கிறியே கொலுசு போயிடுச்சே, கவனிச்சியான்னு கேட்டாக் குத்தம்தீயேம்மா!'' — சற்றுக் கோபம் காட்டினேன்.

''எனக்குத் தாங்க முடியாதுய்யா. அந்தம்மாவை என் கூட அனுப்புய்யா என் ஊட்டத் தொறந்து காட்டுறேன். பாத்துக்கட்டும். சந்தேகம்னு வந்திடுச்சு... இனி சகலத்துக்கும் கஷ்டம்தான். முன்ன மாதிரி இனி இந்த ஊட்டுலெ வளைய வர்றது கஷ்டம். வாங்கம்மா தெருக் கோடியிலெதான் ஊடு. ஒரு எட்டு வந்து பார்த்துட்டீங்கன்னா எல்லாத்துக்கும் நிம்மதி பாருங்க'' என்று அழாத குறையாகப் பேசினாள்.

''சரி, நீ போ தங்கம்மா. பின்னாலெ பாத்துப்போம்...'' என்று அவளை அனுப்பி வைத்தேன்.

அந்தப் பிரச்னையை அதோடு விட்டிருக்கலாம். ஒழியட்டும் என்று தும்பு அறுத்திருக்கலாம். என் மனைவி பக்கத்து வீட்டுக்கார அம்மாவிடம் இது பற்றிப் புலம்பியிருக்கிறாள். அவள், 'எங்க ஊட்டுலெ ஒரு வெள்ளிக் குத்து விளக்கு காணாமல் போயிடுச்சு. அவதான் எடுத்துட்டு இல்லைன்னு சாதிச்சுட்டா. உடனே அவளை வேலையிலிருந்து ஒழிச்சு விட்டுட்டோம். இன்னும் கூட என் முகத்தைத் தைரியமாப் பார்க்கவே மாட்டாள்!' என்று நிறையப் போதித்து விட, எப்படியும் அவளை விட்டு வேலையிலிருந்து நிறுத்தியே ஆக வேண்டும் என்று திடமாக இருந்தாள் மீனா.

நானும் சரிதான் என்று அவளைக் கூப்பிட்டுக் கணக்குப் பார்த்துக் கத்தரிக்கலாம் என்று பேசினேன்.

''ஆக... என்னைத் திருடின்னே நினைச்சுட்ட இல்லே? இன்னும் எதை எதை விழுங்கப் போறாளோன்னுதானே இப்பவே தொரத்தறே? என் பிள்ளை சத்தியமா நான் அப்படியில்லைய்யா. அப்படி திருட்டுப் புத்தி இருந்திருந்தா நான் எப்பவோ அழிஞ்சு போயிருப்பேன்.''

''நீயா எதையாவது நினைச்சுக்காதே! நாங்க அப்படி நினைக்கலே. எங்க உறவுக்காரப் புள்ள ஒண்ணு வருது. அதான் இனி வேலைக்கு ஆள் வேண்டாம்னு உன்னை நிறுத்துறோம்.''

பரிசு: கலர் டீ.வி.!

டீ. வி. — விடியோ பக்கங்கள் கலகலப்பாக அமைந்து வருகின்றன. தொடர்ந்து எழுதுங்கள்! டீ. வி. அல்லது விடியோ தொடர்பான எந்த ஒரு ரசமான சம்பவம் அல்லது டீ. வி. நிகழ்ச்சி பற்றிய ஒரு விமர்சனம் ரத்தினச் சுருக்கமாக எழுதலாம். விளம்பரங்களைக் கூட விட்டு வைக்காமல் உங்கள் கருத்தைச் சொல்லலாம். படிக்கும் போது சிரிப்பு வருகிற மாதிரி எழுதுங்கள். பிரசுரமானால் பரிசு ரூ. 25/—. தவிர பிரசுரமாகும் அனைத்துக்கும் வரிசை எண் தரப்பட்டு ஆறு மாதம் சென்று குலுக்கல் முறையில் ஒருவருக்குக் கலர் டீ. வி. பரிசு!

மிகச் சமீபத்திய கல்கி இதழின் தலையங்கப் பக்கத்தில் உள்ள தேதிப் பகுதியை மட்டும் மூன்று வரிகள் வெட்டி எடுத்து நீங்கள் எழுதும் துணுக்கு அல்லது விமர்சனத்துக்கு மேல் புறம் ஒட்டி அனுப்புங்கள்.



நிம்மதியான விடுமுறை நாட்கள் !

கடந்த வருஷம் நான் விடுமுறையில் போனபோது, என்னை பிக்பாக்கெட் அடித்து, ஆரம்பத்திலேயே எனது விடுமுறையைக் கெடுத்து விட்டார்கள். அதனால்தான் இந்த வருஷம் நான் ஸ்டேட் பாங்க் டிராவலர்ஸ் செக்குகளை எடுத்துச் செல்கிறேன். இவை திருட்டுப் போனாலும், அழிந்து போனாலும், காணாமல் போனாலும் கவலையில்லை. எப்படி ஆனாலும் என்னுடைய பணம் பாதுகாப்பாய் இருக்கும். ஏனெனில் என்னைத் தவிர வேறு எவரும் டிராவலர்ஸ் செக்கைப் பணமாக மாற்ற முடியாது. இதற்குக் கால வரையறை இல்லை. இவைப் பணமாக மாற்றப்படாமல் பல வருஷங்களுக்கும் என்னிடம் இருக்கலாம்.

ஆகவே அடுத்தமுறை நீங்கள் பயணம் செய்யும்போது ஸ்டேட் பாங்க் டிராவலர்ஸ் செக்குகளை எடுத்துச் செல்லுங்கள். பணத்திற்குப் பதிலாக எடுத்துச்செல்ல இவை மிகச் சிறந்தவை. ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் அதன் துணை பாங்குகளின் 11,000-க்கும் மேலான கிளைகள் உட்பட இந்தியாவெங்கிலும் 35,000-க்கும் மேலான இடங்களில் இவற்றை நீங்கள் பணமாக மாற்ற ஏதுவாகும்.



ஸ்டேட் பாங்க்

ஸ்டேட் பாங்க் டிராவலர்ஸ் செக்குகள்
– கவலையற்ற நிம்மதியான விடுமுறை நாட்களுக்கு.

CHAITRA-B-SBI 1647

''அப்படின்னா அது வேற மாதிரிய்யா. திருடின்னு பட்டம் கட்டிட்டீங்கன்னா அது என்னை சாவு வரைக்கும் வுடாதுய்யா. கொஞ்சம் கொஞ்சமாக் கொன்னு போடும். நான் கொலுசைத் தொடலைய்யா. எந்தக் கோவில்லே வேண்டுமானாலும் சத்தியம் பண்றேன்.''

அவள் அதோடு விடவில்லை. வீட்டிலிருந்து ஒரு சின்னக் குழந்தையைத் துணியால் போர்த்தித் தூக்கிக் கொண்டு வந்தாள். நடு ஹாலில் போட்டு என் பிள்ளை சத்தியமா நான் உங்க கொலுசை எடுக்கலைன்னு பச்சப் புள்ளையைத் தாண்டிச் சத்தியம் செய்தாள்.

நான் அப்படியே உறைந்து போனேன். உடனே அவள் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு படியிறங்கி விட்டாள். அதன்பின் வரவே இல்லை.

மறுநாள் என் அறையைச் சுத்தம் செய்தேன். 'சலிங்' என்று ஒரு சத்தம். பார்த்தால் காணாமல் போன கொலுசு! என் மகள் அகிலாவின் கொலுசுதான். என் மனைவி அதைப் பார்த்ததும் அப்படியே ஆடித்தான் போனாள்.

''பாவம்ங்க. அந்தத் தங்கம்மாளை ரொம்பவும்தான் படுத்திட்டோம். அவள் பிள்ளையை போட்டுத் தாண்டின பாவம் நமக்குத்தாங்க. இனி என்னங்க பண்றது? அந்தப் பாவம் நம்மைச் சும்மா விடாதுங்க...''

''ரிலாக்ஸ்... பதற்றப்படாதே மீனா. இப்ப என்னதான் பண்ணணுங்றே?''

''பாவம்ங்க. அவளுக்கு நாம ஏதாவது பரிகாரமாப் பண்ணத்தான் வேணும்.''

''நாமும்தான் எவ்வளவோ தேடிப் பார்த்தோம். அப்பக் கிடைக்கவே இல்லை. சரி திரும்ப வேண்டுமானால் அவளை வேலைக்கு வரச் சொல்லேன்.''

''அது போதாதுங்க. பளிச்சுன்னு பிள்ளையைப் போட்டுத் தாண்டினாளே! அந்த தோஷம் கழிக்கணும்ங்க... இதே மாதிரி ஒரு கொலுசு எவ்வளவு ஆகும்? ஒன்று எடுத்து அவளோட குழந்தைக்குக் கொடுக்கலாமா?'' என்று என் மனைவி கேட்கவும் உடனே நான் சம்மதித்தேன்.

எங்களைப் பார்த்ததும் தங்கம்மாளுக்குக் கைகால் ஓடவில்லை. வாய் நிறையப் படபடப்பாய் வரவேற்றாள். எங்கள் குழந்தைப் பற்றி விசாரித்தாள்.

''கொலுசு கிடைச்சுதாய்யா?''

எனக்குப் பதில் சொல்லவே வெட்கமாக இருந்தது. ஒரு மாதிரி சப்பைக் கட்டாய்ப் பதில் சொன்னேன். அவ்வளவுதான், அவள் முகத்தில் ஒரு பிரகாசம்!

''இப்பத்தான்யா எனக்குச் சந்தோஷம். கொலுசு கிடைக்கணும்னு எத்தனை தெய்வங்களைக் கும்பிட்டிருப்பேன் தெரியுமாய்யா!''

''தப்பா நினைச்சுக்காதே தங்கம்மா, ஏதோ பதற்றத்துலெ உன்னை விசாரிக்க அது தப்பாயிடுச்சு. தலை கால் புரியாம பேசிட்டோம்.''

''வுடுய்யா... கொலுசு கெடச்சதே பெரிசு.''

''தங்கம்மா நாளையிலே இருந்து நீ வேலைக்கு வரணும். எங்கே உன் குழந்தை... நடால்னு போட்டுத் தாண்டினியே எங்க அது? அதுக்குப் பரிகாரமா இந்தக் கொலுசை அந்தக் குழந்தைக்குப் போடு...'' என்று கொலுசை நீட்டினேன். அவ்வளவுதான் தங்கம்மாள் பொங்கி விட்டாள். அழுகை நிறுத்தாது பேசினாள்.

''வேண்டாம்யா, என் பிள்ளைக்கு அந்த பாக்யம் இல்லைய்யா...'' என்று படுத்துக் கிடக்கும் பிள்ளையைத் தூக்கி நிறுத்தினாள். இடுப்புக்குக் கீழே அப்படியே சூம்பிப் போய்க் குச்சி மாதிரி... இளம் பிள்ளைவாதமாம்.

''அதான் உன் வூட்டுக்குப் போர்த்தித் தூக்கிட்டு வந்தேன். நடக்க முடியாதுய்யா இதாலெ. தத்தக்கா புத்தக்கானு குழந்தைங்க நடக்கிறதைப் பார்க்கிறதே அலாதி சுகம்யா! நடந்து பழகுகிற குழந்தைங்களுக்கு கொலுசு சத்தம்தான் உரம்.. என் பிள்ளைக்கு அந்த பாக்யம் இல்லையேன்னுதான், உங்க வூட்டுக் குழந்தைக்குக் கொலுசு போடச் சொல்லி நடக்க விட்டுப் பார்த்தேன். அதான் கொலுசு காணலைன்ன உடனே என் பேர்லெ சந்தேகப்பட வெச்சிடுச்சு...''

என்னுள் ஒரு இடி இறங்கிற்று. என்ன பேசுவது என்று தெரியாது அந்தக் குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தேன். என் குழந்தை நடப்பது என் கண்ணில் மிதந்தது. கடவுளே இதுக்கும் கண் தொறக்கப்படாதா என்று கை கூப்பினேன். என் மனைவியும் தான்!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி — 1989

முதல் பரிசு ரூ. 1500; இரண்டாவது பரிசு ரூ. 750; மூன்றாவது பரிசு (இரு கதைகளுக்குத் தலா ரூ. 375 வீதம்) ரூ. 750.

கதைகளை அனுப்ப வேண்டிய கடைசித் தேதி: ஜூன் 15.

போட்டி பற்றிய முழு விவரங்களை அறியச் சென்ற இதழ்க் கல்கியைப் பாருங்கள், அல்லது அடுத்த இதழ்க் கல்கிக்காகக் காத்திருங்கள்.

— ஆசிரியர்



அத்தியாயம் 37

கடம்பூரில் கலக்கம்

ஆதித்த கரிகாலன் கடம்பூர் மாளிகைக்கு வந்ததிலிருந்து அம் மாளிகையில் நிரந்தரமாக வசித்தவர்களும் விருந்தினராக வந்தவர்களும் முள்ளின்மேல் நிற்பவர்கள் போலவும் நெருப்பின்மேல் நடப்பவர்கள் போலவும் காலங் கழிக்க வேண்டியிருந்தது. இளவரசரின் நாவிலிருந்து எந்த நிமிஷத்தில் எந்தவிதமான அஸ்திரம் புறப்படும் என்று யாராலும் ஊகிக்க முடியவில்லை. ஆகையால் எல்லாரும் தவியாய்த் தவித்துக் கொண்டிருந்தார்கள்.

சோழ சிம்மாசனத்தில் மதுராந்தகனை ஏற்றி வைப்பதற்குச் செய்யப்படும் சதியாலோசனை பற்றிக் கரிகாலன் அடிக்கடி ஜாடைமாடையாகக் குறிப்பிட்டு மற்றவர்களைத் துடிதுடிக்கச் செய்து வந்தான். பழுவேட்டரையரால் இதைப் பொறுக்க முடியவில்லை. சிற்றரசர்களின் அபிப்பிராயத்தைக் கரிகாலனிடம் வெளிப்படையாகச் சொல்லிவிட வேண்டியதுதான் என்று சம்புவரையரிடம் வற்புறுத்தினார். சம்புவரையரோ, "கொஞ்சம் பொறுங்கள். எப்படியும் நமது விருந்தாளியாக வந்திருக்கிறான். வெறும் முரடனாகவும் இருக்கிறான். ஒன்று நினைக்க வேறொன்றாக முடிந்தால் என்ன செய்கிறது? நல்ல சமயம் பார்த்துச் சொல்வோம்" என்று தள்ளிப் போட்டுக் கொண்டேயிருந்தார்.

எப்படி அந்தப் பேச்சை ஆரம்பிப்பது என்ற தர்மசங்கடத்தை அவர்களுக்கு வைக்காமல் ஆதித்த கரிகாலனே ஒரு நாள் எல்லாரும் சேர்ந்திருந்த சமயத்தில் பட்டவர்த்தனமாக அதைப் பற்றிக் கேட்டு விட்டான்.

"பழுவூர்ப் பாட்டனிடமும் கடம்பூர் மாமனிடமும் ஒரு முக்கியமான விஷயத்தில் யோசனை கேட்பதற்காகவே நான் இங்கு வந்தேன். அதை இப்போது கேட்டு விடுகிறேன். மூன்று வருஷங்களுக்கு முன் என் தகப்பனார் என்னைச் சோழ ராஜ்யத்தின் பட்-

அமரர் கல்கி

டத்து இளவரசனாக்கிப் பகிரங்கமாக முடி சூட்டினார். அதற்கு நீங்கள் எல்லாரும் சம்மதம் கொடுத்தீர்கள். இப்போது சக்கரவர்த்தி தம் அபிப்பிராயத்தை மாற்றிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. மதுராந்தகனைச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து முடிசூட்ட வேண்டும் என்று விரும்புகிறாராம். அதற்காகவே தஞ்சாவூருக்கு வரும்படியாக எனக்கு அழைப்புக்குமேல் அழைப்பு அனுப்பிக் கொண்டிருக்கிறார். நானும் போகாமல் தட்டிக் கழித்துக் கொண்டிருக்கிறேன். எதற்காகத் தஞ்சாவூர் போக வேண்டும்? போய், என் தந்தையின் வார்த்தையை நேருக்கு நேர் ஏன் புறக்கணிக்க வேண்டும்? அதைவிடப் போகாமலிருந்து விடுவதே நல்லது அல்லவா? பழுவூர்ப் பாட்டா! கடம்பூர் மாமா! நீங்கள் பெரியவர்கள். எல்லா நியாயமும் தெரிந்தவர்கள். நீங்களே சொல்லுங்கள். இராஜ்யத்தை மதுராந்தகனுக்கு விட்டுக் கொடுத்து விடும்படி என் தந்தை இத்தனை காலத்துக்குப் பிறகு என்னைக் கேட்பது நியாயமாகுமா? அதை நான் மறுதளித்தல் குற்றமாகுமா?'' என்று ஆதித்த கரிகாலன் திட்ட வட்டமாகக் கேட்டதும், எல்லாருமே திகைத்துப் போனார்கள்.



பழுவேட்டரையர் தொண்டையைக் கனைத்துக் கொண்டு, பதில் சொல்லச் சிறிது காலம் கடத்தலாம் என்று எண்ணி, ''கோமகனே! இந்த விஷயமாகத் தங்கள் திருக்கோவலூர்ப் பாட்டனை யோசனை கேட்டிருப்பீர்களே? மலையமான் என்ன சொல்லுகிறார்?'' என்றார்.

''ஆகா! அந்தக் கிழவனாரின் இயல்புதான் உங்களுக்கெல்லாம் தெரியுமே? அவருடைய பேரப் பிள்ளை சிம்மாதனத்தை இன்னொருவனுக்கு விட்டுக் கொடுத்துவிட அவர் சம்மதிப்பாரா? அதைக் காட்டிலும் என்னையும் என்னைப் பெற்ற தாயையும் சேர்த்து அவர் வெட்டிப் போட்டு விடுவார்! இப்போதே மலையமான் சைன்யம் சேர்க்கத் தொடங்கி விட்டார்; — அவருடைய பேரனுடைய சிங்காதன உரிமையை நிலைநாட்டுவதற்காக! ஆனால் நான் அவருடைய பேச்சைக் கேட்டு மட்டும் நடக்கப் போவதில்லை. நீங்கள் எல்லாரும் எப்படிச் சொல்கிறீர்களோ, அப்படி நடந்து கொள்வேன்!'' என்று கரிகாலன் மிக்க சாதுப் பிள்ளையைப் போல் கூறினான்.

இதனால் ஏமாந்து போன பழுவேட்டரையர் ''மலையமானைப் போல் தந்தையைத் தனயன் எதிர்க்கும்படி தூண்டி விடக்கூடியவர்கள் நாங்கள் அல்ல. சக்கரவர்த்தியின் கட்டளை எதுவாயிருந்தாலும் அதை அனுசரித்து நடக்க நாம் எல்லாரும் கடமைப் பட்டவர்கள். ஆனால் நியாயம் இன்னது என்பதைச் சொல்லும் பாத்தியதை நமக்கு உண்டு. சக்கரவர்த்தி இந்த விஷயமாகச் சொல்வதில் நியாயமே இல்லையென்று சொல்ல முடியாது. இந்தச் சோழ ராஜ்யத்தின் மீது மதுராந்தகத் தேவருக்கு உரிமையே

கிடையாது என்றும் சொல்லுவதற்கில்லை. இளவரசே! தாங்கள் கேட்கிறபடியினால் எங்கள் மனத்தை விட்டுச் சொல்கிறோம். முடிவு தங்கள் இஷ்டத்தைப் பொறுத்தது. இந்த விவாதத்தை வளரும்படி விடுவது இராஜ்யத்துக்கு மிக்க அபாய கரமானது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகையால், ஏதேனும் ஒரு சமரச முடிவுக்கு வருவது நல்லது. சோழ ராஜ்யம் இப்போது முன்னைப்போல் இரண்டு வெள்ளாறுகளுக்கு மத்தியில் குறுகிக் கிடக்கவில்லை. குமரி முனையிலிருந்து கிருஷ்ணை நதி வரையில் பரவிப் படர்ந்திருக்கிறது. இதை இரண்டாகப் பிரித்தாலும் ஒவ்வொன்றும் பெரிய இராஜ்யமாக இருக்கும். அவ்விதம் கொள்ளிடம் நதிக்குத் தெற்கேயுள்ள ராஜ்யத்தை மதுராந்தக தேவருக்கும் வடக்கேயுள்ள பகுதியைத் தங்களுக்கும் உரியதென்று பிரித்துக் கொடுப்பது நியாயமாயிருக்கும். இது எங்கள் முடிவான கருத்து. தாங்கள் இதை ஒப்புக் கொண்டால் மேலே செய்ய வேண்டியதைச் செய்யலாம், சக்கரவர்த்தியை இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்கச் செய்யும் பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன்!'' என்றார் பழுவேட்டரையர்.

ஆதித்த கரிகாலன் அப்போது கலகலவென்று சிரித்தது பழுவேட்டரையருடைய வயிற்றில் அனலை மூட்டியது.

''பாட்டா! சோழ ராஜ்யத்தை இரண்டாகப் பிரித்துத் தெற்கு இராஜ்யத்தில் பழுவேட்டரையர்களும் வடக்கு இராஜ்யத்தில் சம்புவரையர்களும் அதிகாரம் செலுத்துவது சரியான பங்கீடுதான். உங்கள் இரு குடும்பங்களும் என் பாட்டனுக்குத் தகப்பனார் காலத்திலிருந்து செய்து வந்திருக்கும் சேவைக்கு உரிய வெகுமதிதான். ஆனால் இராஜ்யத்தைப் பிரிப்பதில் எனக்குச் சிறிதும் விருப்பமில்லை. வழிவழியாக வந்த இராஜ்யத்தைப் பங்கிட்டுக் கொள்வதும் ஒன்றுதான்; தாலி கட்டிய மனைவியைப் பங்கிட்டுக் கொள்வதும் ஒன்றுதான்! கிழவர்களாகிய உங்களுக்கு அது சம்மதமாயிருக்கலாம்! எனக்குச் சம்மதம் இல்லை!'' என்று கரிகாலன் கூறிய போது, பெரிய பழுவேட்டரையரின் கண்களில் தீப்பொறி பறந்தது. அவர் கொதிப்புடன் எழுந்து நின்றார். உடை வாளை உறையிலிருந்து எடுப்பதற்கும் ஆயத்தமானார்.

அச்சமயத்தில், கரிகாலன் ''பாட்டா! என்ன, இதற்குள் எழுந்து போகப் பார்க்கிறீர்கள்? என்னுடைய யோசனையை முழுதும் கேட்டு விட்டுப் போங்கள். சோழ ராஜ்யத்தைப் பிரிப்பதற்கு எனக்குச் சம்மதமில்லை. என் குலத்து முன்னோர்களும், நீங்களும், உங்கள் முன்னோர்களும் ஐந்து தலைமுறையாகப் பாடுபட்டு எத்தனையோ வீராதி வீரர்களின் உயிர்களைப் பலி கொடுத்துச் சோழ ராஜ்யம் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது. இதை இரண்டாகப்




பிரித்துச் சிறிய பகுதிகளாக்குவது பாவமாகும். வீர சொர்க்கத்திலுள்ள இராஜாதித்தர் முதலிய நம் முன்னோர்கள் நம்மைச் சபிப்பதற்கு ஏதுவாகும். ஆகையால் அந்த யோசனையை விட்டு விடுங்கள். இந்தப் பெரிய சோழ ராஜ்யம் முழுவதையும் மதுராந்தகனுக்கே விட்டுக் கொடுத்து விட நான் ஆயத்தமாயிருக்கிறேன். அதற்கு நியாயமும் உண்டு. என் பெரிய பாட்டனாரின் மகன் மதுராந்தகன். ஆகையால் என் தந்தைக்குப் பதிலாகவே மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டியிருக்க வேண்டும். பராந்தகச் சக்கரவர்த்தியின் ஏற்பாட்டினால் என் தந்தை முடி சூடிக் கொள்ள வேண்டியதாயிற்று. அந்தத் தவறு அவரோடு போகட்டும். 'தந்தைக்குப் பிறகு மகன்' என்ற நியதிப்படி எனக்கு இந்த ராஜ்யத்தின் பேரில் பூரண உரிமை இருந்தாலும் அதை விட்டுக் கொடுத்து விடுகிறேன். ஆனால் அதற்கு ஒரு நிபந்தனை இருக்கிறது. வடதிசையின் மீது படை எடுத்துச் செல்ல மூன்று லட்சம் போர்வீரர் கொண்ட சைன்யம் எனக்கு வேண்டும். அந்த மாபெரும் சைன்யத்துக்கு வேண்டிய தளவாடச் சாமான்களும் சாமக்கிரியைகளும் ஒரு வருஷத்துக்கு உணவுப் பொருள்களும் திரட்டித் தர வேண்டும். மா கடலில் செல்லக் கூடிய முந்நூறு பெரிய மரக்கலங்களும் வேண்டும். பார்த்திபேந்திரனைக் கப்பல் படைத் தலைவனாக்கிக் கடலோரமாக வரச் செய்துவிட்டு, நான் தரைமார்க்கமாக வடநாட்டின் மீது படை எடுத்துச் செல்வேன். கங்கை நதியின் முகத் துவாரத்தில் நானும் பார்த்திபேந்திரனும் சந்திப்போம். பிறகு மேலும் வடக்கே போவோம். என் குலத்து முன்னோன், என் பெயர் கொண்ட கரிகால் வளவன், இமயமலை மீது புலிக்கொடியை நாட்டினான் என்று கவிஞர்கள் பாடி வைத்திருக்கிறார்கள். என் முன்னோர் சாதித்ததை நானும் இப்போது மறுபடியும் சாதிப்பேன். என்னுடைய வாள் வலி கொண்டும், எனக்குத் துணை வரும் வீரர்களின் தோள் வலி கொண்டும் கிருஷ்ணை நதிக்கு வடக்கே நானாகக் கைப்பற்றும் நாடுகளுக்குச் சக்கரவர்த்தியாவேன். அன்றி, போரில் மடிந்தால், சோழ குலத்தின் வீரப் புகழை நிலை நாட்டினோம் என்ற மகிழ்ச்சியுடன் வீர சொர்க்கம் அடைவேன். பழுவூர் பாட்டா! கடம்பூர் மாமா! என்ன சொல்கிறீர்கள்? இந்த நிபந்தனையை நிறைவேற்றித் தர நீங்கள் ஒப்புக் கொள்வீர்களா?''

இவ்விதம் கம்பீரமாகக் கேட்டுவிட்டுக் கரிகாலன் நிறுத்தினான். கிழவர்கள் இருவரும் திகைத்துப் போனார்கள். பழுவேட்டரையர், தடுமாற்றத்துடன், ''இளவரசே! தங்களுடைய நிபந்தனையை ஒப்புக் கொள்ள நாங்கள் யார்? எங்களுக்கு என்ன உரிமை? சக்கரவர்த்தியை அல்லவா கேட்க வேண்டும்!'' என்றார்.

கரிகாலன் கொதித்து எழுந்து, இடிமுழக்கக் குரலில் கர்ஜனை செய்தான்:—

''பாட்டா! சக்கரவர்த்தியின் பெயரைச் சொல்லி யாரை ஏமாற்றலாம் என்று பார்க்கிறீர்கள்? என்னை ஏமாற்ற முடியாது! என் தந்தையை நீங்கள் அரண்மனையில் சிறைப்படுத்தி நீங்கள் ஆட்டி வைத்தபடி ஆடும் பொம்மையாக வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்! அது எனக்குத் தெரியாது என்றா எண்ணினீர்கள்? சின்னப் பழுவேட்டரையர் அநுமதியின்றி யாராவது என் தந்தையைப் பார்க்க முடியுமா? என் தம்பியை ஈழத்திலிருந்து சிறைப்படுத்திக் கொண்டு வருவதற்கு என் தந்தை கட்டளை போட்டது சக்கரவர்த்தியின் சொந்த விருப்பத்தினாலா? உங்கள் கட்டாயத்தினாலா? தேச மக்களின் கண்ணுக்குக் கண்ணான அருமை மகனை, வீராதி வீரனை, சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி எந்தத் தகப்பனாவது இஷ்டப்பட்டுக் கட்டளையிடுவானா? அருள்மொழியைச் சிறைப்படுத்திக் கொண்டு வந்து கடலில் மூழ்க அடித்துக் கொன்று விட்டதாக உங்கள் பேரில் இன்று சோழ நாட்டு மக்கள் எல்லாரும் ஆத்திரப்பட்டுக் கொதித்துக் கொண்டிருக்கிறார்கள்...''

''இளவரசே! அத்தகைய னது? சொன்னவனுடைய நாவைத்
அபாண்டமான பழியை யார் சொன் துண்டித்து அவனையும் கண்டதுண்ட



மாக்குவேன்.....!'' என்று பழுவேட்டரையர் அலறினார்.

''பழி சொல்லுகிறவர் ஒருவராயிருந்தால் நீங்கள் கண்ட துண்டம் செய்யலாம். பதினாயிரம், லட்சம், பத்து லட்சம் பேர் சொல்லுகிறார்கள். அவ்வளவு பேரையும் நீங்கள் தண்டிப்பதாயிருந்தால் சோழ நாடு பிணக்காடாகவும் சுடுகாடாகவும் மாறிவிடும். சிவ பக்தனாகிய மதுராந்தகன் ஆட்சி புரிவதற்குச் சோழ நாடு தகுந்த இராஜ்யமாயிருக்கும்! ஆனால் பாட்டா! அந்தப் பேச்சை நான் நம்பவில்லை. மக்கள் அறிவற்ற மூடர்கள். ஆராய்ந்து பாராமல் ஒருவன் கட்டி விட்ட கதையையே மற்றவர்களும் திருப்பிச் சொல்லிக் கொண்டிருப்பார்கள். சோழ குலத்துக்குப் பரம்பரைத் துணைவர்களான நீங்கள் அத்தகைய படு பாதகத்தை ஒரு நாளும் செய்திருக்க மாட்டீர்கள். அருள்மொழி கடலில் மூழ்கியிருந்தால் அது அவனுடைய தலைவிதியின் காரணமாகத்தான் இருக்க வேண்டும். 'மூன்று உலகமும் ஆளப் பிறந்தவன்' என்று கூறி வந்த ஜோதிடர்கள், ஆரூடக்காரர்கள், ரேகை சாஸ்திரிகள் வாயில் மண்ணைப் போடுவதற்காகவே அவன் கடலில் முழுகி மாண்டிருக்க வேண்டும். பாட்டா! நீங்கள் எவ்வளவு பெரிய வீராதி வீரராயிருந்தாலும் நடுக்கடலில் சுழிக் காற்றை வரவழைப்பதற்கும் கப்பலின் பாய் மரத்தின் மீது இடி விழச் செய்வதற்கும் உங்களால் கூட முடியாது. ஒரு வேளை அது பாண்டிய நாட்டு மந்திரவாதிகளின் காரியமாயிருக்கலாம். நீங்கள் அதற்குப் பொறுப்பில்லை. ஆகையால் அருள் மொழியின் கதிக்கும் நீங்கள் பொறுப்பாளியில்லை. ஆனால் 'சக்கரவர்த்தியைக் கேட்டுச் சொல்ல வேண்டும்' என்று மட்டும் இனி என்னிடம் சொல்லாதீர்கள். அப்புறம், அந்த அன்பில் பிரம்மராயனைக் கேட்டுச் சொல்ல வேண்டும் என்று கூடச் சொல்வீர்கள். சக்கரவர்த்தியும் முதன் மந்திரியும் ஏதோ அந்தப் பட்டங்களைச் சுமந்து கொண்டிருக்கிறார்கள். உங்கள் விருப்பத்தை மீறி அவர்கள் எதுவும் செய்ய முடியாது. பழுவூர் இளைய பாட்டி நந்தினி தேவியைக் கேட்டுச் சொல்கிறேன் என்று வேணுமானால் சொல்லுங்கள்....!''

இச் சமயம் கந்தமாறன் குறுக்கிட்டு ''ஐயா! எங்கள் வீட்டுக்கு விருந்தாளியாக வந்திருப்பவர்களை.....'' என்று ஏதோ தடுமாற்றத்துடன் இரைந்து சொல்ல ஆரம்பித்தான்.

கரிகாலன் அவன் பக்கம் கண்களில் தீ எழ நோக்கி, முப்புரம் எரித்த சிவனைப்போலச் சிரித்து, ''கந்தமாறா! இது உங்கள் வீடா? மறந்து விட்டேன்! கொல்லி மலை வல்வில் ஓரியின் வம்சத்தில் பிறந்த வீராதி வீரன் நீ என்பதையும் மறந்து விட்டேன். உன் வீட்டில், அதுவும் நீ இருக்கும் இடத்தில், கொஞ்சம் பயந்துதான் பேச வேண்டும்! தவறாக என்ன சொல்லி விட்டேன்? உன் வீட்டு விருந்தாளிகளை என்ன செய்து விட்டேன்?..... கந்தமாறா! ஏன் உன் கைகால் நடுங்குகிறது? ஈழத்தில் பரவியிருக்கும் நடுக்கு ஜுரம் உனக்கும் வந்து விட்டதா? நீ ஈழத்துக்குக் கூடப் போகவில்லையே?'' என்றான்.

வந்தியத் தேவன் அப்போது, ''கோமகனே! கந்தமாறனுக்கு நடுக்கு ஜுரம் இல்லை. தாங்கள் பழுவூர் 'இளைய ராணியைப் பாட்டி என்று சொன்னதில் அவனுக்குக் கோபம்!'' என்றான்.

கந்தமாறன் வந்தியத் தேவனைக் குரோதத்துடன் பார்த்துக் கொண்டு கத்தியை எடுக்கத் தொடங்கினான்.

பார்த்திபேந்திரன் அவன் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்துக் காதோடு ஏதோ சொன்னான். கந்தமாறன் அடங்கினான். அவனுடைய உடல் மட்டும் சிறிது நேரம் நடுங்கிக் கொண்டிருந்தது.

கரிகாலன் அவனைப் பார்த்துச் சிரித்து விட்டு, பழுவேட்டரையர் பக்கம் திரும்பி ''பாட்டா! இளங்காளைகள் இப்படித்தான் கட்டுக்கடங்காமல் சில சமயம் துள்ளிக் குதிப்பார்கள். அவர்களை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம். நீங்கள் எனக்குப் பாட்டன் முறை; ஆகையால் இளைய

ராணி எனக்குப் பாட்டிதானே? அப்படி நான் அழைப்பதில் என் பாட்டிக்கும் வருத்தம் இல்லை; தங்களுக்கும் வருத்தமில்லை. இந்தச் சிறு பிள்ளைகளுக்கு எதற்காக ஆத்திரம் பொத்துக் கொண்டு வருகிறது? போனால் போகட்டும்! நான் ஆரம்பித்த விஷயத்தை விட்டு விட்டு எங்கேயோ போய் விட்டேன். என் தந்தை — சக்கரவர்த்தியின் பேரில் தாங்கள் பாரத்தைச் சுமத்த வேண்டாம். தாங்கள் சம்மதித்தால் என் தந்தையும் சம்மதித்தாற் போலத்தான். பொக்கிஷம் தங்கள் கையில் இருக்கிறது. வடபுலத்துக்குப் படையெடுத்துப் போகிறேன் என்றால், சோழ நாட்டிலிருந்து மூன்று லட்சம் என்ன, முப்பது லட்சம் வீரர்கள் போட்டியிட்டுக் கொண்டு வருவார்கள். முந்நூறு கப்பல்களைச் சேகரித்துக் கொடுப்பதிலும் கஷ்டம் ஒன்றுமில்லை. தாங்கள் சம்மதிக்க வேண்டும்; மதுராந்தகத் தேவனும் சம்மதிக்க வேண்டும்! அவ்வளவுதான்! என்ன சொல்லுகிறீர்கள்?'' என்று கரிகாலன் நிறுத்தினான்.

திணறித் திண்டாடித் திக்கு முக்காடிப் போன பழுவேட்டரையர் தொண்டையை மறுபடியும் கனைத்துக் கொண்டு கூறினார்:— ''கோமகனே! தங்கள் அதிசயமான விருப்பத்துக்கு நான் சம்மதித்தாலும், மதுராந்தகத் தேவரின் சம்மதம் எப்படியும் வேண்டும் அல்லவா? சக்கரவர்த்தியிடம் விடை பெற்றுக் கொள்ளாமல் தாங்கள் திக்விஜயத்துக்குப் புறப்பட முடியுமா? ஆகையால் எல்லாருமாகத் தஞ்சாவூருக்குப் போவோம்.....''

''அது மட்டும் முடியாது, பாட்டா! தஞ்சாவூருக்குப் போன பிறகு என் தந்தை வேறு விதமாகக் கட்டளையிட்டால் என்னால் அதை மீற முடியாமற் போய் விடும். அப்புறம் அங்கே என் அன்னை மலையமான் மகள், இருக்கிறாள். என் சகோதரி இளைய பிராட்டி இருக்கிறாள். அவர்களுக்கு நான் முடிதுறந்து தேசாந்தரம் செல்வது சம்மதமாயிராது. அவர்கள் பேச்சை மீறுவதும் கஷ்டமாயிருக்கும். பாட்டா! இந்த விஷயம் இந்தக் கடம்பூர் மாளிகையில் தான் முடிவாக வேண்டும். தாங்கள் தஞ்சைக்குப் போய் மதுராந்தகனை இங்கே அழைத்து வாருங்கள். நமக்குள் பேசி முடிவு செய்த பிறகு தந்தையிடம் தெரிவிக்கலாம். படையெடுப்புக்கு எல்லாம் ஆயத்தமான பிறகு நான் தஞ்சைக்கு வந்து என் பெற்றோர்களிடம் விடை பெற்றுக் கொண்டு கிளம்புகிறேன். அல்லது மதுராந்தகனுக்கு இப்போதே பட்டம் கட்டிவிட்டு என் பெற்றோர்கள் காஞ்சிக்கு வரட்டும். அங்கே நான் கட்டியிருக்கும் பொன் மாளிகையில் அவர்களை இருக்கச் செய்துவிட்டு நான் புறப்படுகிறேன்'' என்றான்.

பழுவேட்டரையர் சம்புவரையரைப் பார்த்தார். சம்புவரையரோ கூரை மேட்டைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரிடமிருந்து உதவி ஒன்றும் கிடைப்பதற்கில்லையென்று கண்டு, பழுவேட்டரையர் ''கோமகனே! தங்களுடைய கட்டளைக்குமாறாக நான் என்ன சொல்ல முடியும்?'' என்றார்.

''கட்டளை என்று சொல்லாதீர்கள், பாட்டா! சோழ சாம்ராஜ்யத்தின் சேவையில் தலை நரைத்துப் போன தங்களுக்கு இந்தச் சிறுவனா கட்டளையிடுவது? என்னுடைய பிரார்த்தனையை நிறைவேற்றி வைப்பதாகச் சொல்லுங்கள்!'' என்றான் ஆதித்த கரிகாலன்.

''ஆகட்டும்'' என்று சொல்லிப் பழுவேட்டரையர் கனைத்துக்கொண்டார்.

''மிக்க வந்தனம், பாட்டா! அப்படியானால் சீக்கிரமே புறப்படுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்! மதுராந்தகனைப் பகிரங்கமாகவே யானை மீது ஏற்றி வைத்து இவ்விடத்துக்கு அழைத்து வாருங்கள். அல்லது பொன் ரதத்தில் ஏற்றி அழைத்து வாருங்கள். இளைய பாட்டியின் மூடு பல்லாக்கு மட்டும் இந்தத் தடவை வேண்டாம்!'' என்று சொல்லி விட்டுச் சிரித்தான் கரிகாலன்.

பின்னர் கந்தமாறன் முதலியவர்களைப் பார்த்து, "கந்தமாறா! உன்பாடு யோகந்தான்! உன் வீட்டுக்கு மேலும் விருந்தாளிகள் வரப் போகிறார்கள். சுந்தர சோழருக்குப் பிறகு சோழ நாட்டுக்குச் சக்கரவர்த்தியாகப் போகிற மதுராந்தகர் வரப்போகிறார். அவருக்குப் பட்டமகிஷியாகப் போகும் சின்னப் பழுவேட்டரையரின் மகளையும் உடன் அழைத்து வந்தாலும் வருவார். கடம்பூர் மாளிகை ஒரே கோலாகலமாகத்தானிருக்கும். பழுவூர்ப் பாட்டனார் தஞ்சைக்குப் புறப்படட்டும். நாம் வேட்டைக்குப் புறப்படலாம், வாருங்கள்! வில் வித்தையில் ஒரு காலத்தில் நான் வல்லவனாக இருந்தேன். 'அர்ச்சுனனுக்கு அடுத்தபடி ஆதித்த கரிகாலன்தான்' என்று பெயர் வாங்கியிருந்தேன். மூன்று வருஷங்களாக வில்லைத் தொடாமல் வில் வித்தையே மறந்து போய் விட்டது. மறுபடியும் பழக்கம் செய்து கொள்ள வேண்டும். பார்த்திபேந்திரா! வந்தியத்தேவா! எல்லாரும் கிளம்புங்கள். வேட்டைக்கு எங்கே போகலாம்? கொல்லி மலைக்குப் போகலாமா?" என்று பொதுப்படையாகக் கரிகாலன் கேட்டான்.

இத்தனை நேரமும் எந்தப் பேச்சிலும் கலந்து கொள்ளாமலிருந்த சம்புவரையர், "கோமகனே! கொல்லி மலை வெகு தூரத்தில் இருக்கிறது. அவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை. வீரநாராயண ஏரியின் மேற்குக் கரையில் அடர்ந்த காடு இருக்கிறது. அதைத் 'தண்டகாரண்யம்' என்றே சொல்வதுண்டு. வேட்டைக்கு வேண்டிய காட்டு மிருகங்களும் அங்கே ஏராளமாக நிறைய இருக்கின்றன. அந்தக் காட்டிலிருந்து வேட்டையாடிக் கொண்டு வந்த மிருகங்கள் தான் நமது வேட்டை மண்டபத்திலே உள்ளவை. ஏரிக்கரைக் காடு நமது மாளிகைக்கு சமீபத்திலும் இருக்கிறது. காலையில் வேட்டையாடப் புறப்பட்டுச் சென்றால் இரவு வீடு திரும்பி விடலாம்!" என்றார்.

"அப்படியே செய்யலாம், ஐயா! இந்த மாளிகையில் நான் விருந்தாளியாயிருக்கும் வரையில் தாங்கள் வைத்ததே எனக்குச் சட்டம். தங்கள் குமாரி மணிமேகலையையும் வேட்டைக்கு அழைத்துப்போகலாமா? அவள் இருக்குமிடம் எப்போதும் கல கலப்பாயிருக்கிறது!" என்றான் ஆதித்த கரிகாலன்.

"எனக்கு ஆட்சேபமில்லை. மணிமேகலையைக் கேட்டுப் பார்க்கலாம்!" என்றார் சம்புவரையர்.

அப்போது கந்தமாறன் "வேட்டைக்குப் போகும் இடத்தில் பெண்கள் எதற்கு? அவர்கள் பத்திரமாயிருக்கிறார்களா என்றுபார்ப்பதற்குத்தான் வேலை சரியாயிருக்கும். வேட்டையில் கவனம் செலுத்த முடியாது. மேலும், நந்தினி தேவிக்கு இங்கே துணை வேண்டுமல்லவா?" என்றான்.

"ஆமாம்; ஆமாம். கந்தமாறனுக்கு எப்போதும் பழுவூர்ப் பாட்டியைப் பற்றித்தான் கவலை. மணிமேகலையை அழைத்துப் போவதில் இன்னொரு கஷ்டமும் இருக்கிறது. அவள் துள்ளிக் குதிப்பதைப் பார்த்து விட்டு மான் துள்ளிக் குதிப்பதாக நினைத்து யாராவது அவள் பேரில் அம்பை விட்டாலும் விடுவார்கள். பெண்கள் அரண்மனையிலேயே இருக்கட்டும். நாம் வேட்டைக்குப் போகலாம். நாளை அதி காலையில் புறப்பட வேண்டும். இன்றிரவு குரவைக் கூத்தைச் சீக்கிரம் முடித்து விட்டு, அவரவர்களும் சீக்கிரமாகத் தூங்குங்கள். ஐயா! வேட்டைக்காரர்களுக்கெல்லாம் இப்போதே சொல்லி வைத்து விடுங்கள்! வந்தியத்தேவா! வா! நம்முடைய ஜாகைக்குப் போகலாம்!" என்று சொல்லி ஆதித்த கரிகாலன் வந்தியத்தேவனைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு புறப்பட்டான். கந்தமாறனும் பார்த்திபேந்திரனும் அவர்களைச் சிறிது அசூயையுடன் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.

சம்புவரையர் வேட்டைக் காரர்களுக்குக் கட்டளை பிறப்பிப்பதற்காகச் சென்றார். பழுவேட்டரையர் நந்தினியைத் தேடி அந்தப்புரத்துக்குப் போனார்.

அத்தியாயம் 38

நந்தினி மறுத்தாள்

பழுவேட்டரையர் சிறிது உற்சாகத்துடனேயே நந்தினியைப் பார்க்கப் போனார். கடம்பூருக்கு அவர் புறப்பட்டு வந்தபோது என்ன நம்பிக்கையுடன் வந்தாரோ, அது ஒன்றும் இது வரையில் நிறைவேறவில்லை. சிறு பிள்ளையாகிய ஆதித்த கரிகாலனைக் கடம்பூர் மாளிகையிலே தருவித்து வைத்துக் கொண்டால், அவனை நயத்தினாலும் பயத்தினாலும் தம்முடைய விருப்பத்தின்படி நடக்கச் செய்யலாம் என்று அவர் எண்ணியிருந்தார். தாமும் சம்புவரையரும் சொல்வதற்கு அவன் கட்டுப்பட்டே தீர வேண்டும் என்று நம்பினார். சோழ ராஜ்யம் முழுவதற்கும் மதுராந்தகனுக்கு உடனடியாகப் பட்டம் கட்டுவதிலுள்ள அபாயம் அவருக்குத் தெரிந்தேயிருந்தது. வடக்கே மலையமானும் தெற்கே கொடும்பாளூர் வேளானும் அதற்கு விரோதமாயிருப்பார்கள். கரிகாலன் அவர்களுடன் சேர்ந்து கொண்டால் உள்நாட்டு யுத்தம் மூண்டே தீரும். அதன் முடிவு எப்படியாகும் என்று யார் சொல்ல முடியும்? பொது மக்களில் பெரும்பாலோர் சுந்தர சோழருடைய புதல்வர்களின் பக்கமே இருப்பார்கள். மதுராந்தகனுடைய தாயே அவனுக்கு விரோதமாயிருக்கிறாள். காளாமுகக் கூட்டத்தாரை மட்டும் நம்பி உள் நாட்டுப் போரில் இறங்க முடியுமா? பாண்டிய நாட்டிலும், சேர நாட்டிலும், பாலாற்றுக்கு வடக்கேயுள்ள நாடுகளிலும் கலகங்கள் கிளம்பினாலும் கிளம்பும். ஆகையால் இப்போதைக்கு மதுராந்தகனுக்குப் பாதி ராஜ்யம்என்றுபிரித்துக்கொண்டால், அதுவும் தஞ்சையைத் தலை நகராகக் கொண்ட தென் சோழ ராஜ்யமாயிருந்தால், பிற்பாடு போகப் போகப் பார்த்துக் கொள்ளலாம். கொடும்பாளூர் வேளானின் செல்வாக்கை ஒரு வழியாகத் தீர்த்துக் கட்டி விடலாம். பிறகு, வடக்கே திரும்பித் திருக்கோவலூர் மலையமானையும் ஒரு கை பார்க்கலாம். கரிகாலன் வெறும் முரடன். என்றைக்காவது ஒரு நாள் ஏதாவது ஏடாகூடமான காரியத்தில் இறங்கி அற்பாயுளில் இறக்கக் கூடும். அப்படி நேர்ந்தால் எல்லாக் கவலையும் தீர்ந்தது. இப்போதைக்குப் பாதி ராஜ்யம் என்று ஏற்பாடு செய்து கொள்வது நல்லது.

இளைய ராணி நந்தினியுடனும் கலந்தாலோசித்ததின் பேரில் பெரிய பழுவேட்டரையர் இத்தகைய முடிவுக்கு வந்து, அதன் பிறகுதான் கடம்பூருக்கு வந்தார். கரிகாலனையும் அங்கு அழைத்து வரச் செய்தார். ஆனால் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை. பெரியவர்களுக்கு அடங்கி நடப்பதற்குப் பதிலாகக் கரிகாலன் பெரியவர்களை அதட்டி உருட்டி அதிகப் பிரசங்கம் செய்து கொண்டிருந்தான். அவனுடைய கேலிப் பேச்சுக்களையும் இரு பொருள் கொண்ட மொழிகளையும் பழுவேட்டரையரால் பொறுக்க முடியவில்லை. முக்கியமாக அவரைப்



பற்றிக் கரிகாலன் அடிக்கடி வயதான கிழவர்என்றுகுறிப்பிட்டதும்,இளைய ராணியைப் பாட்டி என்று அழைத்து வந்ததும் கூரிய விஷந்தோய்ந்த பாணங்களைப்போல் அவரைத் துன்புறுத்திவந்தன.போதும்போதாதற்குச் சம்புவரையரின் போக்கும் அவ்வளவு திருப்திகரமாயில்லை. தமக்குப் பக்கபலமாக நின்று கரிகாலனுடைய அதிகப் பிரசங்கத்தை அடக்க முயல்வதற்குப் பதிலாகச் சம்புவரையர் பெரும்பாலும் வாயை மூடி மௌனம் சாதித்துக்கொண்டிருந்தார். ஏதாவது பேசினாலும் தயங்கித் தயங்கி வழ வழா குழகுழா என்று பேசினார். கரிகாலன் தமது மாளிகைக்கு விருந்தாளியாக வந்து விட்டபடியினால் ஏதாவது ஏடாகூடமாய் நடந்து விடக் கூடாதென்று அப்படி ஜாக்கிரதையாக நடந்து கொண்டிருக்கிறார் போலும்! காரணம் எதுவாயிருந்தாலும் சம்புவரையரின் போக்கு கொஞ்சங்கூடப் பழுவேட்டரையருக்குத் திருப்திகரமாக இல்லை.

இன்றைக்குக் கரிகாலன் கூறியதில் எவ்வளவு தூரம் உண்மையான பேச்சு, எவ்வளவு தூரம் கேலிப் பேச்சு, எவ்வளவு தூரம் மனத்தில் ஒன்றும் உதட்டில் ஒன்றுமான வஞ்சகப் பேச்சு என்பதைக் கண்டு கொள்வதும் எளிதாயில்லை. மதுராந்தகனையும் அங்கே வரவழைத்த பிறகு ஏதேனும் பெரிய விபரீத காரியம் செய்ய உத்தேசித்திருக்கிறானோ, என்னமோ, யார் கண்டது? மலையமானைப்பெரும்சைன்யத்துடன்படையெடுத்து வரச் செய்து கடம்பூர் மாளிகையை வளைத்துக் கொள்ளும்படி செய்தாலும் செய்யலாம் அல்லவா?...

இவையெல்லாவற்றையும் எண்ணும் போது தஞ்சாவூருக்குத் திரும்பிப் போய் விடுவதே நல்லது. சின்னப் பழுவேட்டரையன் நல்ல மதியூகி. அவனிடமும் யோசனை கேட்டுக் கொள்ளலாம். ஒருவேளை மதுராந்தகனை இங்கு அழைத்து வருவதாயிருந்தாலும், எல்லா நிலைமைக்கும் ஆயத்தமாகக் காலாந்தக கண்டனைப் பெரிய படை திரட்டிக் கொள்ளிடக் கரையில் கொண்டு வந்து வைத்திருக்கச் செய்யலாம். எது எப்படியானாலும் இளைய ராணியை இங்கே இனிமேல் இருக்கச் செய்து இந்த மூடர்களின் கேலிப் பேச்சுக்கு உள்ளாக்குவது கூடவே கூடாது. அவளை அழைத்துக் கொண்டு போய்த் தஞ்சாவூரில் விட்டு விடுவது மிக்க அவசியம். அதற்கு ஒரு வசதி இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதைக் கைவிடுவானேன்?

இவ்விதம் ஒரு முடிவுக்கு வந்ததும் பெரிய பழுவேட்டரையருக்குச் சிறிது உற்சாகம் உண்டாயிற்று. முக மலர்ச்சியுடனே நந்தினியின் அந்தப்புரத்தை அடைந்தார். அங்கே அவர் வாசற்படியருகில் வந்த போது உள்ளேயிருந்து கலகலவென்று சிரிப்புச் சத்தம் வருவதைக் கேட்டார். ஏனோ அந்தச் சிரிப்பின் ஒலி அவருக்கு எரிச்சலை உண்டாக்கிற்று. தஞ்சாவூர் அரண்மனையில் நந்தினி இவ்விதம் சிரிப்பதேயில்லை. இப்போது என்ன குதூகலம் வந்து விட்டது? எதற்காகச் சிரிக்கிறாள்? அவளுடன் சேர்ந்து சிரிப்பது யார்?....

உள்ளே பிரவேசித்ததும் உடன் இருந்தவள் மணிமேகலை என்று தெரிந்தது. இதனால் அவர் மனம் சிறிது தெளிந்தது. அவரைக் கண்டதும் மணிமேகலை சிரிப்பை அடக்குவதற்காக இரண்டு கைகளினாலும் வாயைப் பொத்திக் கொண்டாள். அப்படியும் அடக்க முடியாமற் போகவே சிரித்துக் கொண்டே அந்த அறையை விட்டு ஓடிப் போனாள்.

நந்தினியின் சிரிப்பு பழுவேட்டரையரைக் கண்டதுமே நின்று விட்டது. அவளுடைய முகமும் வழக்கமான கம்பீரத்தை அடைந்தது.

"ஐயா! வாருங்கள்! யோசனை முடிவடைந்ததா?" என்றாள்.

"நந்தினி! அந்தப் பெண் எதற்காக அப்படிச் சிரித்தாள்? ஏன் சிரித்துக் கொண்டே ஓடுகிறாள்?" என்று பழுவேட்டரையர் கேட்டார்.

"அதைச் சொல்லத்தான் வேண்

டுமா? சொல்லுகிறேன். சபா மண்டபத்தில் நடந்த பேச்சுக்களில் கொஞ்சம் பக்கத்து அறையிலிருந்த மணிமேகலையின் காதில் விழுந்ததாம். இளவரசர் ஆதித்த கரிகாலர் பாட்டன்களைப் பற்றியும் பாட்டிகளைப் பற்றியும் பரிகாசமாகப் பேசியதைச் சொல்லி விட்டு அவள் சிரித்தாள்..."

"ஓ! துஷ்டப் பெண்! அவளோடு சேர்ந்து நீயும் சிரித்தாயே?"

"ஆம்; அவளோடு சேர்ந்து சிரித்தேன். அவள் அப்பால் போனதும் அழலாம் என்று இருந்தேன். அதற்குள் தாங்கள் வந்து விட்டீர்கள்!" என்று நந்தினி கூறி விட்டுக் கண்களில் துளித்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

"ஆகா! உன்னை இப்பேர்ப்பட்ட மூடர்களின் மத்தியில் நான் அழைத்துக் கொண்டு வந்தது என் தவறு. நாளைப் பொழுது விடிந்ததும் நாம் தஞ்சாவூருக்குப் புறப்பட்டுப் போகலாம். இன்றிரவு மட்டும் பொறுத்துக் கொள்!" என்றார்.

"தஞ்சாவூருக்குப் புறப்பட வேண்டுமா? ஏன்? வந்த காரியம் ஆகிவிட்டதா?" என்று நந்தினி கேட்டாள்.

அன்று சபா மண்டபத்தில் நடந்த பேச்சின் முடிவுகளைப் பழுவேட்டரையர் நந்தினிக்குத் தெரியப்படுத்தினார்.

எல்லாவற்றையும் கேட்டு விட்டு நந்தினி "சுவாமி! தாங்கள் தஞ்சாவூருக்குப் போய் வாருங்கள். நான் வர மாட்டேன். ஆதித்த கரிகாலனுக்குப் புத்தி கற்பிக்கும் வரையில் நான் இங்கிருந்து புறப்படுவதாக உத்தேசமில்லை. அந்தக் கர்வம் பிடித்த இளவரசன் ஒன்று தங்கள் காலில் விழுந்து அவன் பேசிய பரிகாசப் பேச்சுக்களுக்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். அல்லது தங்கள் கத்திக்கு அவன் இரையாக வேண்டும்!" என்றாள்.

"நந்தினி! இது என்ன சொல்கிறாய்? இத்தகைய பாதகமான எண்ணம் உன் உள்ளத்தில் எப்படி உதித்தது?"

"ஐயா! எது பாதகமான எண்ணம்? என்னைக் கைப்பிடித்து மணந்த கணவனை ஒருவன் நிந்தித்துப் பேசினால், அவனைப் பழி வாங்க வேண்டும் என்று நான் நினைப்பது பாதகமா?"

"இல்லை, நந்தினி! இதைக் கேள்! எங்கள் பழுவூர்க் குலம் சோழ குலத்தோடு ஆறு தலைமுறையாக நட்புரிமை கொண்டது. அதையெல்லாம் மறந்து, அறியாச் சிறுவன் ஒருவன் ஏதோ உளறினான் என்பதற்காக நான் அக் குலத்துக்கு விரோதமாய்க் கத்தி எடுக்க முடியுமா? சுந்தர சோழரின் புதல்வனை, இன்று வரையில் பட்டத்து இளவரசனாயிருப்பவனை, — நான் என் கையினால் கொல்லுவதா? இது என்ன பேச்சு?" என்று பழுவேட்டரையர் பதறினார்.

கரிகாலனுடைய காரசாரமான வார்த்தைகளைக் கேட்ட போது சில சமயம் பழுவேட்டரையருக்கே உடைவாளின் மீது கை சென்றது. அப்போது சிரமப்பட்டு மனத்தையும் கையையும் கட்டுப்படுத்திக் கொண்டார். தம் உள்ளத்தில் முன்னம் தோன்றிய எண்ணத்தை நந்தினி வெளியிட்டுச் சொன்னவுடனே அவருக்கு அவ்வளவு பதற்றம் உண்டாயிற்று.

"ஐயா! தாங்கள் சோழ குலத்தோடு ஆறு தலைமுறையாக நட்புக் கொண்டவர்கள்; உறவும் கொண்டவர்கள். ஆகையால் தாங்கள் கத்தி எடுக்கத் தயங்குவது இயல்பு. ஆனால் எனக்கு அத்தகைய உறவு ஒன்றுமில்லை. சோழ குலத்துக்கு நான் எவ்விதத்திலும் கடமைப்பட்டவள் அல்ல. ஆதித்த கரிகாலன் தங்கள் அடிபணிந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்ளா விட்டால், என் கையில் கத்தி எடுத்து நானே அவனைக் கொன்று விடுகிறேன்!" என்றாள் நந்தினி. அப்போது அவளுடைய கண்கள் சிவந்து, புருவங்கள் நெரிந்து, முகத் தோற்றமே மாறி விட்டது.

(தொடரும்)

ஒத்திப் போடலாமா?

கதை: மன்னை சதிரா

படம்: செல்வம்





அடுத்தது...உங்க தங்கைக்கு ரொம்பவும் செலவாம். நமக்குத்தான் குழந்தை குட்டியில்லையே...ரண்டாயிரம் பணம் அனுப்பணுமாம்....
ஓகோ... குழந்தைப் பேறை ஒத்திப் போட்டாலும் நாம நினைச்சது நடக்காது. பணமும் சேர்க்கமுடியாது....
...தனிமையும் கிடைக்காது. அதனால...
அதனால... ஒத்திப் போடவே கூடாது. உடனே நமக்குக் குழந்தை வேணும்கிறே... அதானே....
ச்சீ... போங்க....



தாகத் தொழில்
எண்களோடு விளையாடும்
பெண்மணிக்கும் லிம்கா
எண்ணற்ற டிசைன் வரையும்
ஆணிற்கும் லிம்கா
எண்களோடு விளையாடி விளையாடி அல்லது
டிசைன்கள் வரைந்து வரைந்து களைத்து நீங்கள்
தாகத்தால் தவிக்கும் பொழுது...
ஐஸோடானிக் ஸால்ட் அடங்கிய கிருமிகள்
அற்ற லிம்கா அருந்தி தாகத்தை தணிப்பீர்.
Limca®
RADEUS/PE/L/3-89-TAM
ARTIFICIALLY FLAVOURED. CONTAINS NO FRUIT JUICE OR FRUIT PULP
® THE REGISTERED TRADEMARK OF PARLE (EXPORTS) LTD., BOMBAY.

சுக போகத் தீவுகள்


பிரபஞ்சன்

15

விடிவது, ஒரு பூ மலர்வது போன்றது என்று கிருஷ்ணமூர்த்திக்குத் தோன்றியது. மௌனமாக, ரகசியமாக இதழ்கள் அடுக்கடுக்காக மலர்வது போல, இரவு விடிவது ஓர் ஆச்சர்யம்தான். 'பூவினைப் போல் ஆச்சர்யம் பூமி மேல் கிடையாது' என்று சொன்ன அந்தக் கவி பூவோடு இரவையும் சேர்த்திருக்க வேண்டும். கன்னங்கரிய இருட்டு. கூந்தலில் நரை ஏறுவது போலக் கொஞ்சம் கொஞ்சமாகப் புலர்ந்து கொண்டிருந்தது. ஊரை நெருங்கிக் கொண்டிருந்தான் அவன். இந்தப் பயணம், விநோதினிக்கென, அவள் வைத்துச் சென்று விட்ட காயத்தை ஆற்ற என்று அவன் மேற்கொண்ட பயணம். ஒரு மனிதரிடம் காயப்பட்டால் அதை ஆற்ற மற்றொரு மனிதரை நாடுவது மனித இயல்புதானே? விநோதினியின் பிரிவை மறக்கடிக்கும் மருந்தாக இருக்குமென்றே அப்பா அம்மாவைப் பார்க்க ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தான் அவன்.

விடியலில் அவன் ரயில் நிலையத்துக்கு வந்து சேர்ந்து விட்டிருந்தான்.

அப்பா, காலைக் குளியலை முடித்து விட்டு, சாமி படங்களின் முன், கண் மூடிக் கை குவித்து நின்றிருந்தார். அப்பாவை அப்படிப் பார்ப்பதில் கிருஷ்ணமூர்த்திக்கு எப்பவுமே சந்தோஷமாக இருக்கும். அது இறைவனுடன் அவர் பேசும் நேரம்.



கிருஷ்ணமூர்த்திக்கு கடவுள் நம்பிக்கை இருக்கும் என்றும் சொல்ல முடியாது. இல்லை என்றும் கூற முடியாது. அப்படி ஒரு விட்டேத்திப் போக்கு. ஆனாலும், அது அவர் நம்பிக்கை என்பதும், பிறர் நம்பிக்கையை விமர்சிப்பது அநாகரிகம் என்கிற நாகரிகமும் அவனிடம் இருந்தது.


அப்பாவின், பூஜைக்குக் குந்தகம் ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காக அமைதியாக நின்றான் அவன். அம்மா, சமையல் கட்டில், காலைப் பலகாரம் செய்யும் பணியில் இருக்க வேண்டும் என்று நினைத்தான். தங்கை சரசுவைக் கூடக் காணாமல் அவன் மனம் ஏங்கியது.

வீட்டைச் சுற்றி அவன் பார்வை சென்றது. திடுமென அது பழமையுள்ளது போல, சுவர்கள் ஒளி மங்கி, கைபடும் இடங்கள் அழுக்கேறியிருந்ததைக் கண்டு அவன் மனம் சலித்தது. திடுமெனக் கண் விழித்தார் அப்பா. அவனைப் பார்த்ததும் அவர் முகம் பிரகாசமடைந்தது.

''வாப்பா. எப்போ வந்தே?'' என்றார் அவர். அவ்வளவுதான் அவர் பேசினார். எப்போதும் அப்படித்தானே. அப்பா வார்த்தைகளை நம்பாதவர். மனக்குள் அன்பை வழிய வழிய அடைத்துக் கொண்டு, அது ததும்பி விடக் கூடாது என்கிற பிடிவாதத்தில் இருப்பவர். அம்மா பேச்சுச் சப்தம் கேட்டவளாய் இருக்கக் கூடும். எட்டிப் பார்த்தாள்.

''அட... கிருஷ்ணமூர்த்தி.. எப்படா வந்தே...?'' என்று இரைந்து கொண்டே வெளியே வந்தாள். அம்மா இப்படித் ததும்புவதில் வெட்கம் அடைவதில்லை. இது அம்மாவின் சுபாவம். சிரிக்க வேண்டும் என்றால் சிரிப்பதும், அழ வேண்டும் என்றால் அழுவதும் ஆன ஆரோக்கியமான சுபாவம்.

''என்னடா இப்படி இளைச்சுப் போயிட்டையே... சாப்பிடறதே இல்லையா?'' என்றெல்லாம் அடுக்கடுக்கான கேள்வியை எழுப்பினாள். அவளைப் பொறுத்தவரை,



மிகச் சில கேள்விகளும், அதற்கான மிகச் சில பதில்களுமே அவளது உலகம். மனிதர்களை அவர்களின் சுபிட்சத்தை அளக்கும் அளவுகோல், கல்லூரியில் ஏதாவது பட்டப் படிப்புப் படித்திருக்க வேண்டும். ஓர் உத்தியோகம், சம்பளம், கல்யாணம், குழந்தை, நோய் நொடி அற்ற உடம்பு — இவை மட்டுமே.

அம்மா சொன்னாள்.

''சரி... போய்க் குளிச்சுட்டு வா. சாப்பிடலாம்'' என்றவள் அப்பாவைப் பார்த்து, ''உங்களுக்கு இலை போடட்டுமா.. பலகாரம் வைக்கட்டுமா?'' என்றாள்.

''அவனும் குளிச்சுட்டு வந்திடட்டுமே. சேர்ந்தே சாப்பிட்டாப் போச்சு...'' என்றார் அப்பா.

''ஆமா... சரசு எங்கேம்மா?''

''வீட்டிலே மொட்டு மொட்டுன்னு உட்கார்ந்திருக்க வேண்டாமேன்னு, பக்கத்து தெருவில் ஒரு மாமி எம்பிராய்டரி, தையல் கற்றுத் தராளாம். அவகிட்டே கத்துக்கறேன்னு சொல்லிச்சு. சரி, போய் வான்னு சொல்லியிருக்கேன். இப்போ இளாகக்குத் தான் போயிருக்கு. வந்துடும்.''

''பரவாயில்லையே.. சரசு கூட ஏதோ பண்ணிக்கிட்டுத்தான் இருக்குன்னு சொல்லுங்க...''

''மனுஷனுக்கு ஏதாவது காரியம் பண்ணிக்கிட்டு இருந்தாதானே'' என்று பொதுவாகச் சொல்லி விட்டு நகர்ந்தார் அப்பா.

குளித்து முடித்து ஆடை மாற்றி, அம்மா பரிமாற அப்பாவுடன் சாப்பிடத் தொடங்கினான், கிருஷ்ணமூர்த்தி.

''அப்புறம்... நீ என்னடா, என்னமோ கட்சி எல்லாம் பண்ணிக்கிட்டு இருக்கியாமே. அந்த தெய்வநாயகம் என்னதான் சொல்றாரு? எங்காவது வேலை வாங்கிக் கொடுத்தா, பாரு. இல்லேன்னா, வீட்டோட வந்துடு. அப்பாவுக்குத் துணையா இரு...'' என்றாள் அம்மா.

இதுதான் அப்பாவின் கருத்தாகவும் இருக்குமோ என்ற அச்சத்தில், அப்பாவைப் பார்த்துச் சொன்னான் அவன்.

''ஒரு வேலைக்குப் போகிற நிலையில் நான் இல்லை அப்பா. நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். முதல்வர், என்னிடம் பெரிய பொறுப்புக்களையெல்லாம் ஒப்படைச்சு இருக்கார். அதை நான் நிறைவேற்ற வேண்டியிருக்கு...''

அப்பாவிடம் இதைச் சொல்கையில், ஒரு பக்கம் ஏனோ கூச்சமாகவும், மறுபக்கம் தான் முதலமைச்சராலேயே பொருட்படுத்தப்படும் புள்ளி என்கிற பெருமையுமாக இருந்தது அவனுக்கு.

அப்பா நிதானமாகச் சொன்னார்.

''எனக்குத் தெரியும் தம்பி. நானும் கேள்விப்பட்டேன். உனக்கு எது சந்தோஷம் தருகிறதோ, உனக்கு எது சரியென்றுபடுகிறதோ, அதைச் செய். எனக்கு நீ செய்கிற காரியங்கள் எல்லாம் பிடித்திருக்க வேண்டிய கட்டாயம் இல்லை. தோளுக்கு வந்தால், பிள்ளையைத் தோழனாகக் கருத வேண்டும் என்பார்கள். நீ சம்பாதிக்கிற பணம், உனக்கு உன் மீதே கௌரவத்தைத் தர வேண்டும். எனக்கு நீ தர வேண்டிய அவசியமில்லை. நானும் அதை எதிர்பார்க்கவில்லை.''

'என்ன சொல்கிறார் அப்பா. நான் செய்கிற காரியங்கள் எல்லாம் அவருக்குப் பிடித்திருக்க வேண்டிய கட்டாயம் இல்லை என்றால், என்ன பொருள்? என் அரசியல் அவருக்குப் பிடிக்கவில்லையா?' என்று எண்ணமிட்டான் அவன்.

அம்மா, பஞ்சு பஞ்சாக இட்லிகளை இலையில் கொட்டி, நெய்யால் அவைகளைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தாள். அம்மாவின் பெருமைகளில் இந்த அற்புதச் சமையலும் ஒன்று. ரசித்துச் சாப்பிடாவிட்டால், அவள் திறமையில் குறை சொல்வதாக எண்ணிவிடக் கூடும். ஆகவே, அதைச் சாப்பிட்டான்.

''அப்பா... உங்களுக்கு அரசியல் பிடிக்கலையா?''

''எனக்குப் பிடிப்பதும் பிடிக்காததும் என்ன கணக்கு? நான் வேறு தலைமுறையைச் சார்ந்தவன். அரசியலை ஒரு வாழ்க்கை ஒழுக்கமாக வைத்திருந்த பெரிய மனிதர்களைப் பக்கத்தில் இருந்து பார்த்தவன் நான். ஒரு பிரச்னைக்காக உயிர் போகும் நிலை வரை, உண்ணா நோன்பிருந்த மகான்கள் எல்லாம் ஒரு காலத்தில் தலைவர்களாக இருந்தார்கள். வெட்கமில்லாமல் ஆறு மணி நேரம் உண்ணாவிரதம் இருக்கிறதாகச் சொல்லி, உண்ணாவிரதத் தத்துவத்தையே கேவலப்படுத்துகிற மனிதர் எங்கள் தலைமுறையில் இல்லை. சராசரி இந்தியன் ஒவ்வொருவனுமே பல மணி நேரங்கள், இரண்டு உணவு வேளைகளுக்கிடையில் பட்டினி கிடக்க நேர்கையில், ஒரு மேடை போட்டு, மைக்கை வைத்துக் கொண்டு ஆறு மணி நேரம் மேடையில் உட்கார்ந்திருப்பதை ஒரு சாதனையாகக் கொள்கிற மனிதர்கள் தலைவர்கள் என்றால் இந்த ஈனத்தனமான அரசியலைப் பற்றி நான் என்ன சொல்ல இருக்கிறது.''

அவனுக்கு நினைவு வந்தது. விலைவாசி உயர்வுப் போராட்டம் என்று சொல்லி, தங்கள் எதிர்ப்பை 'வட புலத்துக்குத்' தெரிவிப்பதாகச் சொல்லி, முதல்வர் தலைமையில் நடந்த அந்த உண்ணாவிரதப் போராட்டம் அவன் நினைவுக்கு வந்தது. வரலாற்றைக் கேலி செய்த அந்த நிகழ்ச்சியை எண்ணுகையில் அவனுக்கு வெட்கமாகக் கூட இருந்தது. ஆனால், தன் சமாதானமாக இதைச் சொன்னான்.


''அப்பா, அரசியலை ஓர் உயர்ந்த பணி என்று ஒப்புக் கொள்கிறீர்கள். அது தீயவர்கள், அல்லது போலிகள் கையில் சிக்கிக் கொண்டிருக்கிறது என்கிறீர்கள். நல்லவர்கள் அரசியலைக் கையில் எடுத்தால் தானே அது சுத்தப்படும். நமக்கேன் வம்பு



ஆயத்தமாகிவிட்டார் ஆனந்தமான நேரத்தை அனுபவித்திட.

அலுவலகத்தில் ஓயாத உழைப்பு, பதற்றம். ஆனால் இப்போதோ அது ஓடி ஒளிந்து விட்டது. குழந்தைகளோடு குழந்தையாய் அளவற்ற சக்தியுடன் விளையாடுகிறார்.

ஊட்டச் சத்துமிக்க ஒரு கோப்பை ஹார்லிக்ஸ் கொடுத்து நாள் முழுவதும் அவருக்கு வேண்டிய வலிமையும் ஆற்றலும் அளிக்கும் உங்களுக்கே நன்றி.



"ஹார்லிக்ஸில், வலிமைக்கும், ஆற்றலுக்கும், நல்ல உடல் ஆரோக்கியத்துக்கும் தேவையான- புரோட்டீன்ஸ், விட்டமின்ஸ், மினரல்ஸ், கார்போஹைட்ரேட்ஸ் —ஆகிய முக்கிய ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன.

அதுவே, நாள் முழுவதும் ஆரோக்கியம் தரும் ஹார்லிக்ஸின் மேன்மை."



சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

HTA 6224TAM



ஆசிரியர்: பாபர் முதலாம் பானிபட் போரில் பயன்படுத்திய பீரங்கியின் சிறப்பு என்ன?

மாணவன்: ஊழல் இல்லாமல் வாங்கிய பீரங்கி சார்!

— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா.

என்று எல்லோரும் ஒதுங்கிப் போவதால் தானே அயோக்கியர்களின் கடைசிப் புகலிடமாக அது ஆகியிருக்கிறது?''

அப்பா அவனைத் திரும்பிப் பார்த்தார்.

''சாப்பிடு. அப்புறம் பேசலாம்.''

சாப்பிட்டு முடித்துக் கையை கழுவுகையில் சரசு திரும்பி வந்தாள்.

''ஹை... அண்ணா'' என்று பூமியில் இருந்து இரண்டடி உயரம் எகிறிக் குதித்தாள் சரசு. அவனுக்குக் கொஞ்சம் சதை போட்டிருந்தது. பெண்கள் இப்படித் தான் போலும். பார்த்துக் கொண்டிருக்கும் போதே அரும்பி காய்த்துப் பழுத்தும் போய் விடுகிறார்கள் என்று அவனுக்குத் தோன்றியது.

''எனக்கு என்ன வாங்கி வந்தே...?'' என்றாள் சரசு.

''பெட்டியில் போய்ப் பார். இரு. நானே வந்து எடுத்துத் தருகிறேன்.''

''சொன்னதைச் செய்யவில்லையே, அண்ணா...''

''என்ன?''

''வரும் போது கட்டாயம் ஒரு மாப்பிள்ளை வாங்கி வருவதாகச் சொன்னாய். மறந்து விட்டாய் பார்.''

அம்மா முகத்தை மூடிக் கொண்டு சிரித்தாள். வெட்கமாம்.

''இந்தப் பெண் என்னமாய்ப் பேசுது பார்'' என்று கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து அம்மா சொன்னாள். பிறகு கவலை இழையோடும் குரலில், ''அவளுக்கும் வயசாகுதப்பா. நல்ல இடமாகப் பார்'' என்றாள்.

ஒரு சுமை தன் தோளில் வந்து அமர்ந்ததாக அவனுக்குத் தோன்றியது. ஆனாலும் பாரம் அழுத்தாத இனிய சுமை. ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒரு ரூபத்தில் ஏற்க வேண்டிய சுமை. அன்பு என்கிற சிமிழை அருள் என்ற அகன்ற வானமாக மாற்றுகிற சுமை அது.

பெட்டியைத் திறந்து குடும்பத்தாருக்கு வாங்கி வந்திருந்த பொருள்களை எடுத்துப் பரப்பினான். சரசுவுக்குக் காஞ்சிபுரம் பட்டில் நீலமும், நீலத்தின் ஊடே ஜரிகைப் பொட்டுமாக ஓர் அழகிய புடைவை. அம்மாவுக்குப் பிடித்த அரக்கு வண்ணத்தில் ஒரு புடைவை. அப்பாவுக்கு ஜரிகை வேஷ்டியும் சட்டைக்காகப் பட்டுத் துணியும்.

''என்னத்துக்கடா பெரிய செலவு?'' என்றாள் அம்மா.

அப்பா, ஆர்வம் இன்றி அவன் எடுத்து வந்திருந்த பொருள்களைப் பார்த்தார்.

''அப்பா உங்களுக்கு இது பிடிச்சிருக்கா?''

''உம்'' என்றார் அவர், அசுவாரஸ்யமாய்.

''ஏன் என்னமோ மாதிரி பேசுகிறீர்கள்?''

அப்பா சற்று நேரம் மௌனமாய் இருந்தார்.

''தம்பி, நீ வருத்தப்படக் கூடாது. ஆனாலும் என் மனதில் உள்ளதை நான் சொல்லித்தானாக வேண்டும். அரசியல் என்ற பெயரில் நீ செய்வது சரி என்று எனக்குத் தோன்றவில்லை. இன்னொருத்தனுக்குப் பினாமியாக இருந்து கொண்டு நிலம் வாங்குவதும், விவசாயிகளின் நம்பிக்கையைப் பொய்யாக்கி, விளை நிலங்களைக் கற் கட்டடமாக மாற்ற உதவுவது, ஏராளமான கறுப்புப் பணத்தைச் சம்பாதிப்பது, தவறான வழிகளில் அதை உயிர்ப்பிக்க முயற்சி செய்வது, லஞ்சப் பணம் பெறுவது, மோகாந்தர காரியங்களில் சுகிப்பது, மக்களைப் பிரச்னைகளில் இருந்து திசை திருப்பப் போராட்டங்களை உருவாக்குவது, உயிர்களைப் பலியிடுவது, பொருட்களுக்குச் சேதம் விளைவிப்பது இவைகளையெல்லாம் அரசியல் என்று நீ சொல்கிறாயா? இவைகளுடன் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ சம்பந்தம் கொண்டவர்களுடன் நான் சம்பந்தம் கொள்ள முடியாது. நீ எனக்கு மகன். அந்த பாத்தியதையை இழக்க நான் விரும்பவில்லை. இந்த வீடு எப்போதும் உனக்குத் திறந்திருக்கும். ஆனால், அந்த முறையற்ற பணத்தில் நீ வாங்கி வரும் எந்தப் பொருளையும் அன்பளிப்பாக நானோ என் மனைவியோ, மகளோ ஏற்க முடியாது. தம்பி. வருத்தப்படாதே. இவைகளையெல்லாம் எடுத்துப் பெட்டியில் வைத்துக் கொள். எத்தனை நாள் வேண்டுமானாலும் இரு. சாப்பிடு. ஓய்வெடு. உன் காசு, சல்லிக் காசு எனக்கு என்றும் தேவைப்படாது. தயவு செய்து பாவக் கறை படிந்த காசுகளை, இந்த வீட்டுக்குள் கொண்டு வராதே...''

ஆயிரம் இடிகள் ஒன்றன் பின் ஒன்றாக இறங்குவதைக் கிருஷ்ணமூர்த்தி உணர்ந்தான்.

அம்மா முகத்தை மூடிக் கொண்டு தேம்பினாள். சரசு திகைத்துப் பிரமித்து நின்றாள்.

(தொடரும்)

* தலையங்கம் நடுநிலையானது. இரண்டு கட்சிகளுக்கும் நெத்தியில் அடித்தாற் போல் எழுதியுள்ளீர்கள். தி. மு. க. உறுப்பினர்களோ, அல்லது அ. தி. மு. க. உறுப்பினர்களோ சற்று பொறுமையாய் இருந்திருந்தால் நம் 'ஜனநாயகம்' இப்படி ஓர் அவல நிலையைச் சந்தித்திருக்காது.

சிதம்பரம், ஏ. எஸ். நடராஜ்.

* துரை முருகன் தவறே செய்திருக்கா விட்டாலும், தான் அவ்வாறு செய்யவில்லை என்று கூறி. அவரே முன்வந்து ராஜினாமாவைச் சமர்ப்பித்தால் இந்தச் சூழ்நிலையில் அவருக்கும், கலைஞருக்கும், கட்சிக்கும் செல்வாக்கு மீண்டும் கூடும்.

பூனாம்பாளையம், என். ஆர். சுப்பிரமணியன்.

* 'துரை முருகன் ராஜினாமாச் செய்ய வேண்டும். தி. மு. க. தவறு செய்து விட்டது' என்று பத்திரிகைகள் அலறுகின்றனவே தவிர, எதிர்க்கட்சியின் — குறிப்பாக 'ஜெயலலிதா'வின் அடாவடி—அநியாயவார்த்தை—செயல்களுக்கு, யாரும் கடுமையாகக் கண்டனம் செய்யவில்லையே, ஏன்? 'பெண்' என்றால் எது வேண்டுமானாலும் பேசலாம் போல இருக்கிறதே பத்திரிகைகளின் வாதம்!

ராணிப்பேட்டை, பேப்பர் கார்த்திக்.

* 'ஒரு பெண்ணின் முந்தானையைப் பற்றி இழுக்கத் துணிந்த கரத்தை வெட்டிப் போட்டால் என்ன? என்று தமிழகத்தில் உள்ள லட்சோப லட்சம் பெண்மணிகள் இன்று வினவுகிறார்கள்' என்று தலையங்கத்தில் எழுதி இருக்கிறீர்கள்; சரி. 'குத்துடா! அவளை என்று கூறிய அடங்காப்பிடாரியின் நாக்கை இழுத்து அறுத்துப் போட்டால் என்ன?' என்று லட்சோப லட்சம் பெண்மணிகள் வினவுவது உங்கள் காதுக்குக் கேட்கவில்லையா? நல்ல பத்திரிகை தர்மம் சார்!

அனந்தப்பூர், (ஆந்திரா), கனகம்.

* கார்டூனில் நமது பிரதமர் குற்றவாளி என்று முடிவு செய்யப்பட்டவருக்குப் பன்னீர் தெளிக்கிறார். அதன் மூலம் தற்போது உயர் அந்தஸ்தில் இருப்பவர்கள் கொலை, கொள்ளை போன்ற பெரிய குற்றங்களைச் செய்திருந்தாலும் தங்களை எந்த அறிக்கையும் அல்லது சுப்ரீம் கோர்ட் தீர்ப்பும் கூட ஒன்றும் செய்ய இயலாது; ராஜீவ்



வட்டமேஜை

"உங்கள் காதுக்குக் கேட்க வில்லையா?"

போன்ற இட சிந்தனை இல்லாதவர்கள் இருக்கும் வரை... என்று சொல்வது போல் சொல்லாமல் சொல்லியிருக்கிறீர்கள். அது மட்டுமல்ல; அநியாயம் செய்பவர்கள் இத்தனை சுகபோக வசதிகளுடன் இருக்கப் பின்னணி என்ன, யார்? என்பதையும் தெளிவுபட விளக்கியிருக்கிறீர்கள்.' அருமையிலும் வெகு அருமை.

கீழ்கட்டளை, ஜி. மோகன் ராம்.

* 'பாமெல்லா'வை மற்ற பத்திரிகைகள் கிளுகிளுப்புச் செய்தியாக்கிய போது, கல்கி மட்டும், "பாமெல்லா வாய் திறந்தால் பாரத அரசு வீழ்ந்து விடும்!" என செம்பியனார் மூலம், நமது மத்திய, மாநில அரசுகளின் அவலங்களை நாசுக்காக (இடித்து) உரைத்திருப்பது— வித்தியாசமானது. அதற்காக எத்தனை பாராட்டினாலும் தகும்.

செங்குன்றம், அ. ஜமால் மொய்தீன்.

* மனித குலம் தழைத்தோங்கத் தம் இறுதி மூச்சு உள்ள வரை பாடுபட்டு, மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று செயலாற்றி வந்த ராஜாஜி அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் அடுத்த பகுதி எப்போது துவங்கும் என இப்போதே எதிர்பார்க்கிறேன்.

நீடூர், அ. முஹம்மது நிஜா முத்தீன்.

* சுஜாதா விஜயராகவனின் "கறுப்பு ரோஜா" சிறுகதை மிகவும் அருமை.

ஆர்ப்பாக்கம், ஆர். துரை.

* சுபாவின் "அன்புப் பின்னல்" சிறுகதை படித்தேன். அனாதைக் குழந்தைகளுக்காகத் தன் இல்லற வாழ்க்கையைத் தியாகம் செய்த காஞ்சனா என்கிற கதாபாத்திரம் மெய்சிலிர்க்க வைத்தது.

திருப்பாலைத்துறை, ப. மணிமுடி.

* உண்மையான காதலுக்கு வயது இல்லை என்பதையும் அதன் ஆழம் கணக்கிட முடியாது என்றும் உணர்த்தியது ஜெயரதனின் சிறுகதை.

ஸ்ரீரங்கம், ஏ. எஸ். முரளி.

* கறுப்பு ரோஜா, பைரவன்—ஜூலி, அன்புப் பின்னல், கல்லுக்குள் உறங்கும் சிற்பங்கள் ஆகிய நான்கு சிறுகதைகளும் மிக மிக அருமை. கலையோடு, சுவாரசியமும் சேர்ந்திருந்தது.


புதுவை — 3, கே. லீலாவதி கிருஷ்ணவேலு.

* எல். சிவராமகிருஷ்ணன் இளைஞர். 'ரஞ்சி'யிலிருந்து 'டெஸ்ட்'டுக்குப் போய்த் திரும்ப 'ரஞ்சி'க்கே வந்திருப்பவர். அவரது எதிர்காலம் பரந்த மைதானம். 'டெஸ்ட்' அணியில் சேர்ந்து அபாரச் சாதனைகள் புரியும் காலம் மறுபடியும் வரும். இந் நிலையில், ரஞ்சி கேப்டன் என்ற முறையில் தோல்விக்கான காரணத்தைப் பொறுப்புடன் பத்திரிகையாளர்களுடன் பகிர்ந்து கொண்டிருக்க வேண்டும். இவருக்கே 'எரிச்சல்' வந்தால், இவர் போன்றவர்களைத் தலைமேல் தூக்கி வைத்துக் கூத்தாடும் நமக்கு எவ்வளவு எரிச்சல் வரும்? **Set back should mould; it should not melt one.**

ஈரோடு — 4, சி. நாச்சிமுத்து.

* எல். சிவராமகிருஷ்ணனைக் கேப்டனாகப் போட்டதால்தான் 'ரஞ்சிக் கோப்பை'யை வெல்ல முடியவில்லை எனக் கூறுவதெல்லாம் சுத்த அபத்தம்.

சென்னை — 7, லாவண்யா ப்ரியன்.



‘ஸ்ரீ’ என்னும் மங்களச் சின்னம் ஸ்ரீராமிலே அடங்கியுள்ளது.

‘ஸ்ரீ’ என்றால் தனம், சுபம், சௌபாக்கியத்தைக் குறிக்கும்.

உங்கள் வாழ்வில் ‘ஸ்ரீ’ ஏற்பட ஸ்ரீராம் வழிகாட்டுகிறது. உங்கள் டெபாசிட்டுகளைப் பேணிப் பாதுகாத்து, லாபம் ஈட்டும் தொழில்களில் ஈடுபடுத்தி, அதைச் சிக்கனமான வகையில், சிக்கல் அற்றபடி பயன்படுத்துகிறது.

பொருளாதாரத் துறையில் தலை சிறந்த, திறமை மிகுந்த இயக்குனர்கள் குழு கவனமாகப் பரிசீலித்த பரிந்துரையின் உதவியுடன் செயல்படுகிறது ஸ்ரீராம்.

ஸ்ரீராம் குரூப் கம்பெனிகளின் போர்ட் ஆப் டைரக்டர்கள்:

- **P.S. ஸ்ரீநிவாசன்** : முன்னாள் சேர்மன் & மானேஜிங் டைரக்டர், இந்தியன் ஓவர்சீஸ் பாங்க், சென்னை.
- **S. சங்கரநாராயணன்** : முன்னாள் எக்ஸிகியூடிவ் டைரக்டர் & செயலாளர், அசோக் லேலண்ட் லிமிடெட், சென்னை.
- **C.P. வர்கீஸ்** : முன்னாள் ஜெனரல் மானேஜர், யுனைடெட் இந்தியா இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், எர்ணாகுளம்.
- **P. வைத்யநாதன்** : இன்வெஸ்ட்மெண்ட் & மேனேஜ்மெண்ட் கன்சல்டண்ட், இண்டஸ்ட்ரியல் எண்டர்பிரைசஸ், கும்பகோணம்.
- **G.V. ராமன்** : பார்ட்னர், கௌரிகாந்தன் & கம்பெனி, ஆடிட்டர்ஸ், சென்னை.
- **லலித் P. மேத்தா** : முன்னாள் ஜெனரல் மானேஜர், நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட், பம்பாய்.

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட் லிமிடெட் சிறப்பு சாதனைகள் :

	டிசம்பர் 1986	டிசம்பர் 1987	மார்ச் * 1989
	(ரூபாய் லட்சத்தில்)		
1. செலுத்தப்பட்ட மூலதனமும் மற்றும் ரிசர்வுகளும் :	41.26	102.93	250.00
2. டிபாசிட்டுகள் :	388.60	676.46	1575.00
3. தொழிலில் உபயோகப் படுத்தப்பட்டுள்ள நிதி :	514.47	1002.94	2370.00
4. டிவிடெண்ட் :	20%	21%	-

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்

	செப். 1986	செப். 1987	மார்ச்* 1989
	(ரூபாய் லட்சத்தில்)		
1. செலுத்தப்பட்ட மூலதனமும் மற்றும் ரிசர்வுகளும்:	41.00	62.16	163.88
2. டிபாசிட்கள் :	189.00	349.00	950.00
3. தொழிலில் உபயோகப் படுத்தப்பட்டுள்ள நிதி :	313.21	558.43	1326.88
4. டிவிடெண்ட்	24%	25%	—

* உத்தேச மதிப்பீடு

நாடு முழுவதும் வியாபித்துள்ள ஸ்ரீராமின் 42 கிளைகளிலும், உற்சாகமும், திறமையும், கவனமும் உடையவர்களின் உதவிகொண்டு சிறப்புச் சேவை புரிகிறது.

உங்கள் வாழ்வில் மேலும் 'ஸ்ரீ' ஏற்பட ஸ்ரீராம் வழிகாட்டுகிறது.



12 'ஜூனியர் குவெஸ்ட்' பத்திரிகைகள் அன்பளிப்பு!

ஸ்ரீராம் ரெகரிங் டெபாசிட் (R.D. Scheme) திட்டத்தின் கீழ், மாதம் ரூ.200 வீதம் செலுத்தினால் 36 மாதங்களில் ரூ.8,988 கிடைக்கும். அல்லது காஷ்சர்டிபிகேட்டில் (Cash Certificate) ரூ.3,275 செலுத்தினால் மூன்று ஆண்டுகளில் ரூ.5,000 ஆகும். இது 1989 மே மாதம் முதல் ஆரம்பம்.

அகில இந்திய டெபாசிட் சேமிப்பு விழா 30.4.89 வரை.

SHRIRAM GROUP COMPANIES MADRAS

ஸ்ரீராம் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் லிமிடெட்.

நிர்வாக அலுவலகம் : மூகாம்பிகா காம்ப்ளெக்ஸ், மூன்றாவது தளம், 4, லேடி தேசிகாச்சாரி சாலை, மைலாப்பூர், சென்னை-4. போன்: 74960/77463/73768.

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்.

நிர்வாக அலுவலகம் : மூகாம்பிகா காம்ப்ளெக்ஸ், 4, லேடி தேசிகாச்சாரி சாலை, மைலாப்பூர், சென்னை-4. போன் : 71983/74101.

சென்னை கிளைகள்:

அடையாறு • அண்ணாநகர் • ஜார்ஜ் டவுன் • கச்சேரி ரோடு • மவுண்ட் ரோடு • மைலாப்பூர் • தெற்கு உஸ்மான் ரோடு • தி.நகர் • T.H. ரோடு.

ஆக்ரா • அகமதாபாத் • பெங்களூர் • பரோடா • பம்பாய் • கல்கத்தா • மைலாப்பூர் • புது டில்லி • எர்ணாகுளம் • ஹூப்ளி • இந்தோர் • ஜெய்ப்பூர் • கான்பூர் • கும்பகோணம் • மதுரை • மைசூர் • நாகப்பட்டினம் • நாக்பூர் • நெய்வேலி • நெல்லூர் • பாண்டிச்சேரி • பூனா • ராஜமுந்திரி • சேலம் • செகந்திராபாத் • திருச்சி • விஜயவாடா • விசாகப்பட்டினம்

ADWAVE/SGC/3574/TAM A

ஸ்ரீராம்: புதுமை நோக்குடைய பொருளாதாரச் சேவை.

அத்தியாயம் 2

"பால் வண்டி"

நகரத்தில் 'ரோந்து' சுத்தும் போலீஸ் வேனுக்குக் குப்பத்து ஜனங்கள் செய்திருக்கும் நாமகரணம்: 'பால் வண்டி' –

வண்டியைப் பார்த்துக் குப்பத்துச் சிறுவன் பயந்தோடியதற்குக் காரணம் இப்போது புரியும். நகரத்தின் இதர பகுதிகளின் சந்தடி சப்தங்கள் வாகன இரைச்சல்கள் தவிர, மனித மனங்கள் சுமக்கும் பாரங்கள், நடுத்தர வர்க்கத்தின் பிரச்னைகள் இவைகளுக்கு மத்தியில் குப்பம் கூவினாலும் சரி, கூக்குரல் இட்டாலும் சரி நகரம் பாதிக்கப்படுவதே இல்லை. கூவத்தின் நாற்றம் நிரந்தரமானதைப் போலவே – குடிசைகளின் அவஸ்தைகளும் – அவலங்களும் – ஓலங்களும் சாசுவதம்.

ஏதோ, உலகம் இயங்கப் போவதே இன்னும் ஒரு சில மணி நேரங்கள்தான் என்பது போலும் அதற்குள் தங்களின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்தாக வேண்டும் என்பது போலவும் அந்தக் காலை நேரத்தில் சென்னை நகரமே பரபரத்துக் கொண்டிருந்தது –

சென்னை வாழ் எருமைகளுக்கும் – மாடுகளுக்கும் தீவனமாகிப் போய் எஞ்சியிருந்த சுவரொட்டிகளின் மேல் புதிதாகப் பல புதிய சுவரொட்டிகள் பூத்திருந்தன. புதியவை அனைத்துமே ஏதோ ஒரு கட்சி சார்புடையவை. அவற்றின் வாசகங்கள் அக்கட்சியினர் ஏதோ ஒரு காரணத்திற்காக



சென்ற இதழில்
படிக்காதவாகளுக்கு...

நிஜங்களின்விழிப்பாய்குயில்குப்பம் தனது தூக்கம் கலைந்து விழித்துக் கொண்டிருந்த அதிகாலை நேரம் —

"யம்மா... பால் வண்டி வருதும்மா! பால் வண்டி வருதும்மா...!" — ஒரு குப்பத்துச் சிறுவன் கூக்குரலிடுகிறான்.

பால் வண்டியா அது? அல்ல; பாழாய்ப் போன வண்டி அது......

யாரோ ஒரு தலைவரைக் கண்டித்துக் கறுப்புக் கொடி காட்டவிருப்பதைக் கட்சியங் கூறி அறிவித்தன.

இதுபோன்ற விஷயங்கள் அரசியல் கட்சிகளுக்கு ஓர் அத்தியாவசியப் பொழுது போக்கு மட்டுமல்லாது — மக்களிடையே தங்களை அவ்வப்போது நினைவுபடுத்தும் ஒரு விளம்பர யுக்தியாகவும் மாறி விட்டது.

"கறுப்புக் கொடி காட்டவிருக்கும் கட்சித் தொண்டர்கள் அனைவரையும் காவலில் வைக்க வேண்டும்", என்கின்ற மேலிடத்து உத்தரவிற்குக் கீழ்ப்படிந்து, காவல் துறையினர் சென்னை நகரின் முக்கியப் பகுதிகளான பல குப்பங்களில் புகுந்து, எண்ணற்ற அப்பாவிகளை உரிமையோடு அடித்து வண்டியில் ஏற்றிக் கொண்டிருந்தனர்.

போலீஸ் புகுந்த சேரிகளுள் ஒன்று குயில் குப்பம். பால் வண்டியிலிருந்து இறங்கிய காவல் படையினர் 'லத்தி'யைச் சுழற்றிய படி பூட்சு கால்களால் ஒலியுடன் புழுதியையும் கிளப்பியவாறே குப்பத்தை முற்றுகை யிட்டனர் —

இன்ஸ்பெக்டர் போல் தோற்றமளித்த ஒருவர், கம்பீரமான கர்வத்துடன் கையில் கிடைத்த முதல் நபரின் தலைமுடியைக் கொத்தாகப் பிடித்து, "இங்கே தருமன் யாருடா? தருமன் எங்கே?" என்று உலுக்க, அடி விழு முன் அனைத்தையும் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் இருந்த அவன், "சார், அடிக்காத சார்! தர்மன் சைதாப் பேட்டை பஸ் ஸ்டாண்ட் பக்கம் ரிக்ஷாவுலே சவாரிக்குப் போயிருப்பான், சார்! சார்! என்னை அடிக்காத சார்!" என்று கதறினான்.

குயில் குப்பத்தில் கட்சிச் சார்புடைய சிலரையும், பரிதாபமாகத் தோற்றமளித்த கட்சிச் சார்பற்ற பலரையும் வண்டியில் சர்வ மரியாதையுடன் ஏற்றிக் கொண்டு அந்த 'போலீஸ் வேன்' மீண்டும் தருமனைத் தேடும் படலத்தைத் தொடங்கியது.

வண்டி புறப்பட்டுச் சென்ற மறு நிமிடமே குப்பத்து வாழ் குடிமக்கள் மொத்தப் பேரும் ஒரு குடிசையின் முன் குழுமினார்கள். அக் குடிசையின் வாசலில் குந்தியிருந்தாள் 'பெரிசு' என்று குறிப்பிடக்கூடிய வயசில் இருந்த பொன்னம்மாள்.

"பொன்னம்மாக்கா! தரும்னைத் தேடிக்கினு மாமனுங்க வந்தானுங்க யக்கா... அய்யோ! யார் வம்புக்கும் போவாத புள்ளையை எதுக்குத் தேடிக்கினு வந்தானுங்களோ, தெரியலியே? பேமானி பசங்க! ஐயோ யக்கா..." என்று ஒரு சேர்ந்து குப்பத்து மக்கள் ஒப்பாரி வைக்க...

'பொன்னம்மாக்கா' வாயைத் திறந்தாள். அவ்வளவுதான். அவள் வாயிலிருந்து உதிர்ந்த ஆசிர்வாதங்களின் நாற்றத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் 'கூவம்' வெட்கத்தால் நெளிந்தது!

"பாழாப் போனவனுங்கோ.. சப்பியடிக்கிறவன், சாராயங் காய்ச்சற கசமாலத்தையெல்லாம் வுட்டுட்டு இன்னாத்துக்குடா தருமனைத் தேடறீங்கோ...? தே... புள்ளிங்களா! என் தருமன் மேலே கையை வெச்சீங்க, உங்க பொண்டாட்டி புள்ளைங்களையெல்லாம் வாந்தி பேதி வாரிக்கினு பூடுண்டா! பேமானிங்களா...! இந்தக் 'கைத்' கையிலே நேத்து ராவே சொன்னேன்... 'சொம்மா ஊத்திக்குவேன், கொளுத்திக்குவேன்னு கூவாதடான்னு.. கேட்டானா என் வார்த்தையை? இப்போ மாமனுங்க இட்டுக்கினு போய் இன்னா பண்ணுவாங்களோ? இன்னா 'எயவோ' தெரிலியே....? ஏய், மல்லிகா! வடுகநாதன் ஊட்லே கீறாரான்னு பாரும்! அவனை 'ஈ–டு' இஸ்டேஷனுக்குத்தான் 'இட்னு' போயிருப்பானுங்கோ...! அய்யோ, தர்மா! நீ இன்னாடா ராசா பண்ணே?" என்று பொன்னம்மா ஓலமிட —

குயில் குப்பம் முன்பு ஒருமுறை பற்றி எரிந்து சாம்பலான போது அடைந்த துயரத்தை விட அதிகமாகத் தருமனைப் போலீஸ் தேடி வந்ததற்காக வருத்தப்பட்டுக் கொண்டிருந்தது!

"இன்னா 'பட்டு' கடையைத் தொறக்கலே?" சைக்கிள் கடை பட்டு சேகரின் நண்பன் 'ஆறு' விசாரிக்க...

"என்னமோ பெரிசா என்னைக் கேக்க வந்துட்டியே... நீ இன்னம் வேலைக்கும் போவலியா...?"

"ப்ச்... மனசுக்கு பேஜாராகீதுப்பா... தருமனைத் தேடிக்கினு மாமனுங்க வந்தானுங்களா... அத்தான் வேலைக்குப் போவலே..."

"நாங்க மட்டும் இன்னா தீவாளின்னா கடையை மூடிக்கிறோம். எல்லாம் அந்தப் பாடுக்கோசரந்தான்... இன்னிக்கி டைட்டா எத்திக்கினு புல்லா மாலு ஒரு வலி வலிச்சாத்தான் மாமு மனசு கேக்கும்.. ஆமா.. சொன்னா கேக்காம இவுனுங்க வேறே குப்பத்தையே கௌப்பிக்கினு ஈ–டு இஸ்டேஷனுக்குப் பூட்டானுங்க.. என்னவோ இவுனுங்களைப் பார்த்தவுடனே அவுனுங்க தருமனை அவுத்து வுட்றுவானுங்காட்டி..."

சென்னை எக்மோர் காவல் நிலையமான ஈ–டு ஸ்டேஷன் குயில் குப்பத்து மாத

பாரதிராஜா

ரசிகளின் ஒப்பாரித் தாக்குதலுக்கு இலக்காகியிருந்தது — எண்பத்தி இரண்டாவது வட்டச் செயலாளரான அண்ணன் வடுகநாதனின் வலது கரமான 'பங்கி' முருகேசு ஸ்டேஷனுக்கும் குப்பத்து ஜனங்களுக்குமிடையேயாக அல்லாடிக் கொண்டிருந்தான் —

"தே! யக்கா நான் ஏட்டு கைலே போயி மேட்டரைக் கண்டுக்காம இத்தோட முடிச்சிக்கினு தருமனை வெளில வுடச் சொல்லிக்கினு வந்துக்கறேன் இல்லே... அதுக்குள்ளே இன்னாத்துக்கு நீ வேறே இவுளுங்களையெல்லாம் இட்னு வந்து இங்க கூவிக்கினுகீறே...? சொம்மா ஓரம்மா குந்து. இன்ஸ்பெக்டர் நம்ம தோஸ்து. இன்னா கொஞ்சம் 'மாலு' காட்னா படிஞ்சிருவான்.. கையிலே எவ்ளோ வெச்சுனுகீறே? கப்புனு வெட்டு! காரியத்தை முடிச்சிக்கினு ஜூட் வுட்டுக்கலாம்! இன்னா, வசதி எப்படி?"

"அடத்தூ! பேமானி... இப்பவாடா என் கைலே பேரம் பேசறே? மொதல்லே போயி அவனை இட்டுகினு வாடா நாயி..." என்று பொன்னம்மாக்கா முடிக்குமுன், முருகேசு ஸ்டேஷனுக்குள் ஓடி மறைந்தான்.

"ஏய்! யாருடா நீ? என்னா வேணும் உனக்கு? தூக்கி உள்ளாற வைக்கணுமா? அங்க என்ன வெளியிலே ஒரே ரப்சரா இருக்குது? எல்லாம் உன் ஏற்பாடுதானாடா?" காவல் நிலையத்துக் கடைநிலை ஊழியரான ஒரு கான்ஸ்டபிளின் அதட்டலுக்கே எட்டாக மடிந்திருந்தான் 'பங்கி' முருகேசு..

"சார் எனக்கும் அந்தக் கும்பலுக்கும் சம்பந்தமே இல்ல சார்... நம்ம மச்சான் கீறாரே சார்... அதான் நம்ம தங்காச்சியைக் கட்டிக்கினுகீறாரே சம்முவம், அவுரு மதுரையிலே ஏட்டாகீறாரு... இந்த வாரத்துலே மெட்ராஸ் மாத்திப்புடுவாங்கன்னு லெட்டர் போட்டாரு. அத்தான் ஒருவேளை இங்க வந்துக்கறாரான்னு பாக்க வந்தேன் சார்... சர்தான் ஒருவேளை அவுரை மயிலாப்பூர் இஸ்டேஷன்லே டூட்டி போட்டுக்கறாங்களோ என்னவோ. நான் அங்க போயி கண்டுக்கறேன் சார்...! மன்னிச்சிக்கோ சார்...! வரேன் சார்...! ரொம்ப 'டாங்க்ஸ்' சார்....!"

ஸ்டேஷனை விட்டு வெளியேறிய வேகத்தில் 'பங்கி' முருகேசு. "பொன்னம்மாக்கா! இன்ஸ்பெக்டராண்ட சொல்லிக்கினு வந்துக்கறேன்... தா இப்ப வுட்டுடறேன்னுகிறாரு... தருமன் உள்ளதான்கீறான். பாத்தேன்... மேட்டர் ஒண்ணும் பெரிசா இல்லையாம். சொம்மா ஏதோ விஷயமா பேசறதுக்குத்தான் இட்டுகினு வந்துக்கறாங்களாம்...! இன்ஸ்பெக்டர் சொன்னான்... என்னைப் பாத்தவுடனே எந்திரிச்சி நின்னு கப்புனு ஒரு சல்யூட் அடிச்சான் பாரு...

'பங்கி' முருகேசு அளந்து விட்டுக் கொண்டிருக்கும்போதே 'E—2' ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் ஜெகதீஷ் அவசரமாய் பிரேக் போட்டு நிறுத்தப்பட்ட ஜீப்பிலிருந்து இறங்கிக் கும்பலை நோக்கி வந்தார்.

"ஏய்! இங்கே என்ன கூட்டம்? உம்..? இது என்ன போலீஸ் ஸ்டேஷனா? இல்லை, மீன் மார்க்கெட்டா? என்ன வேணும் உங்களுக்கு...?"

அவர் கேள்வி முடியுமுன் பொன்னம்மாக்கா தொடங்க, சுற்றி நின்ற மற்ற பெண்களும் சுருதி சேர்ந்து, "ஐயா... தருமனை இட்டுக்கினு வந்துக்குறீங்களேய்யா... அந்தப் புள்ளை ஒரு தப்புக்கும் போவாதுய்யா... தருமனைத் தயவு செஞ்சி வுட்டுருங்கய்யா... ஐயா... ஐயா..." என்று ஓலமிட்டனர்.

"தே! இங்க யாராச்சும் சத்தம் போட்டீங்க, எல்லாத்தையும் உள்ளே தள்ளித் தோலை உரிச்சுருவேன். ராஸ்க்கல்ஸ்...! அந்தப் பொறுக்கி 'தீக்குளிச்சிடுவேன்னு' போலீசுக்கே சவால் விடுவான். நாங்க பார்த்துக்கிட்டு நிக்கணும் இல்லே...? எங்களுக்கு இன்னும் அவன் கைலே கெடைக்கலே. ஆளுக்கு ஆள் சவால் வுட்டுட்டு அதைச் செஞ்சு காட்றதைப் பாத்துக்கிட்டு நிக்கறதுக்கு இங்க எவனும் கேனையனுங்க இல்லே... சத்தம் போடாமே கலைஞ்சு போனீங்கன்னா, தருமனைப் புடிச்சு ரெண்டு தட்டு தட்டிட்டு வீட்டுக்கு அனுப்பி வைப்பேன். அப்படி இல்லே, தருமனை உள்ளே தள்ளி, ஒண்ணும் இல்லாம பண்ணிடுவேன். ஆமா! உம்... போங்க!"

கத்திய இன்ஸ்பெக்டரிடம் மீண்டும் பொன்னம்மா. "ஐயோ, ஐயா! அப்படியெல்லாம் சொல்லாதே சார்! இப்பக் கூட தருமனைப் பார்த்துட்டு வந்தானே முருகேசு... ஐயோ! தருமன் உள்ளதானேகீறான்! வுட்ரு சாரு... டேய் முருகேசு! ஐயா கைலே சொல்லுடா..." என்று கேவியவாறே திரும்ப, 'பங்கி' முருகேசு மறைந்து அறுபது நொடிகளுக்கு மேல் ஆனதற்கான சாட்சிகள் அங்கு ஏராளம் இருந்தனர்!

"பொறுக்கித் தின்ற பேமானி மவனே! என் கைலெயேவாடா பிலா வுட்டே...! சுசமாலம்! கைலெ சிக்கு நீ. உன்னைச் சாவடிச்சிடறேன்! ஐயா, தெரியாம வந்துட்டோம் ஐயா! தருமனைப் புடிச்சிட்டீங்கன்னா தயவு செஞ்சி ஊட்லே இட்டாந்து விட்றுங்கய்யா..." என்று பொன்னம்மா அழத் தொடங்கினாள்.


"தா... அய்வாத அக்கா! அதான் ஐயா கரீக்டா சொல்லிகிறாரு இல்லே? அப்பாலே இன்னும் இன்னா உனுக்குப் பயம்? வா யக்கா, போலாம்!" என்று ஆளுக்கு ஆள் அவளைச் சமாதானப்படுத்தியவாறே அந்த இடத்தை விட்டு அகன்றனர்.

தருமன் — நமது கதாநாயகன் — உயிர்த் தோழன் —

ஒடிசலான தேகம், சவரத்திற்கு அடிக்கடி உட்படாத முகம், அழுக்குப் படிந்த 'முண்டா' பனியன், மடித்துக் கட்டிய கைலி... இதுவே நமது தருமனின் வெளித் தோற்றம்.

ஆனால் அதற்குள் அடங்கிய தருமனின் உள் தோற்றம் அந்தக் குப்பத்து வாசிகளுக்கே

பிஜன்: இந்த ரூபா லஞ்சம் கொடுக்க வக்கில்லே...! நீயெல்லாம் ஏய்யா சர்வீஸ் கமிஷன் பாஸ் பண்ணிட்டு அப்பாயின்ட்மெண்ட் எப்ப வரும்னு கேட்டுத் தொந்தரவு பண்றே? — அரசாங்க அலுவலர் சாதிக்பாஷா.



ஒரு புரியாத புதிர்!

குயில் குப்பத்தைப் பொறுத்தவரை, நண்டு சிண்டுகளுக்கு ஏற்படும் பிரச்னையி லிருந்து, பெரியவர்களுக்கு ஏற்படும் குடும் பப் பிரச்னை வரை கவனிப்பான். ரேஷன் கார்டு, பாமாயில் தட்டுப்பாடு எதுவாயினும் அவர்களின் வாய்கள் முதலில் உச்சரிக்கும் பெயர் தருமனாகத்தானிருக்கும்!

தருமன் — எந்த நேரத்தில் யார் அவனுக் கிட்ட பெயர் என்ற ஆராய்ச்சியில் நாம் இறங்க வேண்டாம். ஆனால் இட்ட பெய ருக்குச் சிறிதளவு களங்கமும் ஏற்படாத வகையில் ஒரு தர்ம சிந்தனையுடையவனா கவே இன்று வரையில் வாழ்ந்து வருகிறான்.

இவ்வளவு சிறப்பான குணாம்சங்கள் நிறைந்திருந்தாலும் நம் தருமனும் ஒரு போதைக்கு அடிமையாகித்தான் இருந் தான். அவசரப்பட வேண்டாம். போதைக் குப் பொருள் தெரியாமல் குழம்பாதீர்கள்!

தருமனுக்குக் குடிப் பழக்கம் கிடையாது. கூத்தியார் பழக்கமும் கிடையாது.

ஆனால் கொண்ட கொள்கையில் ஒரு மயக்கம் உண்டு! 'தன் கட்சி,' 'தன் தலைவன்' — இதுவே அவன் போதை!

கட்சியின் கொள்கைகள், கோட்பாடு கள் போன்றவை அவன் புத்திக்கு எட்டாத உயரத்தில் இருந்தாலும் அவன் தன் கட்சித் தலைவன் மீது அளவு கடந்த மரியாதையை யும், வெறித்தனமான ஒரு பாசத்தையும் தன்னுள் வளர்த்துக் கொண்டவன்.

அப்படியிருந்தும் எதிர்க் கட்சிக் காரர் களையும் அரவணைத்துச் செல்லும் குணம் படைத்திருந்ததே தருமனை அவனது மக் களிடையே வித்தியாசமாக இனங்காண வைத்தது.

இப்படியான நமது தருமன், தன் தலைவனின் கோரிக்கைகள் நிராகரிக்கப் பட்டதால் தான் தீக்குளிக்கப் போவதாய் அறிவித்திருந்தான்! கட்சியின் மீது தன் உடலையும், கட்சித் தலைவனின் மீது தன் உயிரையும் வைத்திருந்த தருமன், தீக்குளிக்கு முன் 'சிங்கிள் டீ' குடிக்கலாம் என்று சென்ற இடத்திலேயே காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு 'மிக்க கௌரவத்துடன்' வண்டியில் ஏற்றப் பட்டான்.

''ஏண்டா, மண்ணெண்ணெய் விக்கற வெலையிலே அவனவன் ஸ்டவ்வைப் பத்த வைக்கவே திண்டாடறான். நீங்க அதிலே குளிச்சிட்டு அப்புறமா பத்த வச்சுக்குவீங்க. இதைச் செய்யப் போறதா எங்களுக்கு முன் கூட்டியே சவால் வேறே வுடுவீங்க! இல்லே...? செருப்பால அடிக்கணும்டா உங் களையெல்லாம்! அப்பக் கூட திருந்துவீங் களாங்கறது சந்தேகந்தான். என்னடா பாக் கறே?'' கத்தியவாறே அந்தப் போலீஸ்காரர் தருமனை ஓங்கிக் கன்னத்தில் அறைய, தருமன் ஒரு கணம் பொறி கலங்கினான். ஆனாலும் சுதாரித்துக் கொண்டு, ''அடி சார்! இது இன்னா சார் அடி? தருமன் எரிச்சுக்கறதுக்கே ரெடியாகிறான். இதுக்கா சார் பயப்படுவான்? சார்! தருமன் மாதிரி எங்க தலைவனுக்கு ஆயிரம் பேர் கெடைக்க லாம். ஆனா தருமன் தலைவன் மாதிரி இந்த ஜென்மத்துலே இன்னொருத்தன் பொறக்க மாட்டான் சார்...! அஆம்...! என் தலைவ னுக்கு ஒண்ணுன்னா அப்புறம் தருமனை உசிரோட பார்க்க முடியாது சார்!''

''ஏண்டா, போலீஸ் வேன்லேயே மீட்டிங் பேசறியா? பொறுக்கி!'' என்றவாறே அவன் மார்பு மீது கான்ஸ்டபிள் உதைக்க ''ஐயோ!'' என்ற அலறலுடன் தருமன் கீழே சாய்ந்தான்.

எங்கோ ஒரு கடையில், வானொலிப் பெட்டியில் ஆகாசவாணியில் செய்திகள் வாசிக்கப்பட்டுக் கொண்டிருந்தன. வாசிப் பவர் பல செய்திகளுக்கிடையே ஏதோ ஒரு கட்சியின் பெயரைக் குறிப்பிட்டு, அந்தக் கட்சியைச் சார்ந்த பலர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கி றார்கள் என்றும், இருபத்திநாலு மணி நேரத் திற்குப் பின் காவலிலிருந்து விடுவிக்கப் படு வார்கள் என்றும் அறிவித்தார்.

மறுநாள் பலருக்குப் பல இடங்களில் விடிய, தருமனுக்கும் அவனது கட்சியைச் சார்ந்த மற்ற உயிர்த் தோழர்களுக்கும் சிறை யில் விடிந்தது! இருபத்திநாலு மணி நேர காவல் முடிந்து, அவரவர் இடம் நோக்கிப் புறப்பட, தருமன் 'குயில் குப்பம்' போய்ச் சேர்ந்தான்.

தருமனின் கால், குயில் குப்பத்தில் பதிந்த மறுநிமிடம், நண்டு சிண்டுகளிலிருந்து நடக்க மறந்து போன 'பெரிசுகள்' வரை, அனைவ ரும் ''தோ, தருமன் வந்துட்டான்!'' என்றும், ''ஹையா! தருமன் அண்ணன் வந்துடுச்சி!'' என்றும் கத்திக் கொண்டே, ஏதோ போருக் குச் சென்று வெற்றி பெற்றுத் திரும்பும் ஒரு வீரனை வரவேற்பது போல் வரவேற்றனர்.

இரவு முழுவதும் தருமனின் நினைவால் தூக்கம் பிடிக்காமல் விழித்துக் கொண்டே படுத்திருந்த பொன்னம்மாக்கா, தருமன் குடி சைக்குள் நுழைந்ததும் உள்ளம் குளிர்ந்தா லும், அவனைக் காணாததைப் போல அடுப் பைப் பற்ற வைத்துக் கொண்டே, ''பெத்த புள்ளையா இருந்தா நாம சொல்றதைக் கேட்கும்... நாயிங்கோ நடுரோட்டுலே கண் டெடுத்துத்தானே இட்டாந்து வளர்த்தோம்..! பொறுக்கித் திங்கற நாயை, இட்டாந்து நடுக் கூடத்திலே வெச்சாலும் அது புத்தியைத் தானே அது காட்டும்...! என் புத்தியை ஜோட்டாலே அடிக்கணும்!'' என்றாள். அவள் மீண்டும் எதையும் தொடருமுன் தருமன், ''தே...! யக்கா! சர்தான், சொம்மா அத்தையே எப்பவும் குத்திக் காட்டிக்கினு கீறியே? நானும் உன் கைலே எம்மாந்தபா சொல்லிக்கிறேன்? இப்படிப் பேசினா அப் புறம் எனக்கு அளுவாச்சி வந்துரும் யக்கா... ஆமா!'' என்று நெஞ்சடைக்கப் பேசினான். அவன் கண்கள் ஏற்கெனவே கலங்கியும் விட்டிருந்தன.

(தொடரும்)

அழகு

மும்தாஜ் யாசீன்

மல்லிகாவைக் கண்டபோது ரவியின் கண்கள் அகல விரிந்தன.

சைக்கிளில் காலூன்றி சிக்னலுக்காக நின்றிருந்தான். சிவப்பு மறைந்து பச்சென்று மஞ்சள் ஒளிர்ந்தது. உறுமுகிற வாகன ஒலிகளுக்கிடையே, "ரவி... ரவி" என்று கூப்பிட்டாள்.

விசுக்கென்று திரும்பிப் பார்க்கப் பத்தடி தூரத்தில் மல்லிகா. அவளென்று காட்டுகிற அதே முகம். கறுத்த உடம்பு. தூக்கிய பல் வரிசை. கையில் குழந்தை இருந்தது. "மல்லிகாவா... நீயா... என்னம்மா இங்கே?"

இறங்கி சைக்கிளைத் தள்ளிக் கொண்டு அருகே வந்தான்.

சந்தோஷத்தை வெளியிட உடனடியாக வார்த்தைகள் அகப்படவில்லை. பிய்த்துக் கொண்டு பாய்கிற உணர்வுகளுக்கு வார்த்தைகளா முக்கியம்? மனசுக்குள் பூப்பூத்தது.

கடைசியாய் மணப்பெண் கோலத்தில் பார்த்தது. அதற்குள் இத்தனை மாற்றமா? உடம்பில் சற்று சதை போட்டிருந்தாள். புதியதாக ஒரு மினுமினுப்பு.

"இங்கதான் இருக்கேன். அவருக்கு மாத்தலாகி ரெண்டு மாசமாச்சு..." என்றாள்.

"அப்படியா எனக்குத் தெரியலையே..."

"மனசு இருந்தாத்தானே வழி தெரியும்" என்றாள் மல்லிகா.

ஊருக்குப் போகும்போதெல்லாம் அவனும் நினைத்தது உண்டு. அம்மாவிடம் கூட சொல்லுவான். "ஒரு தடவை மதுரைக்குப் போயி மல்லிகாவைப் பார்த்துட்டு வரணும்மா...."

அந்த 'ஒருநாள்' இன்னும் வரவில்லை. அதற்குள் அவளே இங்கு மாற்றலாகி, இப்படி கண்ணெதிரே கேள்வி கேட்டு...

"சௌக்கியம்தானே..." பேச்சை மாற்றினான்.

"நீ?"

"ம்....."

"ஆள் அப்படியேதான் இருக்கே. உடம்பு தேறக்காணமே..." குழந்தையை லாவகமாக இன்னொரு கைக்கு மாற்றிக் கொண்டாள். தோரணை பத்துக் குழந்தை பெற்றவள் மாதிரி இருந்தது. ஒன்று ஆனாலும், பத்தானாலும் தாய்மையின் பாவனை ஒன்றுதானோ?

பச்சை விளக்கில் வாகனங்கள் அலற, விலகி நின்று கொண்டார்கள்.

"போன தடவை ஊருக்குப் போனப்ப... உங்கம்மா உனக்குப் பொண்ணுப் பார்த்துக்கிட்டு இருக்கிறதாச் சொல்லிச்சு. முடிவாயிருச்சா?"

"இன்னும் இல்ல மல்லிகா...."

"ஏன் கனமான இடமாத் தேடறீங்களா?" சிரித்தாள். தெற்றுப் பல் தெரிகிற அதே சிரிப்பு.

சித்தப்பாவுக்கு அவள் சிரித்தால் ஆகாது. சற்றே ஆண்மை கலந்த குரல். 'என்ன புள்ளே, காணாததைக் கண்டுட்டே... இப்படி சிரிக்கிறே?' என்று கேட்பார். யோசித்துப் பார்த்தால் வெறும் சிரிப்புக்காகச் சொன்ன வார்த்தையாகவும் இருக்காது. உள்ளே புழுங்கிக் கொண்டிருக்கும் சங்கதி அது. கவலை தந்த விஷயம். 'எனக்குன்னு வந்து பொறந்திருக்கே நெருப்பைக் குளிப்பாட்டுன நிறத்துல... மூத்தது ரெண்டுக்கும் கல்யாணம் பண்ணினது எனக்கு பெரிசாத் தெரியலை. இதுக்கு ஒருத்தனைப் புடிக்கிறதுக்குள்ள கண்ணு முழியே பிதுங்கிடும் போல இருக்கு...' உள்ளே புழுங்கும் வேதனை ஏதோ ஒரு வகையில் வெளிப்பட்டுத்தானே ஆக வேண்டும்.

"பையனா... புள்ளையா?" குழந்தையைப் பார்த்துக் கேட்டான்.

"புள்ளை..."

"மாமா நல்லா இருக்காரா?"

"ம்... உன்னைப் பத்திக்கூட சொல்லி இருக்கேன். பார்க்கணும் பார்..."

புன்னகை செய்தான்.

"பக்கத்துலதான் வீடு. குழந்தைக்குக் காய்ச்சல்னு டாக்டர்கிட்டே காட்ட வந்தேன். நல்ல வேளை உன்னையும் பார்த்துட்டேன். வீட்டுக்கு வா ரவி."

"எந்தத் தெரு?"

சொன்னாள். நடந்தார்கள். "புள்ளையை இப்படிக் குடு மல்லிகா..." என்று வாங்கிக் கொண்டான்.

நல்லவேளை. குழந்தை அம்மாவின் ஜாடையில் இல்லை. பெண் குழந்தைகள் லட்சணமாயிருப்பது பின்னாளில், பெற்றவர்களுக்கு அளிக்கப்படும் சலுகை. அந்தச் சலுகை இல்லாததால்தானே சித்தப்பா அவளைப் பார்க்கும்போதெல்லாம் பொருமிக் கொண்டிருந்தார்?

'நம்ம சனத்துல தெரிஞ்ச பையன் இருந்தாச் சொல்லுப்பா. வசதி சுமாரா இருந்தாக் கூட போதும். கழுதையைத் தள்ளி விட்டுடலாம்.'

ரவிக்கு கேட்க கஷ்டமாக இருக்கும். மகன் முறை ஆக வேண்டிய ஒருத்தனிடம் சொல்கிற விஷயமா இது? 'கடவுளே... ஒரு நல்ல வழி காட்டுப்பா...' என மனசுக்குள் வேண்டிக் கொள்வான்.

இருவருக்கும் ஒரே வயதுதான். சேர்ந்து வளர்ந்தவர்கள். விளையாடியவர்கள். சண்டை போட்டவர்கள்.

சுற்றி வளைத்த உறவில் சித்தப்பா பெண். எட்டாங்கிளாஸ் வரைக்கும் ஒன்றாகத்தான் படித்தார்கள்.

அரைப் பரீட்சை லீவில்தான் அவள் உட்கார்ந்தாள். படிப்பு நின்றது. ரவிக்குக் கொஞ்ச நாள் வெறுமையாக இருந்தது. புதிய வகுப்பில் புதிய சினேகிதர்கள் வாய்த்தவுடன் அவைமறைந்து விட்டாலும், அடிக்கடி வீட்டிற்குப் போவான். அன்றைய பாடங்களை ஒப்பிப்பான்.

''எனக்கும் ஆசைடா... அப்பாதான் வேணாம்னுட்டார்...''

நாளாக ஆக அவளது கவலைகள் வேறு மாதிரி இருந்தன. ''ரொம்பக் கறுப்பாத் தெரியறனா?'' என்று கேட்பாள்.






''ம்ஹூம்... கொஞ்சந்தான்.''

''டவுன்ல வாங்கிட்டு வாடா...'' என்று ரகசியமாகக் காசு கொடுத்து அனுப்புவாள்.

சோப்பு, பவுடர், கிரீம் என்று வாங்கிக் கொண்டு வருவான். முகத்தைச் சிவப்பாக்கி இவள் என்ன செய்யப் போகிறாள் என்றிருக்கும்.

அப்படியும் அவளொன்றும் சிவப்பாகி விடவில்லை.

ஆனாலும் வேறு விதத்தில் அவன் மாறிக்



''விறுவிறுப்பு விழாவாக இருந்தது...''

* ராஜேஷ்குமாரின் இன்று இறப்பு விழா இருபத்து மூன்று வாரங்கள் சென்றதே தெரியவில்லை. திகில், சஸ்பென்ஸ், எதிர்பார்ப்பு ஆகிய உணர்ச்சிகளைத் தந்தது. மொத்தத்தில் விறுவிறுப்பானதொரு துப்பறியும் நாவலைத் தந்த ராஜேஷ்குமாருக்குப் பாராட்டுக்கள். ஜெயராஜின் படங்கள் சூப்பர்ப்.

மோகனூர், நா. மோகன்.

* 'இன்று இறப்பு விழா' தொடர் கதை ராஜேஷ்குமாரின் கதைகளுக்கெல்லாம் சிகரமாக அமைந்தது. வெல்டன் ராஜேஷ். Keep it up. கதையை வெளியிட்ட கல்கிக்கு எங்களது பாராட்டுக்கள். சிறப்பாக ஓவியங்களை வரைந்தளித்த ஓவியர் 'ஜெ'க்கு வாழ்த்துக்கள்.

தென்பாதி, சீர்காழி ஸ்ரீராம்.

* வித்தியாசமான தலைப்பில் கதையைக் கொண்டு சென்று, ஆங்கிலப் படத்தின் க்ளைமாக்ஸ் போல் விறுவிறுப்பாக முடித்த விதம் சூப்பர். மொத்தத்தில்... இன்று இறப்பு விழாவைப் படித்த இருபத்தி மூன்று வாரங்களும் — எங்களுக்கு விறுவிறுப்பு விழாதான்!

சென்னை — 23, த. சத்தியநாராயணன்.

* ஒரு சின்னப் பசை அடையாளத்தின் மூலம் அந்தப் பெரிய கூட்டத்தைக் கண்டுபிடித்து விளையாட்டு வீரர்களை ஒலிம்பிக்கிற்கு அனுப்பிய விவேக்கிற்குப் பாராட்டுக்கள்.

குத்தாலம், வி. வனஜா.

* கதையில் பல முடிச்சுக்களைப் போட்டு, அவற்றைப் படு லாவகமாக அவிழ்த்த விதம் இருக்கின்றதே, தூள் சார்! 'விவேக்' எங்களில் ஒருவராக வாழ்ந்து விட்டார் என்பதே நிஜம்! கதையின் ஆசிரியர் ராஜேஷ்குமார் அவர்களையும், கதையை எங்களுக்கு அளித்த உங்களையும், எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை!

மயிலாடுதுறை, கிருட்டிண. எழில்.

* இடைப்பட்ட சில அத்தியாயங்களில் கதையில் தொய்வு ஏற்பட்டது போலிருந்தாலும் இறுதி அத்தியாயங்களில் அதைச் சரிக்கட்டி விட்டார் ராஜேஷ்குமார். பாராட்டுக்கள்.

காஞ்சிபுரம் — 1, தமிழ் எழிலன்.

கொண்டிருக்கிற மாதிரி ரவிக்குத் தோன்றும். சேர்ந்த மாதிரிப் போகிற நாளில் ஒன்றும் தெரியாது. பதினைந்து நாள் ஒரு மாதம் என்று இடைவெளி விட்டுப் பார்க்கிற போது பளிச்சென்று தெரியும்.

ஒருநாள், ''மல்லிகாவைப் பொண்ணுப் பார்க்க வர்றாங்கடா...'' என்று அம்மா சொன்னாள். அன்றைக்கு அவனால் ஸ்கூலில் உட்கார முடியவில்லை.

பெண்ணை எப்படிப் பார்ப்பார்கள்? நடக்க வைத்தா, நிற்க வைத்தா? என்ன கேட்பார்கள்? மாப்பிள்ளை பேசுவானா மற்றவர்களா?

மாலையில் வீட்டிற்கு வர, அம்மா ஒன்றும் சொல்லவில்லை. கேட்கவும் சங்கடமாக இருந்தது.

மாட்டிற்குப் புண்ணாக்கு வாங்குகிற சாக்கில் அவளது வீட்டிற்கே போனான். கல்யாணக் களையற்று அமைதியாக இருந்தது வீடு.

சித்தப்பா மீசையைத் திருகியபடி கயிற்றுக் கட்டிலில் கிடந்தார். வானத்தில் ஏதோ ஓர் இடத்தில் பார்வை நிலைத்திருந்தது. ஆளரவம் கேட்டுத் திரும்பிப் பார்த்தார். ''யாரது?''

''நான்தான்...''

மறுபடியும் மேலே பார்க்க ஆரம்பித்தார்.

மல்லிகா கூட நல்ல சேலை உடுத்தியிருக்கவில்லை. பாவாடை தாவணிதான். சுவரில் சாய்ந்து, முழங்காலைக் கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

அவனைக் கண்டதும் ''வா... ரவி'' என்றாள். ''கல்யாணப் பெண்ணை பார்த்துட்டுப் போகலாம்னு வந்தியா?''

''.............''

''மாப்பிள்ளைக்கு என்னைப் புடிக்கலையாம். நான் கறுப்பாம். வேணாம்னுட்டார்.''

சோர்ந்து போனான்.

அதற்குப் பிறகும் கூட நிறைய மாப்பிள்ளைகள் வந்து கொண்டுதான் இருந்தார்கள். ஆனால் ஒவ்வொன்றும் தட்டிக் கொண்டே போயிற்று. கறுப்பு நிறம் அழில்லையா?

ஏதாவது ஒரு சமயத்தில், ''ம்... பார்க்கலாம். இதுக்குன்னு ஒருத்தன் இனிமேலா பொறக்கப் போறான். நேரம் வந்தா எல்லாம் நடக்கும்...'' சித்தப்பா சுவரில் சாய்ந்து கிறீச் கிறீச்சென்று ஆடிக் கொண்டு சொல்லுவார். நிஜ அர்த்தம் மனசுக்குள் இறங்கா விட்டாலும் ஆறுதலான வார்த்தைகள்தான் அவை.

என்ன மாயமோ, மூன்றாம் மாதமே காரியம் கூடி விட்டது. ஈ.பி. மாப்பிள்ளை. பெண்ணை நேரில் பார்த்து விட்டே சம்மதம் சொன்னான்.

வீட்டிற்குப் புதிய களை உண்டாகி விட்டது.

விரித்த ஜமுக்காளம். சிந்திக் கிடந்த பலகாரங்கள். பூ வாசனை. பழத்தட்டு...

''என்ன ரவி....?'' என்றார் சித்தப்பா.

''என்ன சித்தப்பா....''

''மாப்பிள்ளையைப் பார்த்தியா?''

தலையாட்டினாள்.

''நல்லா விசாரிச்சிட்டுத்தான் கூட்டி வந்தேன். உத்தியோகம் இருக்கு. மற்ற வசதியும் உண்டுன்னு தெரியுது. பரவாயில்லையா?''

''ம்......''

''எதுவும் நேரம் ஒத்து வர்றப்பத்தான் நடக்கும். நான் சொல்லலை... இனிமேலா ஒருத்தன் பொறக்கப் போறான்னு? இவனும் தான் பெண்ணைப் பார்த்தான். எப்படி புடிச்சதாம்? அதான் நேரம்ங்கிறது...''

மாப்பிள்ளை கோதுமை நிறம். ஒல்லியும், குண்டும் அல்லாத நடுத்தர உடல்வாகு. அமைதியாகத் தெரிந்தான். இத்தனை பேர் ஒதுக்கிய பெண் இவனுக்கு மட்டும் எப்படி பிடித்ததாம்?

கல்யாணம் வரைக்கும் கேள்வி உறுத்திக் கொண்டே இருந்தது.

வீட்டுக்கு வந்ததும் டீயும், பிஸ்கட்டும் கொண்டு வந்து வைத்தாள் மல்லிகா.

''குழந்தைக்கு ஒண்ணுன்னா மனசே கெட்டுப் போகுது. இன்னிக்கு அவருக்குக் கூட சமைச்சுக் குடுத்து அனுப்பலை. ஹோட்டல்ல சாப்பிடுங்கன்னு சொல்லிட்டேன்.''

ரவி புன்னகை செய்தான்.

''சாப்பிடு... ஆறிடப் போவுது...'' மறுபடியும் எதற்கோ உள்ளே போனாள்.

கல்யாணத்திற்கு ஒரு வாரம் முன்புதான் கடைசியாக மனம் விட்டுப் பேசியது.

'உனக்குச் சம்மதம்தானே மல்லிகா?' என்று கேட்டான்.

'பூர்ண சம்மதம். அந்த மனுஷனைக் கையெடுத்துக் கும்பிடணும்னு இருக்கு. இதான் கடைசி, இதுவும் முடியலைன்னா செத்துப் போகலாம்னு இருந்தேன்.'

'இவருக்கு மட்டும் எப்படி புடிச்சதாம்? ஏதாச்சும் காரணம் இருக்கா?'

''எனக்குத் தெரியாதுப்பா... வேணா பொறு. அடுத்த வாரம் கேட்டுச் சொல்றேன்...' சிரித்தாள். கருமையைத் தாண்டிய பிரகாசமாக இருந்தது அவளது முகம்.

கேட்டிருப்பாளா?

வேலைகளை முடித்துக் கொண்டு மல்லிகா எதிரே வந்து உட்கார்ந்தாள்.

ஊர் விஷயம், நாட்டு விஷயம் என்று பேசினார்கள். கொஞ்சம் பழையது, கொஞ்சம் புதியது என்று தொட்டுக் கொண்டே வளர்ந்தது. இடையிடையே தாம்பத்தியத்தைப் பற்றியும் விசாரித்தான்.

எல்லோரையும் போலவே சராசரித் தனம். லாப நஷ்டம் கொண்ட வாழ்க்கை. அழகில்லை என்பதால் கூடவோ குறையவோ எதுவும் ஏற்பட்டு விடவில்லை.

''அவரு எப்படி?''

''முன் கோபம் ஜாஸ்தி. மத்தபடி ஒரு பிரச்னையும் இல்லை. சம்பளத்தைக் கூட என்கிட்டத்தான் குடுத்துடுவாரு...''

''திருப்தியா இருக்குன்னு சொல்லு.''

''ஆண்டவன் புண்ணியத்துல அப்படித் தான்.''

''உங்கிட்ட இருந்து இதைக் கேக்கறது சந்தோஷமா இருக்கு மல்லிகா.''

'உங்கிட்ட' என்ற வார்த்தை சற்று அழுத்தமாக வெளிப்பட்டிருக்க வேண்டும். அடிபட்ட மாதிரி நிமிர்ந்து பார்த்தாள். ஏதோ சொல்ல வந்த மாதிரியும், மரியாதை கருதி நிறுத்திக் கொண்ட மாதிரியும் இருந்தது. பெரு விரலால் தரையைக் கீறியபடி கொஞ்ச நேரம் யோசித்தாள். திடீரென்று மீண்டும் பேசினாள்.

''கல்யாணத்துக்கு முந்தி நீ ஒரு கேள்வி கேட்டியே ஞாபகம் இருக்கா?''

''ம்ஹூம்...'' ரவி விளங்காததைப் போல தலையசைத்தான்.

''இவருக்கு மட்டும் எப்படி புடிச்சதுன்னு கேட்டே... அப்புறம்தான் எனக்கே கூட தோணிச்சு. பத்து நாள் பொறுத்து அவரு கிட்டயே கேட்டேன். சிரிச்சார். ஏன் உனக்கு என்னன்னு கேட்டார். சத்தியமாச் சொல்றேன். எனக்கு அழுகையே வந்திருச்சு. வாழ்க்கையையே திசை அடிச்ச விஷயத்தை அவ்வளவு சாதாரணமாக் கேட்டா என்ன சொல்றது....?''

''........''

''மறுபடியும் கேட்டேன். அழகாத்தான் இருக்கே. எனக்குப் புடிச்சிருந்தது. அதான் சரின்னேன்னார். அவரொண்ணும் பொய் சொல்லலை.. அப்ப எனக்குத் தோணினது இது. குருவி, கொக்குன்னு இருக்கிற மாதிரி கறுப்பு, சிவப்புங்கிறதும் ஓர் அடையாளம். அம்புட்டுத்தான். ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொண்ணு புடிக்கிற மாதிரி கறுப்பும் ஒருத்தருக்குப் புடிச்சுப் போகுது. மனசுக்கு எது புடிக்குதோ அதெல்லாம்தான் அழகு... பின்ன... அழகுன்னு தனியா ஒண்ணும் இல்லை.''

ரவிக்கு ஏதோ சங்கீதம் கேட்கிற மாதிரி இருந்தது. மனசு இலகுவாகிப் பஞ்சு போல மிதக்க, கண்களை மூடியபடி ரொம்ப நேரம் அவள் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்தான்.

அடுத்த இதழில்......

புறநகர்ப் பகுதியில் கொள்ளைகள்!

— அட்டைப்படக் கட்டுரை.



தேவிபாரடைஸ் 70MM A/C
அபிராமி A/C
அகஸ்தியா 70MM
3 காட்சிகள்
காசி A/C 4 காட்சிகள்
மற்றும் தமிழகமெங்கும்

கமல்ஹாசன்
அளிக்கும்
ராஜ்கமலின்...

அபூர்வ சகோதரர்கள்



சிங்கீதம் சீனிவாசராவ்
இளையராஜா
பஞ்சு அருணாசலம்



ஸ்ரீராம் லெனின் விஜயன் கிரேஸிமோகன் வாலி
தோட்டாதரணி விக்ரம்தர்மா சுந்தரம் ரகுராம் மோனலிசா

ELEGANT

"டீ.வி ஆண்ட்டி பார்க்கிறாங்க..."

விற்பனையாளரின் வேடிக்கை...

oo டி. வி. சேல்ஸ்மேன் ரிமோட் கண்ட்ரோலையும் சேர்த்து வாங்க வற்புறுத்தினார்.

என் நண்பர் "ரிமோட் கண்ட்ரோலையும் சேர்த்து வாங்க வேண்டுமென்றால் என் மனைவியிடம் ஒரு வார்த்தை கேட்க வேண்டும். வீட்டில் எல்லாவற்றையும், என்னையும் அவள்தான் கண்ட்ரோல் பண்ணுகிறாள். பணத்தை ஏன் வீண் செலவு செய்தீர்கள் என்று கேட்டால் அவளுக்குப் பதில் சொல்வது கஷ்டம்" என்றார். உடனே சேல்ஸ்மேன், "சார் வீட்டில் எல்லாவற்றையும் உங்க மனைவி தான் கண்ட்ரோல் பண்ணுகிறார். இந்த டி.வி. ஒன்றாவது ரிமோட் கண்ட்ரோலில் இருக்கட்டுமே" என்று சொல்லி நண்பரை ரிமோட் கண்ட்ரோல் வாங்கச் சம்மதிக்க வைத்து விட்டார்!

— அ. ஆல்பெர்ட், கன்னியாகுமரி.

இதோ ஒரு டி. வி. பேட்டி...

oo பேட்டி காண்பவர்: நீங்கள் கிரானைட் கற்கள் தயாரிக்கும் தொழிற் சாலையில் வேலை பார்க்கிறீர்கள். இல்லையா?

பேட்டி அளிப்பவர்: ஆம். நான் கிரானைட் கற்கள் தயாரிக்கும் தொழிற் சாலையில் வேலை பார்க்கிறேன்.

பே. காண்பவர்: கிரானைட் கற்களில் பல நிறங்கள் உண்டு, இல்லையா?

பே. அளிப்பவர்: ஆம். கிரானைட் கற்களில் பல நிறங்கள் உண்டு. உம்...

பே. காண்பவர்: இருந்தாலும் கறுப்பு நிறத்திற்கு அதிகம் மதிப்பு உண்டு என்று சொல்ல வருகிறீர்கள். இல்லையா?



பே. அளிப்பவர்: ஆம். கறுப்பு நிறத்திற்கு அதிகம் மதிப்பு உண்டு.

பே. காண்பவர்: கற்களைத் தோண்டியெடுக்கும் செலவை விடப் பாலிஷ் போடுவதற்கு இரு மடங்கு செலவாகும் என்று சொல்லுகிறீர்கள். அப்படித்தானே?

பே. அளிப்பவர்: ஆம், பாலிஷ் போடுவதற்கு இரு மடங்கு செலவாகும். அது...

பே. காண்பவர்: அதாவது கிரானைட் கற்கள் பெரும்பாலும் ஜப்பானுக்குத்தான் ஏற்றுமதியாகின்றது என்கிறீர்கள் இல்லையா?

பே. அளிப்பவர்: ஆம், பெரும்பாலும் கிரானைட் கற்கள் ஜப்பானுக்குத்தான் ஏற்றுமதியாகின்றது.

பே. காண்பவர்: நன்றி. இதுவரை கிரானைட் கற்களைத் தயாரிப்பது பற்றியும், அவற்றைப் பாலிஷ் போடும் முறைகள் பற்றியும், தொழில் நுணுக்கங்கள் பற்றி மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துரைத்தீர்கள். நன்றி. வணக்கம்.

— பாவை, மதுரை — 20.

"தென்றாலே என்னாத் தொடு..."

oo அன்று, டி.வி.யில் செய்தி வாசிக்கும் பெண் "இன்று, தமிழ்த் திரைப்படம் தென்றாலே என்னாத் தொடு ஒளிபரப்பாகும்..." என்றாள் கன்னடத்தில்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த சிறுமி பாலு என்னிடம், "பாருங்க மாமா தென்றலே என்னைத் தொடுங்கறதை எப்படிச் சொல்றா?" என்று சிரித்தாள்.

"அவள் கன்னடம் பேசுபவள். சில சமயம் தமிழ் வார்த்தை சரியாக வராது. நீ கூட எத்தனையோ தடவை கன்னடத்தைத் தப்புத் தப்பாகப் பேசவில்லையா?" என்றேன் நான்.

"ஆனா, நான் டி. வி. யில போயா, தப்புத் தப்பாகப் பேசுகிறேன்?" என்று கேட்டு மேலும் சிரித்தாள் அந்தப் பொல்லாத சிறு பெண்.

— என். ஆர். ஆர். லிங்கம், பெங்களூர் — 560 010.



சினிமா வர்ற மாதிரி செய்யுங்க...

oo டி.வி. ரிப்பேர் செய்பவர் வந்து சரி செய்து கொண்டிருந்தார். அப்போது எங்கள் பாட்டி, நல்லாப் பார்த்து ரிப்பேர் பண்ணுங்க... எப்பப் பார்த்தாலும் விளம்பரமே வருது. நல்ல சினிமாப் படமா வர்ற



மாதிரி ரிப்பேர் பண்ணுங்க என்றாரே பார்க்கலாம்!

— வி. இராஜேந்திரன், கொறுங்கை.

டீ. வி. ஆன்ட்டி பார்க்கிறாங்க...

OO ஒருநாள் என் மாமாவின் குழந்தை குளித்து விட்டு டிரஸ் செய்து கொள்ள அடம்பிடித்து வீட்டையே கலக்கிக் கொண்டிருந்தான். அப்போது நானும் எனது மாமாவும் டீ.வி. நியூஸ் பார்த்துக் கொண்டிருந்தோம். நான் சமயோசிதமாக, ''டேய் அங்கே பாருடா! நியூஸ் வாசிக்கற ஆன்ட்டி உன்னையே பார்த்துக்கிட்டிருக்காங்க! உனக்கு வெட்கமில்லையா?'' என்று கூறிச் சிரித்தேன். பிறகு பார்க்க வேண்டுமே? கைகளைப் பொத்திக் கொண்டே உள்ளே ஓடிச் சென்று டிரஸ் செய்து கொண்டு விட்டான். அன்றிலிருந்து அவன் எப்பொழுது அடம் பிடித்தாலும் சரி, டீ.வி. ஆன்ட்டியை கூப்பிடறேன் என்று டீ.வி. பக்கம் போனால் போதும், குறும்பு பறந்து விடும்.

— சு. இளங்கோவன், முகாசிம்சம்பட்டி.

ஒருபுறம் பாராட்டு;
மறுபுறம் வேதனை

OO தேசிய நிகழ்ச்சியில், ஒவ்வொரு ஞாயிறு இரவும் 'ஷுர் ஷுர் சங்கீத்' என்கிற வித்தியாசமான இசைப் போட்டி ஒளிபரப்பாகிறது. போட்டியில் பங்கு பெறுவோர், தன் தாய் பாஷையல்லாத, வேறு ஏதாவது இந்திய பாஷையில் பாட வேண்டும் என்கிற நிபந்தனை சுவையாகவும், வரவேற்கத்தக்கதாகவும் இருக்கிறது.

அதே சமயம், தேசிய ஒருமைப்பாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கும் நோக்கத்துடன் அமைந்துள்ள இந் நிகழ்ச்சியைத் தொகுத்து அளிப்பவர்கள் முழுக்க முழுக்க ஹிந்தியிலேயே பேசி, அறிமுகம் செய்து, அறிவிக்கிறார்கள். இந்த முரண்பாடு, வேடிக்கை கலந்த வேதனையாக இருக்கிறது.

— ஆர். ராஜாராம், சென்னை — 28.

'ஐ அண்ட் கோ;'
'மை அண்ட் கோ'

OO இன்றைய எதிர்வலி நிகழ்ச்சியில் கடிதங்களை வாசிப்பவர் கல்யாணி — பதிலளிப்பவர் கல்யாணம்.

கல்யாணி: கும்மிடிப்பூண்டி குமணன் எழுதியிருக்கிறார்... ''நீங்கள் சென்ற வாரம் விளம்பரதாரர் நிகழ்ச்சியில் ஒளிபரப்பிய 'உனக்கு வலிச்சா எனக்கென்ன?' நாடகம் என்னைக் கேலி செய்வது போல் இருந்தது. நிகழ்ச்சியைப் பார்த்ததில் கண்வலிதான் மிச்சம்.

கல்யாணம்: கண் வலி மருந்து தயாரிப்பாளர்களான 'ஐ அண்ட் கோ, மை அண்ட் கோ' அவர்களது நிகழ்ச்சிதான் அது. நிகழ்ச்சியின் முயற்சி வீண் போகவில்லை...ம் அடுத்தது.

கல்யாணி: எருவாஞ்சேரி, எருமையப்பன் கடிதம். சென்ற வாரத்தில் வெள்ளியன்று தெரிந்த ஒளியும் ஒலியும் நிகழ்ச்சியில் இரண்டு மூன்று விளம்பரங்களுக்காக அறுபதுக்கும் மேலான திரைப் பாடல்கள் காண்பித்தீர்கள். ஒளி வந்தால் ஒலியில்லை. ஒலி வந்தால் ஒளியில்லை. இரண்டும் சேர்ந்து தெரிந்த போது ''தடங்கலுக்கு வருந்துகிறோம்'' என்று ஒளிபரப்பாகியது. மிக்க நன்றி.

கல்யாணம்: நீங்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். ஒளிபரப்பானது அறுபது விளம்பரங்களும், இரண்டு, மூன்று பாடல்களுமே. தடங்கலுக்கு வருந்துகிறோம் என்பது ஒரு படத்தின் பெயர். இனிமேல் ஒளியும் ஒலியும் இணைந்து வருவதற்கு முயற்சி செய்கிறோம்.... ம்....

கல்யாணி: மகிழ்வரசி, மரசாக்கமங்கலம்... நீங்கள் ஒளிபரப்பிய மனைவி ஆட்சி (மனைமாட்சி) நிகழ்ச்சியில், ரவா ஊறுகாய், எலுமிச்சங்காய் உப்புமா, உருளைக் கிழங்கு ரசம், கோழிக் கொத்சு மிகவும் அற்புதம். இவற்றைத் தயாரித்த மறுநாள் முதல் என் கணவரைக் காணவில்லை. பெயர்: அற்புதம், உயரம்: 165 செ.மீ., நிறம்: சிவப்புக் கலந்த பழுப்பு, காக்கி நிறச் சட்டையும், வெள்ளை அரை நிக்கரும் அணிந்திருப்பார். தகவல் தெரிவி....

கல்யாணம்: இப்படி காணாமல் போனவர் பற்றிய அறிவிப்பு எதிர் வலியில் சொல்ல முடியாது. தனியாக எழுதவும்.

— பி. மோகன் சங்கர், நாகர்கோவில்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 260/—; விமானத் தபால் ரூ. 680/. ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



எங்களது பிரத்தியேக ஆடையலங்கார அங்காடி கோலம், 843, அண்ணா சாலை, சென்னை — 2-க்கு விஜயம் செய்யுங்கள்.

REGISTERED No. M. 4362
Registered as a Newspaper in Sri Lanka